
# அமிர்த கங்கை

தை 1986



லை:
ா 6/-



தங்க வளையாடும் புதுப்பானை பொங்கும்
திங்கள் முகம்பூக்கும்; தீவணங்கும் சூரியனை
எங்க ளுயிர்மான உரிமைகளின் காவலலேரே
மங்கள ம்பாடிப் படைத்தோம் உன்றனுக்கே

— கவிஞர் சத்யா.

# மங்களப் பொங்கல் பொங்குங்களேன்!

— அகிலா குணராஜா

மங்களப் பொங்கல் பொங்கிடலாம்
மங்கையர் இணைந்து வாருங்களேன்
தங்கும் மனையில் இன்பங்கொழிக்க
தைமகள் வரவைப் பாருங்களேன்.

●

வெக்கிச் சிரிக்கும் நங்கையரே
வன்மை ஒழிய வேண்டுங்களேன்
சிக்கித் தவிக்கும் உள்ளங்களை
சிறையில் மீட்க பொங்குங்களேன்

●

புதுமை நிறைந்த வாழ்வினுக்கு
புதுப்பெண் தையினை நாடுங்களேன்
வதுவை நாடும் வனிதையரின்
வாழ்க்கை செழிக்க பொங்குங்களேன்.

சாவைத் துணிந்து எதிர்நோக்கும்
சங்கத் தமிழரைப் பாடுங்களேன்
நோவை உணரா நீசர்களின்
நாச செயலைச் சாடுங்களேன்.

●

வீரம் மிக்க காளையரின்
வெற்றித் துடிப்பைப் போற்றுங்களேன்
தீரம் மிகுந்த செய்கைகளை
தூய தமிழில் செப்புங்களேன்

●

கொடிய ராஜ்யம் சிதறடிக்க
குடியின் பிணைப்பை நாடுங்களேன்.
விடிவு எமக்கு வேண்டுமென்று
விளக்கு ஏற்றி பொங்குங்களேன்.

●

இனமும் சனமும் ஒற்றுமையாய்
இணைந்து வாழ வாழ்த்துங்களேன்
மனதில் நிறைவும் நிம்மதியும்
முகிழ பொங்கல் பொங்குங்களேன்.

ஒளிகால் எழிலே உயரா தவனே
விளிசெந் தழலாய் வெந்தய ராதே
இழிவாய் வானில் இறங்கிய நிலையை
விழுந்தான் எனவே வெறிதே யிருப்பர்.
எழுவாய் வானில் எழுந்தால் அவரே
வீழியும் சொருக வாயிளிப் பாரே
பழிபா தகஞ்செய் புலைமா னிடரே
இழிந்தார் இவரின் இயல்பே இதுவே
களிபே ருவகை கொள்வர் தாழ்ந்தால்.
செழிப்பாய் வாழ்ந்தால் சிறுசெய் கையராய்
மொழிகேட் டிருப்பர் முறுவல் புரிவர்.
எழிலாய் எழுவாய் எழுந்தாற் பணிவார்.

— ரகுபரன்



# வாழ்த்தும் ○○○

கங்கை வருக அமிர்தமொடு
கலந்து வருக செழிப்பாக
திங்கள் தோறும் செழித்து
சிறந்தோர் படைத்திடும் நல்
பங்கமில்லாக் கட்டுரைகள்
படைப்பாற் சிறந்த கவிதையொடு
பொங்கி வருக பொங்கலெனப்
பொலிந்து வருக இனிப்பாக.

யாழ்ப்பாணம், —கவிஞர் சோதி

மண்ணின் முகடாம் மாமலை இமய மேறி
மாமுனி யகத்தின் முகர்ந்த கலம் புகுந்து
தண்டமிழ் செழிக்கத் தூயநற் புனிதையாய்த்
தேமதுரத் தென்னகஞ் சேர்ந்தகங்கையே
பண்டைப் புகழோம்பும் பூமாதின்
குழவியாம்
பேரீழத் தமிழகத்தின் பேரருள் நீங்கநீ
விண்ணி னமிர்தமாய் விங்குபுகழ்
கொண்டிங்கு
வாழ்ந்தோங் கவாராய்! வாழி!
பல்லாண்டே!

தெல்லிப்பழை. —கவிஞர் அநுராதன்

மூடக் கொள்கையை மோதி உடைத்து-
அமிர்த
கங்கை பெருகட்டும்
ஆதனந் தேடும் அரக்கத் தனத்தை
அடியோ டொழிக்கட்டும்
சீதனம் கேட்கும் சிறுமதியினரை
சிதற அடிக்கட்டும்
சாதி ஒழிய நீதிநிலைக்க - அமிர்த
கங்கை பாயட்டும்.

வவுனியா. சி. சதாசிவம்

பெருகிவரும் ஈழத்து
இலக்கிய கங்கையிலே
சங்கமிக்க ஊற்றெடுக்கும்
கங்கை ஒன்று!
அது அமிர்த கங்கை

கிளிநொச்சி. ராஜபூபதி

கங்கையே அமிர்தமெனப் பொங்கிவா
அநியாயத்தை வாள்கொண்டு அறுக்கவா
அக்கிரமத்தை வேரோடு சாய்க்கவா
அதர்மத்தைப் பூண்டோடு ஒழிக்கவா
நீதியை நிலை நாட்ட வா!
தர்மத்தைக் காக்க வா!

யாழ்ப்பாணம். — கிருஷ்ணு

அமிர்த கங்கை சாவா மருந்தையுண்டிருப்பதால் என்றும் வற்ருத வளமான ஜீவ நதியாய்ப் பொழிந்து நம் இலக்கிய ஆர்வலர்களின் இலக்கிய வேட்கையைத் தணிக்க எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் வேண்டும் என வேண்டுகிறேன். இந்த நம்பிக்கை எனக்குண்டு. ஏனெனில் என் இனிய நண்பரும் ஆன்மீக உணர்வும், யதார்த்த விழிப்பும் கொண்ட நல்ல சிந்தனுவாதியுமான நீங்கள் 'அமிர்த கங்கை'யைப் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். அவள் வளமுடன் வாழ்வாள்'

மயிலிட்டி தெற்கு —அநு. வை. நாகராசன்

பத்திரிகைத் துறையில் மட்டுமல்லாது பிரசுரத் துறையின் நுணுக்கங்களையும் நன்கறிந்தவர் செம்பியன் செல்வன். அவரது கைவண்ணத்தில்உருவாகும். 'அமிர்தகங்கை' இலக்கியச் சுவைஞர்களுக்கு நல்விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

29-12-85 —ஈழநாடு

# ○○○ வரவேற்பும்

# அமிர்த கங்கையின் இலக்கிய யாத்திரை

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே, தன்மென்பாதம் முத்திரை பொறிக்க தன் அமிர்த வாரிதியை எண்டிசையும் பரப்பி 'உலகெலாம் பரவும் வகை' செய்து கொண்டு உங்கள் கரங்களை வந்தடைந்திருக்கிருள் அமிர்த கங்கை.

ஈழத்தில் இலக்கிய சஞ்சிகைகளின் தேவை பற்றிய சிந்தனையின் வெளிப்பாடே அமிர்தகங்கையின் வருகை.

காலத்திற்குக் காலம் பற்பல இலக்கியப் பத்திரிகைகள் தோன்றியும் மறைந்து மிருக்கலாம். அவ்வாறு தோன்றி மறைந்தவைகள் அனைத்துமே ''சிற்றேடுகள்'' வகையைச் சார்ந்தனவென்ற உண்மையைப் பலரும் மறந்துவிடுகிருர்கள்.

தாபன உறுதியோ பொருளாதார வசதியோ, விநியோக ஆற்றலோ அற்ற நிலையில், காலத்தின் தேவையை ஒட்டிய அத்தியாவசிய சிந்தனைகளை, உண்மைகளை மக்கள் முன் வைக்க வேண்டும் என்ற துடிப்பில் தோன்றுபவை. சிந்தனைத் தெளிவும், எழுத்தாற்றலும் கொண்டவர்களால் ஆரம்பிக்கப்பட்டவை. சிற்றேடுகளின் நோக்கமே வர்த்தகம் அல்ல. கருத்துப் பரிமாற்றம் மட்டுமே. சமூக விழிப்பின் வெளிப்பாடு. எனவே, அவர்களின் தேவை, ஆற்றல், என்பனவற்றிற்கு ஏற்பவே அவற்றின் ஆயுள் நீடிக்கும். இந்த உண்மைகளுக்கு ஈழத்தில் மட்டுமல்லாது தமிழ்நாட்டிலும் சிறந்த சான்றுகள் உள்ளன. நடை, கசடதபற, பிரக்ஞை போன்ற ஆற்றல் வாய்ந்த சிறந்த சிற்றேடுகள் மறைந்தமைக்குக் காரணம் பொருளாதார வசதிக்குறைவு மட்டுமன்று. நடை பத்திரிகை தன் கடைசி இதழில் பின்வருமாறு எழுதியது.

'எங்கள் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப விடயங்களைப் பெற முடியவில்லை. வெறும் பயனற்ற பக்கங்களை அச்சிட்டுக் கொண்டிருக்க நாம் விரும்பவில்லை. எனவே பத்திரிகை வெளிவருவது நிறுத்தப்படுகிறது,'

ஈழத்தில் சிற்றேடுகள் இலக்கிய நோக்கிற்காக மட்டுமின்றி, அரசியல் சார்பாகவும் வெளியாகின்றன. இந்த அரசியல் சார்பு என்பது இலக்கியத்தை விரும்பியோ விரும்பாமலோ கூறு போடுகின்றது. இதனுல் மக்கள் இத்தகைய பத்திரிகைககளை 'கட்சி'யின் வெளியீடாக-பிரச்சாரப் பத்திரிகையாகப் பார்க்கும் - மனோபாவத்தைக் கொண்டுள்ளனர். வேறுசில சிற்றேடுகள் காலத்திற்குக் காலம் அரசியல் சார்புகளையும் சித்தாந்தங்களையும் அடிக்கடி மாற்றிக் கொள்வதனுல் - சிலசமயம் ஆசிரியபீடங்களே மாறுவதனுல் வாசகர்கள் பெரும் திணறலுக்கு ஆளாகின்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக எழுத்தாளர்கள் எழுத்தாளர்களுக்காகத் தயாரிக்கும் ஏடுகளாகவும், சில குறிப்பிட்ட விமர்சகர்களின் கவனத்தை— இது கோபத்தையோ, அல்லது சந்தோஷத்தையோ ஊட்டுவதாக ஈர்க்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவையாகவும் விளங்குகின்றன.

மொத்தத்தில் வெகுஜன தொடர்புச் சாதனத்தில் பத்திரிகைகளின் நிலை, பொது மக்களின் பங்கு எவ்வளவு என்பதனையும் மக்களின் உளவியற் பண்புகளையும், வாசிப்பு உளவியலையும் புரிந்து கொள்ளாதவர்களாகவும், அவர்களை எப்படி அணுக வேண்டும்

என்ற அறிவோ, அவர்களைத் தமது ஏடுகள் சென்றடைய வேண்டுமென்ற அவாவோ அற்றவர்களாகவும் விளங்கினுர்கள்.

பத்திரிகைத் துறைக்கும் எழுத்துத் துறைக்குமிடையிலுள்ள வேறுபாட்டை உணராதவர்களாகவும் இயங்கிவந்துள்ளனர்.

ஆகவே மறைந்த ஏடுகளும், மறையாது வரும் பத்திரிகைகளும் எமக்குப் பல போதங்களை வழங்குகின்றன. தவிர்க்கமுடியாத சமூகத் தேவையொன்றின் தோல்விக்கான காரணங்களைத் தவிர்க்கும்படி எமக்குக் கட்டளையிடுகின்றன.

- பத்திரிகை தொடங்கும் கால அரசியல், பொருளாதார சமூக விழிப்பு எழுச்சிக்கான சூழல்களையும் மக்களின் உளவியற் பண்புகளையும் சரியாகப் புரிந்து கொண்டு அவற்றிடையே ஏற்றதொரு பொருத்தப்பாட்டினை நெறிப்படுத்துவது.
- சிறந்ததான உலகளாவிய தத்துவார்த்தங்களை அப்படியே மக்கள் முன் வைக்காது அவர்தம் வாழ்க்கைநெறி, மரபு, விழுமியங்கட்கு ஏற்ப சீராக்கம் செய்தல்.
- இலக்கியப் போக்குகளில் காணப்படும்-பல்வேறு நெறிமுறைகளிடையே சரியான புரிந்து கொள்ளுதலை வழங்குதல்.
- பத்திரிகை தொடங்குமுன்பே, தீர்க்கதரிசனத்துடன் அதன் தேவை, போக்குவசதிகள் என்பனவற்றைப் பற்றிச் சிந்தித்தல் விடயங்களையும் திரட்டிக் கொள்ளல், அதற்கான முயற்சியிலீடுபடல்.
- தமது படைப்புக்கள் மூலமே ஒரு பத்திரிகையின் இலக்கியக் கொள்கையை எழுத்தாளர்களே உருவாக்குதல்.
- ஜனரஞ்சகம் என்ற பெயரில் பாரிய வாசகர் கூட்டத்தையே விலக்குதலைத் தவிர்த்தல்.
- பத்திரிகையில் எழுதும் எழுத்தாளர்களையே வாசகர்களாகவும், விமர்சகர்களாகவும் கொள்வதைத் தவிர்த்தல்.
- வாசகர்களைத் தரம் வாரியாகப் பிரித்து ஒதுக்குதலைத் தவிர்த்தல்.
- வாசகர்களை விட தாம் மேம்பட்டவர்கள் என்ற அதீத உயர்வு மனப்பான்மையைத் தவிர்த்தல்.

இந்தப் பின்னணியில் 'அமிர்த கங்கை' தனது இலக்கிய யாத்திரையைத் தொடங்குகிறது.

செம்பியன் செல்வன்.

இலக்கியத்தில் புரிதல், எளிமை பற்றி
லா. ச. ராமாமிர்தத்தின் கருத்து — பக்கம் 13



# எழுவைதீவு முருகன் எழுந்து வருகிறான்



1977- ஆம் ஆண்டின் ஓர் நாள்—

அமைதியான உதய வேளை. சூரியனின் கதிரொளி தென்படாமலே மண் வெளுக்கத் தொடங்கியிருந்தது. கடல் அமைதியாக மென்னலைகளில் உறங்கிக் கொண்டிருக்கிறது. கருநிற நீர் கரும் நீலமாகி அழகுப் பச்சைக்கு மாறிக்கொண்டிருக்கிறது.

நாங்கள் பயணம் செய்யும் மோட்டார் படகு, ஊர்காவற்றுறையிலிருந்து, நேர் மேற்காக கடலைத் துயிலெழுப்பா வண்ணம் "கட கட" வென மெலிதாக சப்தித்தவாறு மேல் நீரை ஏர்முனையாகக் கிழித்தவாறு எழுவைதீவை நோக்கி விரைகிறது.

மெல்லிய காற்று வீசுகிறது. அதில் தண்மையும், இளஞ்சூடும் கலந்து அர்த்த நாரீஸ்வமாக, மேனியைப் புத்துணர்வு கொள்ள வைக்கிறது. உடலும் உள்ளமும், காலமும் இடமும் அற்ற மோனலயிப்பைத் தூண்டுகிறது. அண்மையில் தெரிந்த கடற் கோட்டை மெல்ல மெல்ல விலகி விலகிச் சென்று புள்ளியாகி மறைகிறது.

படகில் நான், எனது குடும்பத்தினர், என்துணையில் உடன் வரும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்கள்... ஆசிரியைகள், பெற்றோர் துணையுடன் வரும் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்... எழுவைதீவு வாசிகள் சிலர்... அங்கிருந்து தென்மேற்காகப் பயணிக்க வேண்டிய அனலைதீவு வாசிகள் சிலர்.

முன் அணியத்தில் நின்றவாறு அநாயாசமாகச் சுக்கானைப்பிடித்துக் கொண்டு வெள்ளை வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு வெறும் மேலாக முறுக்கேறிய கறுப்பான நெடிய உருவம். வயது ஐம்பது இருக்கலாம்.

—"தம்பியவைகள் எழுவைதீவு முருகனைப் பார்க்கவோ?"- என்கிறார். அவரை நோக்கி மெல்ல நகர்கிறோம்.

—"இப்ப ஒவ்வொரு நாளும் ஈழநாடு பத்திரிகையில் வாறதெல்லாம் உண்மையா?..." என்கிறோம்.

கடந்த சில நாட்களாக தினசரிப் பத்திரிகைகளின் தலையாய செய்தியே முருகனைப் பற்றியதுதான். நடுப்பக்கக் கட்டுரையும் அவரின் அற்புதச் செயல் பற்றியதுதான்.

நாமறிந்தளவில், முருகன் நாளாந்த நடப்புகளின் செய்தி முக்கியத்தனானது இதுவே முதற்றடவை.

"அர்த்த ஜாமப் பூஜையின் பின் தாளிட்ட கர்ப்பக்கிருகத்தினுள்ளே பேச்சுக்குரல். நடமாடும் சப்தம்'

"முருகன் அர்ச்சகருடன் பேசினார்."

"முருகன் பத்தர்களுக்குத் தரிசனம்!"

"வள்ளி தெய்வானையுடன் மயில்வாகனனாகக் காட்சி!"

"அன்னை மரிகையில் பாலயேசுவாகக் காட்சி!..."

"அன்னை வேளாங்கண்ணி மாதாவாகக் காட்சி!..."

'பால குமாரனுகக் காட்சி''

''கல்யாண சுந்தரனுகக் காட்சி...''

''பழனியாண்டியாகக் காட்சி...'

— கட்டுரைகளைப் படிக்கும் தோறும், செய்திகளைக் கேட்கும் தோறும் கண்ணில் நீர் மல்கின்றன. மனம் நெக்கு நெக்காக உருகி வழிகிறது. மயிர்க் கண்களில் கூச்ச லெடுக்கின்றது. கரங்கள் தலைமேல் குவிகின் றன. எல்லாவற்றிற்கும்மேலாக நாம் இது வரை தெரிந்தும் தெரியாமலும் செய்த செய்து வந்த, செய்து வருகின்ற பாவச் செயல்களை எண்ணி மனதில் இன்னதென்ற றியாத பீதி பரவுகிறது. பயபக்தி என்பது இதுதானே?

— தமிழீழம் வாழ் சைவமக்களை உலுக் கப் போதுமான செய்திகள். அவர்களின் ஆன்மீக வாழ்வு புடம்போடப்பட,நம்பிக்கை யூற்று பொங்கிப் பிரவாகிக்க கந்தனின் தரி சனம் ஒரு வரப்பிரசாதம். கந்தப்புராண கலாசாரத்தில் ஊறித்திளைத்து அதனையே ஒரு வாழ்க்கை முறையாகக் கொண்டு கந் தனின் தத்துவம் மேலோங்கப் பெற்ற வட பகுதி மக்கள்— சிறப்பாக யாழ்ப்பாண சைவ சமயிகள் ''ஹரா... ஹர சண்முகா சரவண பவ'' எனக் கோஷிக்கின்றனர்.

எல்லோரிடமும் 'என்னப்பன் முருகனைப் பார்த்துவிட வேண்டும். அவன் என்ன சொல்கின்றான்'- என்று கேட்டுவிட வேண் டுமென்ற துடிப்பே மேலோங்குகிறது.

ஒவ்வொருவருக்கும் கந்தனுக்குதரிசனம் கிடைக்கக் கூடிய தகுதி இருக்கிறதா? அதற் குரிய பக்குவம் கைவரப் பெற்றவர்களா? — என்று சிந்திக்கத் தோன்றவில்லை. தோன்றவும்மாட்டாது. ஏனென்றால்— முரு கன் எங்கள் தெய்வம். முருகன் எங்கள் வீட்டுக்குழந்தை. முருகன் எங்கள் குமரன். முருகன் எங்கள் துணைவன். முருகன் எங் கள் ஞானசிரியன். முருகன் எங்கள் சொத்து. முருகன் எங்கள் மொழி... உணர்வு... கலை...

எங்களையே கூர்ந்து பார்த்துக் கொண் டிருந்த அவர் எங்கள் சிந்தனையைக் கலைக் கின்றார்.

—''உண்மையில்லாட்டி பத்திரிகை யில... அதுவும் ஒவ்வொரு நாளும் போடு வினமோ? உவ்வளவு சனமும் நாளாந்தம் அள்ளுப்படுமோ?... இதுக்கு முந்தி நாளுக்கு ஒரு தடவைதான் படகுப் போக்குவரத்து .. இப்ப அஞ்சாறு தடவ நடக்குது ... கன பேர் எழுவைதீவு என்ற பெயரையே இப்பதான் கேள்விப்படுகினம்... ''

—எங்கள் மனம் எங்களை அறியாமல் ஆமோதிக்கிறது. உண்மையின் சாட்சிகளாக நாங்களே இருக்கிறோம். அவர் பேசிக் கொண்டு போகிறார்.

—''முருகன்ர எண்ணத்தை யார் அறி வார். இந்தச் சின்னஞ்சிறு தீவில .. இந்தச் சிறிய கோவிலில வந்து என்னென்ன திரு விளையாடல் எல்லாம் நடத்துறார்? அவற்ற மாளிகை ... அரண்மனையான யாழ்ப்பாண நல்லூர் கந்தன் ஆலயத்தில் தன் திருவிளை யாட்டை நடத்தாமல் இங்க வந்தது யார் செய்த புண்ணியம் ?அதுவும் இருபத்தொரு குடும்பங்கள் மட்டுமே வாழுற தீவு . அதில் பதினேழு குடும்பங்கள் கத்தோலிக்க மதத் தைச் சார்ந்தவை ..''

—''அவையள் இந்த அற்புதத்தைப் பற்றி என்ன சொல்லுகினம்?...''

—''அவையளுக்கும் பெருத்த சந்தோ ஷம். முருகன் சன்னிதியில் மேரியைக் கண் டோம். சூசையைக் கண்டோம் தேவகுமா ரனைக் கண்டோம் எண்டு பூசை வேளைக்கு அங்கே வந்து குழுமிவிடுகிறார்கள் ..''

அருகிலிருந்த உயர்தர வகுப்பு மாண வன் கேட்கிறான்: ''நீங்கள் போய்ப் பாத்த னீங்களோ?... உங்கட கண்ணால கண்ட னீங்களே?

—'இத்தனை வயசாச்சு உதுகளைப் போய்ப் பாக்காமல் விடுவனே? அதுவும் பக் கத்தில இருந்து கொண்டு ..'

—'உங்களின்ர அனுபவம் என்ன? நீங் கள் என்ன மாதிரி முருகனைக் கண்டியள்?'

—'முருகன் குழந்தையா தவண்டு வாற மாதிரிக் கண்டன்?

—'அப்புவுக்கு குழந்தையளில ஆசை போல... அப்புவுக்குக் குழந்தையளில்

லேயோ? '- என் வித்துவத்தைக் காட்டுவ தாக உள்ளூர நினைப்பு.

—'தம்பி நான் பேரப்பிள்ளை பத்துப் பேரைக் கண்டவன். நானும் பொடியள் ஏழுக்கும்' நாலு பொடிச்சிகளுக்கும் தேப் பன். எனக்கும் உன்ர கேள்வி விளங்குது ..'

'வேண்டும். வேண்டும். நல்லா வேண்டும்' —என்னையே கடிந்து கொள்கிறேன். மாணவன் என்முகத்தைப் பரிதாபமாகப் பார்க்கிருன்.

மகளிர் கல்லூரி மாணவி திடீரெனக் குரல் கொடுக்கிருள். ''அது எப்படி அப்பு. முருகன் நேராக வாருர். தவழுகிருர் என் ருல் மற்றுக்களும் உங்களோட சேர்ந்து அதைக் கண்டவையே?'

—'அதுதான் பிள்ளை அற்புதம். அதே நேரத்தில் அவை வேறு மாதிரி கண்டிருக்கி னம். சிலர் ஒண்டுமே காணவும் இல்லை. அவை இதை நம்புகினம் இல்லை ..'

—மாணவி சிரிக்கிருள். 'அங்கதான் விச யம் இருக்கு. உச்சிப்பொழுது பூசைவேளை யிலதான இப்படி நடக் குது, மத்தியானம் கடும் வெயில் தலைச்சுத்து...... கண்மயக்கம்... ஏதாவது ஒன்றின் நிழலாட்டம்..... தீபாராதனையில் இப்படி நிகழலாம்...' - அவளுடன் வந்த மாணவிகள் அட்டகாசமாகச் சிரிக் கின்றனர்.

## செம்பியன் செல்வன்

'இப்பத்தப்பிள்ளையளுக்கு எதிலதான் நம்பிக்கை. எல்லாத்தையும் காரணகாரியத் தோட பாக்குதுகள். இதுகளுக்கு அப்பாற் பட்ட விசயங்களும் இருக்கெண்டு தெரியா ததுகள். அல்லது அறிவால் வகுக்கப்படாத காரணகாரியங்களும் இருக்கெண்டு புரியா ததுகள்?— அப்பு புரியா மொழியால்' அர்த் தத்தில் திடீரென்று பேசுவதாகப்பட அவரை நிமிர்ந்து பார்க்கிறேன். இப்போது அவர் கவனம் சுக்கானில் தனித்திருந்தது.

'உங்களுக்கு இதிலெல்லாம் நம்பிக்கை யில்லையா?' —மாணவியைக் கேட்கிறேன். இல்லை என்பதனைப் பெருமையுடன் தலை யசைத்து தோழியரைப் பார்க்கிருள்.

'பிரெண்ட்ஸ் எல்லோரும் வெளிக்கிட் டினம். நல்ல பிக்னிக்' பேசிக்கொண்டிருக் கும் பொழுது திடீரெனக் குரல் கேட்டது.

'பிள்ளையள் கவனம். படகை அணைக்கப் போறம். தீவு வந்திட்டுது.'

கரையில் குதிக்கிருேம். எங்கும் பனங் கூடல் தலைவகிடு ஒன்று வளைந்து வளைந்து எங்கோ சென்று மறைகிறது. தூரத்தே தென்னஞ்சோலைகள் சிதறித் தெரிகின்றன. இடையிடையே சிறு சிறு குடிசைகளும் ஒரிரு ஒட்டு வீடுகளும் தெரிய கோவிலை நோக்கி நடக்கிருேம்.

'உச்சிக்காலப் பூசை முடிய இரண்டு மணிக்கு வருவம். அதற்குள் திருப்பி விடுங் கள். இல்லாவிட்டால் பிறகு நாளைக்குத் தான் படகு சேவிஸ்..'— படகு அனலை தீவை நோக்கி விரைகிறது.

மத்தியான பூசைக்கு நேரமிருக்கிறது. கோவில் கிணற்றடியில் கைகால் அலம்பி விட்டு கோயிலைச் சுற்றிப் பார்க்கிருேம். எங்களுக்கு முன்பே வந்துவிட்டவர்களும் நாலைந்து தற்காலிக கடைகளும் சேர்ந்து சிறுகோவில்களில் உற்சவ காலங்களை நினைவூட்டுகின் றன.

சுருவில் சண்முகத்தின் உபயத்தில் மணிக்கூண்டு கோபுரம் எழுந்திருக்கிறது. சிறு கர்ப்பக்கிருகமும், பலிபீட மண்டபமும் கொண்ட உள்ளூர் முருகன், பிள்ளையார் கோயில் போன்ற அமைப்பு. ஐந்து நிமிடங் களில் கோவிலைச் சுற்றிவர முடிகிறது. பார்க்க-பொழுது போக்க முடியாத சின் னக் கோயில் உள்ளே முருகன் வேல் வடி வில் இருப்பதாகக் கூறிக்கொண்டார்கள்.

காலையில் வெறும் வயிற்றுடன் புறப்பட் டதும், பஸ் பயணம், கடல் பயணம், பொழு தும் மதியத்தை நெருங்கிக் கொண்டிருந் தமையும் எல்லோரிடம் அகோரப் பசியைக் கிளப்பிவிட்டிருந்தது. பனை நிழலில் - வன போசனம் நடந்து முடிய உச்சிக்காலப் பூசைக்கு நேரமாகிவிட்டது. கோயிலை நோக்கி நடந்தோம். அங்கு ஒரே கூட்டம். ஒருபுறம் பெண்களும், மறுபுறம் ஆண்

களுமாக ஒரே நெரிசல் கண்கள் மட்டும் கர்ப்பக்கிருகவாசலில் உடல் எப்படியோ நசுங்கி கைகால்கள் நிலைமாறித் தெரிந்தன.

எப்படியோ நாமும் அதற்கிடையில் புகுந்து கொள்கிறோம். அடிக்கடி கைக்கடி காரத்தைப் பார்த்துக் கொள்கிறோம். நேரம் நெருங்க...நெருங்க நெஞ்சத் துடிப்பு அதிகமாகிறது. துடிப்பு என் காதிலேயே விழுகிறது. இதென்ன அவஸ்தை. எனக்கு என்னவாகிவிட்டது?...

பன்னிரண்டு மணி!

கர்ப்பக்கிருக வாசல் திறக்கப்படுகிறது.

தீபஜோதி.

வானிற்கும் மண்ணிற்கும் பாலமமைக்கிறது.

'ஆ! என்ன அழகான சிற்பம். வேங்குழலுடன் வேணு கோபாலன் ஐந்தடி உயரத்தில் சொக்கத் தங்கமாக, அலங்கார கிரீடம் உத்தரியத்துடன் தரிசனம் கொடுக்கிறான். தீவின் உச்சியிலெயில் எங்கும் அடங்கி மாசில் வீணையும், மாலை மதியமும வீசு தென்றலும் வீங்கிள வேனிலும் மூசுவண்டறை பொய்கையும் போன்றதாக எங்கும் நித்தியத்தின் குளிர்மை, மோனம், சாந்தம், பேரின்பம்.

என்னை மறந்து பக்கத்திலிருந்த மாணவன் ஒருவனைக் கேட்கிறேன்.

'முருகன் கோயில் என்றார்களே, வேணு கோபாலன் தானே இருக்கிறான்'

—பதில் வரவில்லை. திரும்பிப் பார்க்கிறேன், அவன் என்னை விசித்திரமாகப் பார்க்கிறான். 'இவருக்கு என்னாகி விட்டது?'

மீண்டும் அவனழகில் ஈடுபட்டுப் போய் விடுகிறேன்.

திடீரென, எதிர்வரிசையில் இருந்து 'இல்லை... இல்லை... என்னைக் கொத்தாதே. என்னை விட்டுவிடு...' என்ற பலமான கதறல், அழுகையுடன் கூடி ஒலிக்கிறது. எல்லோர் கவனமும் ஒருகணம் திரும்புகிறது.

படகில் வரும் போது முருகன் தரிசனம் பற்றி ஏளனமாக எள்ளிநகையாடிய பெண் கதறுகிறாள்.

'மயில் கொத்த வருது .. முருகன் சிரிக்கிறான்...'

—எல்லோரும் முருகா... முருகா... முருகா...என்று அலறுகிறார்கள். அவள் முகத்தில் கண்ணீர் சிரிக்கிறது. முகம் மலர்கிறது.

'மயில் ஆடுது... வள்ளி தெய்வானையுடன் முருகன் .'

—பரவசமாகச் சிறுமி கூறுகிறாள்.

அப்பனே!... என்னே உன் கருணை... முருகா... முருகா ...

—என்கவனம் மீண்டும் கர்ப்பக்கிருகத்தை நோக்கித் திரும்புகிறது. அதிர்ச்சி எங்கே வேணுகோபாலன்?

கருநிழலாக தபஸில் யாரோ அமர்ந்திருக்கிறார்கள். சிவனோ?... கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கும் போது கருநிழல் ஸ்ரீ சத்ய சாயிபாபா போன்றதாக திருமுகம் படர் விரிசடையுடன் திருக்கோலம் தருகிறது.

'இஃதென்ன வேடிக்கை.'

பக்கத்திலிருந்த மாணவன்-என்னைவியப்புடன் ஏறிப்பு நோக்கிய மாணவன் 'சேர் ஹனுமானைப் பார்த்தியளா? என்கிறான். அவனின் மேல் சென்ற கவனம் திரும்பி மீண்டும் கர்ப்பக் கிருகத்தைப் பார்க்கிறேன்.

என்ன விந்தை!

செம்மணி ஒன்று மட்டும் ஒளியை வாயிறைத்துக் கொண்டு பிரகாசிக்கிறது, பார்த்துக் கொண்டிருக்கும் போதே ரத்ன ஹாரமாகிறது. அதனை அணிந்து கொண்டிருக்கும் பெண் தோற்றம், மீணடும் நிற்கும் தோற்றம் நிற்கிறதா? இருக்கிறதா என்று தெரியாத அமைவில் ஒரு , பெண் தெய்வம்.

எனக்கு மேனி குளிர்ந்து போகிறது.

ஆதிபராசக்தியா?

தீபாராதனை முடிவடைகிறது.

எனக்கு இன்னமும் முருகன் தெரியவில்லை.

# பொச்சரிப்பு

● கல்வயல் வே. குமாரசாமி ●

தாலிப் பெருமை
அது ஒண்டுதான் கைமிச்சம்
வேலியோ ஒட்டை
படலைமட்டும் சங்கடம்
நாலு வளத்தாலும் எந்நாளும்
தொந்தரவு
மூலை முடுக்கெல்லாம் முந்தி
ஒரு புலவன் — பாரதியோ —
ஆரோ
பரபரப்பாய்ப் பாடியதை
ஆராரோ எல்லாம் எடுத்தாண்டு
பேசுகினம்.
வாரிசுகள் நாங்கள்
என வந்து
சில பேர்கள்
ஊரதிர ஏதோ உலுப்பி
உதறுகினம்
சன்னன் சிறிசு எல்லாம்
சித்தப் பிரமை எய்தும்,
என்ன நடக்குமோ?
ஏக்கம் மனப்பதற்றம்
சின்னத் தனமான செய்தி
மனம் பதறும்
முன்னாலே தண்டனை
கொள்ளை, கொலை, எரிப்பு
பெண்கள் சடலம்
புதைகுழியில் மீட்பு
என்று
பண்புக்கும் பாரம்பரியம் பழமைக்கும்
கண்தோண்டும் இந்தவகைக்
காரியங்கள்
நாளாந்தம்
மண்புழுவாய் மக்கள்
மதிக்கப்படுகின்றார்.
நங்கையரோ!
நாயாய், நடைப்பிணமாய்,
காவலற்ற
பங்குப் பொருளாய்ப்
போகின்றார்.
கொஞ்சம் எண்டாலும்எம்
நெஞ்சம்
இரங்கிச்சோ!
எல்லாம உடனே மறந்து
எழும்பிப் போய்விடுவம்
பொல்லாங்கு வந்தால்
புலம்பி அழுவம்
பின் எல்லாம் சரி ஓ! "அவன் பாப்பன்'
என்றெண்ணிக்
கல்லாகிப் போவம்
கடுகளவும் சித்திச்சு நல்ல முடிவெடுக்க
நமக்குத் தெரியாதோ?
கழுகு பருந்துகளைக் கசக்கி
எறிய வழிவகையை
நாங்களே இங்கே வகுத்திடுவம்.
பழியும் குழியும் வழி நெடுகத்தான்
இருக்கும்.
அழுது புலம்பினால் அவை
மாறிப் போயிடுமோ?
நச்சு வலைவிரிச்சு
நாசமாய்ப் போக அவை
வைச்சிடுவம் கண்ணி
வயித்தெரிச்சல் தீருமட்டும்
பிச்செடுத்தெம்மைப்
பிசாசாய்ப் பசி யாறிக்
கொச்சைப் படுத்திவரும் கூட்டத்தை
முன்னின்று கொல்லுவதில்
என்ன கொடும்பாவம் வந்துவிடும்.
பல்லுக்கிரையாகிப் போகுமுன்
ஏதேனும்
நல்லதைச் செய்தால்.....?

பிரிய மனமில்லாமல் நகர்கிறேன். தெற்கு வாசல் பக்கமாக செல்கிறேன். அர்ச்சகர் வருகிறார். என் நிலையைக் கூறுகிறேன்.

என்னை அவர் உள்ளேஅழைத்துச்சென்று முருகனைக் காட்டுகிறார். அப்படியே அதிர்ந்து போகிறேன்.

கர்ப்பக் கிருகம் மிக மிக எளிமையாக இருக்கிறது. வெறுமை என்று கூறும் வண்ணம் அத்தகைய எளிமை.

நிலத்தில் ஒரு சிறு பீடத்தில் முருகன் வேலாயுதனாக நிற்கிறான். அவன் பின்னணிக்கு வெறும் வெள்ளைத்துணி மட்டுமே. அவர் உயரம் ஒன்றரை, இரண்டடி இருக்குமா?

இவர்தான் இத்தனை திருக்கோலங்களை எனக்குக் காட்டியவர்? என் மேனி சிலிர்க்கிறது.

முருகா.. முருகா முருகா

படகு திரும்பும் போதும் அதனைநிறைத்திருந்தது நாங்களல்ல.

முருகா!......முருகா!......முருகா!...

அவன் நாமமே. ●

● சமீபத்தில் தனது முதலாவது சிறுகதைத்தொகுதியை வெளியிட இருக்கும் யூனியன் கல்லூரியின் அதிபர் எழுதும் கதை

# உயர உயரும் அன்றில்கள்

பிள்ளையார் கோவில் வீதியில் நின்ற மருதமர நிழலிலிருந்து தெறித்துப் பறந்த சொற்கள் வீமன்காமம் கிராமம் முழுவதும் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

'மோகன்தான் மொட்டைக் கடிதம் எழுதினவனும். அதாலேதான் கிளிக்குஞ்சு கோமதியின்டை கலியாணம் குழம்பினதாம்.' இவ்வாறு பொரிந்தபடி விசாலாட்சி கனகத்தைப் பார்த்தாள்.

மேலே மருதமரக் கொப்பொன்றில் ஒரு கிளிப்பொந்து. அதன் வாயிலோரமாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்த இரு மருதங் கிளிகளையும் பார்த்தபடி கனகம் ஈனக் குரலில்.

'மோகன்தான் மொட்டைக் கடிதம் எழுதினவன். இப்படி நான்தான் கதை கட்டினதென்று கடைசிலே கதை வரும். மோகன்டை அப்பன் மறியலிலே யிருந்து வந்த சண்டியன். என்னை வம்பிலே மாட்டாதே விசாலாட்சி,' என்று கூறிவிட்டு அங்கு வந்து கொண்டிருந்த சிவகாமியைப் பார்த்தாள்.

'கோண்டாவில் டாக்டர் மாப்பிள்ளை டட்சன் கார் கேட்டவராம். அதாலேதான் கலியாணம் குழம்பினதாம்' என்று உரத்து இரைந்தபடி சிவகாமி அவ்விடம் வந்து சேர்ந்தாள்.

வீண் வம்பில் சிக்குப்பட விரும்பாத கனகம் அண்ணார்ந்து மீண்டும் அந்த மருத மரக் கொப்பைப் பார்த்தாள். இறகுகள் இன்னும் முளைக்காத குஞ்சுகளின் கரைச்சல் தாங்க முடியாமல் முருகையரின் பயிற்றங் கொல்லையை நோக்கி இரு மருதங் கிளிகளும் 'கீகீ' என்று நெடில் சுரத்தில் ஓசை எழுப்பியபடி பறக்கத் தொடங்கின.

க. பாலசுந்தரம்

பறந்து சென்ற அந்த இரு மருதங்கிளிகளும், லட்சுமி வீட்டு அறுபதடி அன்றலிலிருந்து, பயற்றங் கொல்லைப் பக்கம் முருகையர் நிற்கிறரோ என்று நோட்டம் பார்த்தன.

அதேசமயம் அந்த அன்றலுவிற்குக் கீழே லட்சுமியும், அவளது மகள் கிளிக்குஞ்சு கோமதியும், கோமதியின் தம்பி கோபாலனும் லிவிங் றூமில், செற்றிகளில் சொகுசாக இருந்தபடி வீடியோவில் ஏமாறுதே தம்பி ஏமாறுதே' படம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கிளிக்குஞ்சு கோமதியின் முற்றுகிய சம்பந்தம் அன்று காலையில் மாப்பிள்ளை பெண்பார்க்க வந்து போன சற்றுவேளையில் குழம்பியதைப் பற்றி லட்சுமியோ கிளிக்குஞ்சு கோமதியோ அற்பமாவது குழம்பியதாகத் தெரியவில்லை. ஆனுல் வீமன்காமம் வடலிகள், வான்பயிர்கள், புதியசுற்று மதில்கள், பழைய கிடுகு வேலிகள் அனைத்தும் கிளிக்குஞ்சு கோமதியின் கலியாணம் குழம்பிய புதினத்தை உற்சாகமாக எதிரொலித்துக் கொண்டிருந்தன.

அதற்கு எதிர்மாறுகக் கனகத்தின் உள்மனம் மட்டும் முற்றிலும் முரணுன குரலோசையை எழுப்பத் தொடங்கியது.

'உயர உயரப் பறப்பவர்களைக் கண்டு உலுத்தத் தனமாகப் பொருமைக் காய்களை உலுப்பிக் கொட்டுகிற சனம், லட்சுமி விடயத்தில் தாராளமாக நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்க முடியுமா? கணவனும் மூத்த இரு ஆண்பிள்ளைகளும் டுபாய் சென்ற பின்னர், ஒரு காலம் மண் குடிசையில் வாழ்ந்த லட்சுமி, இன்று உயர உயரப் பறந்துகொண்டேயிருக்கிருள்.

ஊர் வாயில் தன் பெயர் ஊத்தையாக் கப்பட்டுக் கொண்டிருப்பதை அறியாத

கிளிக்குஞ்சு கோமதி படம் பார்த்து முடிந்ததும், மீண்டும் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். வழமையைப் போல மாலைத் தென்றலின் சுகத்தை அனுபவிக்கவும், தமது புதிய அந்தஸ்தை ஊரவைக்கு விளம்பரப் படுத்தவும் ஒரு இரும்புக் கதிரையை எடுத்துக் கொண்டு முற்றத்துக்குச் சென்ருள். முற்றத்தில் பச்சைப் பசேலெனக் காட்சியளித்த லோன் ஓரம் கதிரையைப் போட்டு அமர்ந்தாள். அவள் தம்பி கோபாலனும் இன்னொரு கதிரையை இழுத்துப் போட்டு 'ரு இன் உவண்' றேடியோவில் காதல் கீதம் கேட்கத் தொடங்கினன்.


முற்றத்தின் ஓரமாக வரிசையாக நின்றஇளம் உவிப்பீங் உவில்லோ - அசோகா மரங்களின் கீழ்நோக்கிய கிளைகள் மாலை தென்றலின் வேகத்திஞல் அசைந்தாடியது போல கிளிக்குஞ்சு கோமதியின் உள்ளமும் ஊசலாடிக் கொண்டிருந்தது.

கிளிக்குஞ்சு கோமதி காலையில் அரங்கேறி முடிந்த சம்பவங்களை இப்போதுதான் அசைபோடத் தொடங்கினள். மணப்பெண்போல நாணிக் கோணி லிவிங் ரூமில், பெண் பார்க்க வந்த டாக்டர் ரவியின் முன்தானிருந்ததை எண்ணிய போது அவளுக்கு ஒரு வித கிளுகிளுப்பாய் இருந்தது. டாக்டர் ரவி ஆங்கிலத்தில் ஏதோ கேட்கத் தான் தலைகுனிந்திருந்ததையும், எந்த எழுத்தாளரைப் பிடிக்கும் என்று கேட்ட போது, அருகேயிருந்த ரேபிள் விசிறியைப் பார்த்ததையும் அசைபோட்டாள். கிளிக்குஞ்சு கோமதி தனக்குத்தானே கூறினள்.

''அவர் எவ்வளவு சந்தோஷமாகக் கதைத்தவர். அவர் போனபின் சற்று நேரத்தால் திரும்பி வந்த புரூேக்கன் தம்பிராசர் ஏன் அப்படிச் சொன்னவன். டட்சன் கார் கேட்டுத்தான் குழப்பினவரோ? மோகன் கேற்றடியிலே நிண்டவன். அவன்தான் ஏதும் கல்லுக்குத்திஞனே... கல்லுக்குத்த நான் என்ன பெரிய தப்பாச் செய்திட்டன்? வல்லிபுரத்தாற்றை வடிவாம்பாள் கூடக் கடிதம் எழுதினவள் தானே. அவள் அந்த 'போய் பிரண்டை' விட்டுப் போட்டு வேறை யாரையோ கலியாணம் செய்யேலையோ? இப்ப வடிவாம்பாளுக்கு ஒரு ஆம்பிளைப்பிள்ளையும் பிறந்திட்டுது. அவள் பத்தோ பன்னிரண்டு கடிதம் எழுதினவள். நான் அந்த 'போய்'க்கு இரண்டு கடிதம்... அவ்வளவு தானே எழுதினனுன்.!''

கோபாலனின் குரல் அவன் அக்காவின் ஏகாந்த சுய விமர்சனத்தைக் குழப்பியது.

''கிளிக்குஞ்சக்கா. பாலசந்தரின் சிந்து பைரவி படக்கொப்பி வந்திருக்காம். நான் தெல்லிப்பழைக்குப் போய் அக்காய் றெக்



கோடிங் சென்ரரில் ஒரு கசெட் வாங்கி வாங்கிவாருன். இரவைக்குப் பார்க்கலாம்.''

கோபாலன் ஓ. எல். மாணவன். உச்சி வெயிலில் புளியங்கொப்பை உலுக்கும் போது பழம் போல பொலவெனக் கொட்டுப்படுவது போல டுபாய்ப் பணம் அவர்கள் வீட்டிலே கொட்டுப்படுகிறது. பணமிருந்தால் படிப்பெதற்கு 'பணத்தால் வாங்க முடியாதது ஏதுமில்லை என்பதுதான் கோபாலனின் அம்மாவின் தத்துவம். அம்மாவின் பிள்ளையவன். அவனுக்குப் பாடசாலை ஒரு பூசாக் காம்ப். அவன் 125CC ஹொண்டா சைக்கிலை எடுத்துக்கொண்டு பறந்தான்.

பாதையிலே தான் படிக்கும் யூனியன் கல்லூரி வாசலில் தனது வகுப்பு ஆசிரியர்

பழைய றலி பைசிக்கிலில் தத்தி ஏறுவதைக் கண்டு, ஒரு டுபாய்ச் சிரிப்பைத் தூக்கிவீசி விட்டு கிறிக்கட் மட்டை விளிம்பிலே பட்ட கிறிக்கட் பந்து சிலிப்பிலே புட்டுப் பாய்வது போல மாயமாக மறைந்தான்.

மங்குபொழுதாகிவிட்டது. முற்றத்தை விட்டுக் கிளிக்குஞ்சு கோமதி வீட்டுக்குள் புகுந்த போது, அவள் தாய் லட்சுமி தனது கணவனுக்கு எழுதிய கடிதத்தை எழுத்துக் கூட்டி இராகமிழுத்துப் படிப்பதைப் கண்டாள்.

....நல்ல சுகம். கிளிக்குஞ்சு கோமதின்டை முற்றுக் கட்டின சம்பந்தம் குழம்பியிட்டு. டாக்குத்தர் மாப்பிள்ளை டட்சன் கார் கேட்டு குழப்பியிட்டார்.

நாங்க மாப்பிலை வூட்ட போனநாங்க. தூ! சின்னெட்டி வூடு. சீலிங்கூட அடிக்கல. டீவி இல்ல. பிரிச் இல்ல. செற்றி இல்ல. சோகேசு இல்ல. கல்லக் கரண்டு எடுத்து ரண்டு பலுப்பு போட்டிருக்கினம்.

மாப்பிளயின்ட தாய் மூண்டு தடவ எங்கட வூட்ட வந்தவ. கிரைண்டரை பாத்து உது என்ன உறுமுது எண்டு கேட்டவ. அவ பொம்பில வாத்தி.

டட்சன் கார் வாங்க காசு அனுப்புங்கோ. கெதியா அனுப்புங்கோ.

இப்படிக்கு

லச்சுமி.

கடிதத்துக்கு முகவரி எழுத அதைக் காவிக்கொண்டு லட்சுமி அடுத்த வீட்டுத் தகரப் படலையைத் திறந்தாள்.

●

மருதமரத்துக் கிளிக்குஞ்சுகளின் இறக்கைகள் பச்சைப் பசேலெனக் காட்சியளித்தன. அவை மருட்சியடையாமல், கீழே கக்கத்துள் வெற்றுக் கடகத்தை அணைத்தபடி நின்ற விசாலாட்சியைப் பார்த்தன.

குளத்தையே பார்த்துக் கொண்டிருந்த விசாலாட்சிக்கு அக்குளத்தில் கெண்டை மீனுக்காக ஒற்றைக் காலில் தவஞ்செய்து கொண்டிருந்த வெள்ளைக் கொக்குத் தெரியவில்லை. லட்சுமி வீட்டுப் போட்டிக்கோவும் அதன்கீழே கம்பீரமாக நின்ற வெள்ளை டட்சன் காருமே தெரிந்தன.

லட்சுமி டட்சன் கார் வாங்கிப்போட்டாள். புரோக்கன் தம்பிராசன் அடுத்தநாள் லட்சுமி வீட்டை வரப்போகிறான் என்பது தான் விசாலாட்சியின் ஒரே கவலை. தன்னைப் போல ஒரு தொழிலாளியின் மனைவியாக இருந்த லட்சுமி திடீரென அந்தஸ்தில் உயர்ந்து, உயர உயரப் பறப்பதை அவளால் சீரணிக்க முடியவில்லை. அதுவும் ஒரு டாக்டர் மாப்பிளைக்கு லட்சுமி மாமியாகப் போகிறாள் என்பதே அவளது உள்ளக்குமுறலாக இருந்தது.

லட்சுமியை விழுத்துவதற்கு ஏற்ற வலிமையான றொக்கட் லோஞ்சர் அவளிடம் இல்லை. ஒரே ஒரு ஆயுதமே அவளிடமிருந்தது. மலிவான ஆயுதம்... மோகனை முடிச்சுப் போட்டு மொட்டைக் கடிதம்.

கிராமத்து ஒழுங்கை முச்சந்தியில் கனகத்தின் வீட்டுக் கேற்றை ஒட்டியிருந்த ஒரு சிவப்பு லெற்றர் பொக்ஸ் அழுக்கு மூட்டையைக் கபக்கென விழுங்கி விட்டுக் கப்சிப்பென்றிருந்தது.

யன்னலினூடாக விசாலாட்சியை அவதானித்த கனகத்துக்கு விடயம் புரிந்துவிட்டது. கனகம் மெதுவாக அச்சிவப்புத் தபாற் பெட்டியை நோக்கித் திடத்தோடு நடந்தாள்.

''பலே மனிதா! மேலே மேலே பறப்பவனின் கால்களைப் பிடித்து இழுத்து விழுத்துகிறாய். பரவாயில்லை. கீழே கிடப்பவனை யாவது விட்டுவைக்கிறாயா? அவன் மீது ஏறிக் குடல்மீதல்லவா உழக்குகிறாய்.'' என்று அந்தச் சிவப்புப் பெட்டி கூற அதற்கென்ன பைத்தியமா? வள்ளுவனும் ஒளவையும் சொன்னவற்றையே விழுங்கிவிட்டு, பொய்யையும் பொறாமையையும் வாந்தியெடுக்கிற இரண்டுகால் விலங்கு ஒரு தபால்பெட்டியின் உபதேசத்தை விழுங்கிவிட்டுச் சீரணிக்குமா?

●

''கலியாணம் குழம்பி இரண்டு மாதத்துக்குப் பிறகு, மீண்டும் புரோக்கர் தம்பி

ராசா லட்சுமி வீட்டுக் கோலிங் பெல்லை அழுத்திப் பிடித்தபடி நின்றார் அது விடாமல் சிணுங்கத் தொடங்கியது. டிரையரில் தனது நீண்ட தலைமுடியை உலர்த்திக்கொண்டிருந்த கிளிக்குஞ்சு கோமதிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

கண்ணாடி போலப் பளபளத்துக் கொண்டிருந்த மகோகனிக் கதவு திறந்தது.

பாட்டா சிலிப்பரைக் கழற்றிவிட்டு, சறுக்காமல் இருப்பதற்காக அடிமேலடி வைத்துச் சென்று, சொகுசான செற்றியில் இருந்த குஷியில் புரோக்கர் ஒரு வரட்டுச் சிரிப்பை உதிர்த்தார்.

கால்மேல் கால் போட்டபடி செற்றியில் கைகளை இருபக்கமும் நீட்டிப் பதித்தபடி இலாவகமாகச் சாய்ந்திருந்த லட்சுமி, 'சரி சொல்லும் தரகர்,' என்றாள்.

''எங்கே? தெல்லிப்பழை ஹொஸ்பிற்றலிலையோ?'

''இல்லை. சீமன்ற் பக்டரியிலே. போமன் வேலை. போமன் வேலையெண்டால், கொஞ்சக் காலத்திலே எஞ்சினியர்தானே.''

''தரகர்...கோபிக்கிறன் எண்டு நினையாதேயுங்க. உங்கடை தலைக்கையென்ன பிளட்டே அடைஞ்சிருக்கு? எங்கடை அந்தஸ்தென்ன? நிலபரம் என்ன? வீடு வாசல் என்ன? போயும் போயும் ஒரு போமனுக்கோ இந்த லட்சுமி மாமியாயிருக்கிறது?'

தரகர் தம்பிராசா தனது பொலித்தீன் பேக்குக்குள் கையை விட்டுத் துழாவியபடி கிளிக்குஞ்சு கோமதியைப் பார்த்தாள். அவள் தனது கையிலிருந்த வெள்ளை றேயை நீட்டினாள். பிறிட்ஜிலிருந்து எடுத்து வந்த றெடிமேட் கூல் றிங்ஸ்... அது தரகரின் கையில் ஜில் எனக்குளிர்ந்தது

'உங்கள் எழுத்துப் புரியவில்லை, விளங்கவில்லை என்று விமர்சகர்கள், எழுத்தாளர், வாசகர் மட்டத்தில் பரவலாகப் பேச்சுக்கள் அடிபடுகிறதே — அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

புரிதல் என்பது அவரவர் தகுதிமட்டத்தில் நிகழும் செயற்பாடு. இன்று புரியாதவனுக்கு நாளை புரியலாம நாளை புரியாதவனுக்கு அதற்கடுத்த நாள் புரியலாம். இந்தப் புரிதல் புரியாமை என்பனவற்றை மீறி எடுத்த நூலைப் படிக்காமல் வைப்பதைத் தடைசெய்வது எதுவோ அதுதான் இலக்கியப்பலம்

நான் எழுதும் போது வார்த்தைகளிலிருந்து விடுபட விரும்புகிறேன். வார்த்தைகள் என்னிலிருந்து விடுபட முயற்சிக்கின்றன இந்த அவஸ்தைப் போராட்டம் தான் என் எழுத்துக்கள். இதனால் நான் என் எழுத்துக்களைத் திருப்பித் திருப்பி எழுதுகிறேன் ஹெமிங்வே தனது படைப்பொன்றை 13 முறை திருப்பி எழுதினான் நான் எனது குரு — க்ஷேத்திரம் என்னும் சிறுகதையை 22 முறை திருப்பித் திருப்பி எழுதினேன்'

— வானொலி - புகழேணி 9-12-85 பேட்டியில்.

''நான் இப்ப வேறொரு புதுப் பெடியன்ரை குறிப்போடை வந்திருக்கிறன். பிள்ளைக்கு நல்ல பொருத்தம். சாதகப் பொருத்தம் மட்டுமல்ல. சோடிப் பொருத்தமும் மன்மதன் மாதிரி. ஊர் கோப்பாய். நல்ல இடம்.''

''வேலையென்ன? டாக்குத்தரோ? எஞ்சினியரோ?''

தரகன் தலையைத் தடவிவிட்டு வாய் திறந்தான்.

''சும்மா சொல்லக் கூடாது. பெடியன் சிகரட்கூடப் பத்துறதில்லை. கிட்டடியிலே தான் வேலை.''

'பத்துப் பேருக்கு இரவல் கொடுக்கக் கூடிய கொள்ளை அழகு உவள் கோமதியிடம் மண்டிக்கிடக்கு. அதுதான் கிளிக்குஞ்சு என்று யாரோ சரியாத்தான் பட்டஞ்...'' என்று தொடர்ந்த தரகரின் சிந்தனை லட்சுமியின் செயற்கை இருமலால் அறுந்தது.

''தரகர். அந்த கோண்டாவில் டாக்குத்தர் மாப்பிளை டட்சன் கார் கேட்டுத் தானே குழம்பினவர். கார் போட்டிகோவிலே நிற்குது. பாத்தனீங்களல்லே. அதைத் தான் ஒழுங்குபடுத்துங்கோ. வேணுமெண்டால் இன்னும் ஒரு லட்சம் வரை தாறம்..''

பயந்து இருந்த நான்கு மருதங்கிளிகளும் ஜீஜீ என்று ஒலிபரப்பியபடி பிள்ளையார் கோவிலடி மருதமரத்தை நோக்கிப் பறந்தன.

கலியாணம் குழம்பியதற்குரிய உண்மைக் காரணத்தை எப்படிச் சொல்வதென்று தரகர் தம்பிராசா திக்குமுக்காடினார். என்றாலும் தரகர்களுக்கேயுரிய பாணியில் கதையைப் பக்குவமாக முன்வைக்கத் தொடங்கினார்.

''லட்சுமி அம்மா. உங்களுக்கு ஞாபகமிருக்கும் எண்டு நினைக்கிறன். பெம்பிளை பார்க்க வந்தவன்ற டாக்டர் ரவி உந்தச் செற்றிலேயிருந்து, உங்க தம்பி குமாருவுக்கு என்ன சொன்னவர்? அவர் ஒழிப்பு மறைப்பு இல்லாமல் தானே சொன்னவர்.''

''வந்து தரகர். ஓ! தனக்கு பெம்பிளையை நல்லாப் பிடிச்சிருக்கு... எண்டவர். பிறகு கிளிக்குஞ்சோடை மனம் விட்டுக் கதைச்சுக் கொண்டிருந்தவர்'' லட்சுமி.

தரகர் அடுத்து எப்படிக் கதையை வளர்ப்பது என்று யோசித்தபடி தலையைத் தடவினார்.

''லட்சுமி அம்மா. அந்த டாக்டர் பெடியன்..வந்து... ஒரு அற்ப விடயத்தைத்தான் தூக்கிப் பிடிக்கிறார்.

லட்சுமிக்கு அடிவயிறு பற்றியது. ''எவளோ எளியவள் கல்லுக்குத்திப் போட்டாள்'' என்று மனத்துக்குள்ளே கறுவினாள் தரகன் கதையைத் தொடர்ந்தான்.

''மனுசரிலேதான் எத்தனை ரகம். நானும் முப்பது வருடமாகத் தரகுவேலை பார்க்கிறன். இப்படியொரு புதுமையான மாப்பிள்ளையைக் காணவில்லை. உண்மையைச் சொன்னால் அந்த டாக்குத்தருக்குப் பைத்தியம் என்பீர்கள். தெல்லிப்பழை ஏழாம் வாட்டுக்கு அனுப்பச் சொல்லுவீங்க''

லட்சுமிக்கு ஒன்றுமே புரியவில்லை. அவளால் புரிந்துகொள்ள முடியாத தத்துவத்தை அவள் தெரிந்துகொள்ள அவசரப்பட்டாள். டாக்டர் ரவி பெண் பார்க்க வந்த சமயம் நோயாளியைத் துழாவித் துழாவி விசாரித்து நோயை அறிவது போல கிளிக்குஞ்சு கோமதியின் வாயாலேயே அவர் உண்மையைக் கறந்து எடுத்துக் கொண்டார். அதன் முடிவுதான், அவர் சம்பந்தத்தைக் குழப்பினார். தனது முடிவை முகத்திலே அறைந்தது போலக் கூறமுடியாமலே டட்சன் கார் காட்டில் சம்பந்தத்தைக் குழப்பினார். இதன் உண்மையை உணர முடியாத லட்சுமி தரகர் தம்பிராசாவின் வாயைப் பார்த்தாள்.

''பெரிதாக ஒண்டுமில்லை. உங்கள் மகளின் படிப்பைப் பற்றி கோமதியிடமே விசாரித்தாரே. உங்கள் மூத்தமகன், இளையமகன், நடுவில் மகன் ஆகியோரின் படிப்புப் பற்றி எல்லாம் விசாரித்தது ஞாபகமிருக்கிறதா?''

''எல்லாம் உந்தக் கண்டறியாத படிப்பைப் பற்றித்தான். விடுத்து விடுத்துப் படிப்பைப் பற்றித்தான் கேட்டவர். அவருக்குப் படிப்பைத் தவிர வேறொண்டுமே தெரியாது போல.'' பளபளத்த யன்னற் கிறிலூடாக மாட்டுத் தொழுவத்தைப் பார்த்தாள். இந்திய சிந்தி இனப்பாற் பசுக்கள் கொழுகொழுவெனக் காட்சியளித்தன.

நல்லின பாற்பசுக்களின் கன்றுகளும் நல்ல பால் தரும். இன்னும் ஒரு இந்தியக் கள்ளிக்கார் பாலினப் பசுவும் வாங்கவேண்டும் என்று லட்சுமி தீர்மானித்தாள்.

லட்சுமி திரும்பிப் பார்த்தபோது புரோக்கர் தம்பிராசா மேலே சீலிங்கிங் உள்ள விசிறியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''உந்த விசிறி ரண்டாயிரம். டியூற்றி பிறீ சொப்பில் வாங்கினது. அது சரி தரகர், டாக்டர் ஏன் குழப்பினவர் என்று சொல்லுங்கோவன்'' என்று கேட்டுவிட்டு அவரது பதிலை ஆவலோடு எதிர்பார்த்தான்.

''டாக்டர் ரவி ஜெனட்டிக்ஸ்.. கூர்ப்பு-பாரம்பரியம் என்று ஏதேதோவெல்லாம் கூறினார். நான் ஒன்றுமே புரியவில்லையென்றேன். பின்னர் பாகல்விதை நட்டால் சுரைக்கன்று முளைக்குமா என்று என்னைக் கேட்டார்.''

லட்சுமிக்குத் தரகர் தம்பிராசா கூறியது ஒன்றும் விளங்கவில்லை. டவுரியைக் கூடச் கேட்கத்தான் சுத்துமாத்துப் பண்ணுகினம் என்று மனத்துள் குமைந்தபடி தரகர் தம்பிராசாவின் வாயைப் பார்த்தாள்.

''உங்க குடும்பத்திலே ஒருத்தர் கூட ஓ. எல். பரீட்சையும் முற்றாகப் பாஸ்பண்ணவில்லையாம். ஓ. எல். பரீட்சையிலே மூன்று முறை முட்டை வாங்கின கிளிக்குஞ்சு பொரிக்கிற குஞ்சுகளும், பரீட்சைகளிலே முட்டை போடுகிற குஞ்சுகளாகத்தானிருக்குமாம். அதுதான் நல்லினவிருத்திக் கிளிக்குஞ்சாக நல்ல சீதனத்தோடை தேடுகிறார், டாக்டர் ரவி.''

''என்ன அலம்புகிறீங்கள் தரகர்?''

''படியாத கிளிக்குஞ்சைக் கலியாணம் பண்ணி மொக்குப் பிள்ளைகளுக்கு அப்பாவாகத்தான் இருக்க விரும்பவில்லையாம்.''

தரகன் சொற்கள் லட்சுமிக்கு விளங்கியிருக்குமோ என்னமோ? ●

# போக்கு

கூட்டம் முடிந்து, நண்பர்களிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்த போது, இருட்டத் தொடங்கியிருந்தது. இந்த நேரத்தில் பட்டணத்தைப் பார்த்து எவ்வளவு காலம்!

மோட்டபைக் என்றால் மிஞ்சிமிஞ்சிப் பத்துநிமிஷம்-வீட்டுக்குப் போய்விடலாம். அதைக்கூட வெளியே எடுத்து எவ்வளவு நாட்கள்! எதற்கென்று யோசிப்பது? இந்த சைக்கிள் தடியில் நாரிமுறிய உழக்கினாலும் அரை மணித்தியாலத்திற்கு மேலாகத்தான் ஆகும்-அதுவும் இந்தத் தெருக்கிடங்குகளில் விழாமல் போகமுடிந்தால். வீட்டில் பயப் படப் போகிறார்கள்...

டைனமோவை அமுத்தி விட்டு ஏறினான். தான் பழங்காலத்து மனிதனாகிவிட்டது போல ஒரு கூச்சம் இப்போதும் எட்டிப் பார்க்கிறது. பெல், பிரேக், விளக்கு-இதெல்லாவற்றுடனுந்தானா சைக்கிள்ஓட வேண்டும்? முடக்கில் திரும்புகையில், முந்திப் போகையில் மணியை அடித்தால், பேயனைப் பார்ப்பது போல் பார்க்கிறார்கள் ...

மில் சந்தியில் இடப்புறந் திரும்பினால் சுகமாகப் போகலாம். ஆனால், அது ஒரு வழிப் பாதை. பரவாயில்லை - இன்னொருவனுக்குப் பயந்துதான் சரியாய் நடப்பேன் என்பது எனக்கு அவமானம்-நேரே போனான். ஒரு வழிப்பாதை, அது இது எல்லாம் யாருக்காக என்பதை எல்லோரும் மறந்து போனார்கள் என்றுதான் படுகிறது...

முந்தியென்றால், இந்த நேரத்தில் இந்தத் தெரு எப்படியிருக்கும் - காணிவல் மாதிரி. இப்போது கடைக்காரர்கள் மூடலாமா விடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இது கூடப் பரவாயில்லை-பகலோடு அடங்கிய பட்டணத்துடன் பார்க்கும் போது ஸெக்கன்ட் ஷோ பார்த்து விட்டுத் தெருவளந்த விடலைக்காலம், அப்புவோடு கடைகடையாய்ப் போய் வந்த சின்ன வயது, இலக்கியக் கூட்டம் என்று — அது முடிந்தும் அதன் பிறகு அதைப் போல இரு மடங்கு நேரம் தெருவோரம் நின்று— கூடிப் பேசிக் கலைகிற மிகக் கிட்டிய இறந்த காலம் எல்லாம் நினைவில் வந்தன.

கண்களைக் குருடாக்கும் வெளிச்சமும் பயங்கர அலறலும் அதிலும் பயங்கர வேகமுமாய் ஒரு மினி பஸ் எதிரே வந்து திரும்புகிறது. யாருக்காக—எதற்காக இந்த ஓட்டம்? தெரு-பாதை-வழி-என்பதே சமூக ஒழுங்கின் ஒரு அடிப்படை உதாரணம் என்று முன்னர் அடிக்கடி படும். இப்போது அது இன்னமும் வலுவாய்ப்படுகிறது, ஒழுங்கு, தெருநாகரிகம் - இதையெல்லாம் இப்போது யார் கவனிக்கிறார்கள்? எல்லாம் இயல்பான வழித்தடங்கள்தாமா? பாதைசரியாய்த்தானிருக்கிறதா? ...

சடாரென்று சைக்கிள் குதித்தெழும்பியது. கைப்பிடி வழுவப் பார்த்தது. பிருஷ்டம் நொந்தது. கிடங்கு எங்கே கிடந்தது?

**சாந்தன்**

இந்த இடத்தில் தெருவிளக்குகள் கூட இல்லை. ஓவென்ற இருள், அதைப் பிளந்து, உழக்கி கொஞ்சம் கெதியாய்ப் போகலாம்

முன்னால் இரண்டு சைக்கிள்கள். விலக்க வேணும் மணி அடித்தான். பாதித் தெருவுக்கு மேல் மறித்துக் கொண்டு போகிறவர்கள் காதில் விழுந்திருக்குமா? கதை ருசி. கிட்டப் போய் இன்னொரு தரம். எதிரிலிருந்தும் ஏதோ வந்தது. இவர்களில் முட்டிவிடாமலிருக்க பிரேக் வேறு பிடிக்க வேண்டியிருந்தது. மூன்றாந் தரமும் அடித்து விட்டு, ஆத்திரந் தாங்காமல் கேட்டான்:

''அண்ணை, பெல் அடிச்சாலும் விலத்தி நீங்களில்லையே ''

இரண்டு விநாடி மௌனம். இரண்டு பேரும் திரும்பிப் பார்த்த மாதிரி இருந்தது. பிறகு ஒருவன் கேட்டான்:

''பெல் அடிச்சா விலத்த வேணுமெண்டிருக்கா?''

## வரைவது எப்படி?

பிரபல ஓவியர்கள் வரலாற்றுப் பாத்திரங்கள் வரைந்தாலும் சரி, நவீன சமூக வாழ்க்கைப் பாத்திரங்களை வரைந்தாலும் சரி, அச்சித்திரங்களின் ஆண், பெண் உருவங்களில் ஒருவித ஒருமைத்தன்மை நிலவும். இந்த ஒற்றுமை ஏன்? எப்படி? எங்கு நிகழ ஆரம்பிக்கிறது என்பது வாசகர்களுக்குப் புரியாத புதிராக இருக்கலாம்?

சிலசமயம் ஓவியர்களின் முகச்சாயல்களைக் கூட அவை கொண்டிருப்பதைக் கண்டு வியந்திருக்கலாம்.

சில ஓவியர்கள் ஒரு பெரியநிலைக் கண்ணாடி முன்னால் நின்று, தாம் சித்தரிக்க வேண்டிய பாத்திரப் படைப்புகளாக நடித்து, அவற்றை ஆதாரமாகக் கொண்டு, பின்னர் கதையின் பகைப்புலத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கின்றனர். இதனாலேயே அவர்களால் முகபாவங்கள், அங்க அசைவுகளை தெளிவாகச் சித்தரிக்க முடிகிறது. அவர்களின் முகச்சாயலைப் பெறுகின்றன. ஓரினத் தன்மை பெறுகின்றன. தென்னக ஓவியரான மாருதி அப்படித்தான் வரைகிறார்.

## குட்டிக் கதைகள்

### மான் குட்டி

வேட்டையாடிய விலங்குகளின் எலும்புகளிலிருந்து தசைகளைப் பிரித்தெடுப்பதன் மூலம் சிங்கம் தனது பற்களைக் கூர்மையாக்கியது. அவற்றைப் பாய்ந்து பற்றுவதன் மூலமும் விழிகளைத் தோண்டுவதன் மூலமும் விழிகளைத் தோண்டுவதன் மூலமும் தனது கால் விரல் நகங்களைக் கூரியதாக்கியது. எஞ்சியதை உண்ணும், கழுகு அதற்கு வரவேற்பளித்தது இதனைப் பார்த்து மான்குட்டிகள் தம் கொம்பினைத் தீட்டத் தொடங்கின. கழுகும், சிங்கமும் 'பயங்கரம்!' என அலறின.

---அனுபவன்

### பாம்பும் பிடாரனும்

பாம்பாட்டி பாம்புடன் ஹோல்பேசிற்கு சென்று பாம்பாட்டினான். நல்ல வசூல். வரும் வழியில் பாம்புக்கு முட்டை பால் என வாங்கிக் கொடுத்தான். அவனுக்கும் நிறையப் பணம் மீதமாயிற்று,

இதனைப் பார்த்த பாம்பு நினைத்தது.

''நான் தானே ஆடுகிறேன் பாம்பாட்டிக்கு ஏன் காசு கொடுப்பான்'' பாம்பு கூடையை விட்டு வெளியே வந்தது.

மைதானத்திலிருந்து தனது திறமை முழுவதையும் காட்டி வேகமாக மூர்க்கத்தனமாக ஆடியது. கூட்டம் எட்ட விலகியது. அதன் ஆள் சேர்க்கும் ஆவேசம் அதிகரிக்க... அதிகரிக்க...

கூட்டம் தடி கொண்டு, கல் கொண்டு அதனை அடித்துக் கொன்றது.

சில்லையூர் செல்வராசன் சொல்லக் கேட்டவர் ஜோ. எகட்டன்

தொடர் நவீனம்

# தீம் தரிகிட தித்தோம்

செங்கை ஆழியான்



**1956** மே, 1. அதிகாலை 5 மணி,

''கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்திற்குள், தனது நீண்ட பயணத்தை முடித்துக்கொள்ளும் ஆவலுடன், யாழ்ப்பாணம் மெயில் றெயின் நுழைந்தது. தூங்கி வழிந்து கொண்டிருந்த புகையிரத நிலையம், மெயில் றெயினின் வருகை ஒலியால், அலறியடித்தபடி விழித்துக் கொண்டது. புகையிரத நிலைய உத்தியோகத்தர்களும் 'போர்ட்டர்களு'ம் சுறுசுறுப்பானார்கள்.

யாழ்ப்பாணத்தில் முதல்நாள் மாலை ஏறி, இரவு முழுவதும் தூங்கியும் தூங்காமலும் பயணம் செய்து வந்த பிரயாணக் களைப்பு, மெயில் றெயினிலிருந்து இறங்கிய பயணிகளில் நன்கு தெரிந்தது.

மூன்றும் வகுப்புக் 'கொம்பாட்மென்ற்' ஒன்றிலிருந்து, சுரேந்திரன் அவசரமாகப் 'பிளாற்போமி'ல் குதித்தான். தோளில் தொங்கிய 'றவலிங்பாக்'குடன் வெளியேறும் வாசலை நோக்கி விரைவாக நடந்தான். அவனுக்கு இருபத்திமூன்று வயதிருக்கும். உயர்ந்த சிவந்த இளைஞன்' நோஞ்சனும் பருமனுமல்லாத உடல்வாகு.

அவனுடைய முகத்தில் பயணக்களைப்பையும் மீறி ஒருவகை அவசரமும் ஆவலும் தெரிந்தது.

''சோமாவை உடன் சந்திக்க வேண்டும்''

அவள் நினைவு அவனுக்கு, அந்த அதிகாலைக் குளிரிலும் இதமான வெப்பத்தை உடலில் தந்தது. உடலில் மெல்லிய ஒரு கொதிப்பு. அவள் அவனுக்காகக் காத்திருப்பாள். அவனுடைய மூன்று நாள் பிரிவைக் கூட அவளால் தாங்கிக்கொள்ள முடியாது.

அவனும் யாழ்ப்பாணம் செல்ல விரும்பி இருக்கவில்லை. மேதினத்திற்கு முன் வந்த வார இறுதி விடுமுறையை அவளுடன் கழிக்கவே அவன் திட்டமிட்டிருந்தான். அதனால் சோமா கூட அம்பலாங்கொடையிலுள்ள தனது கிராமத்திற்குச் செல்லாது, கொழும்பிலேயே தங்கியிருந்தாள்.

## அத்தியாயம் : ஒன்று

இருந்தாற் போல யாழ்ப்பாணத்திலிருந்து தந்தியொன்று வந்து சேர்ந்தது.

'பெரிய ஐயா காலமாகிவிட்டார். உடன் வரவும் குமாரசாமி.'

அவனுடைய அண்ணன் குமாரசாமி, தந்தி கொடுத்திருந்தார். தவறாது சென்று கலந்து கொள்ள வேண்டிய மரணச் சடங்கு. அவன் மீது அன்பைச் சொரிந்தவரின் இறுதி யாத்திரையில் அவன் கலந்து கொண்டே தீர வேண்டும்.

விபரமறிந்த சோமாவின் முகம் வாடியது. எனினும், அவள் அவனைத் தடுக்கவில்லை.

''போய் வாருங்கள், சுரேன்.''

''நீயும் கிராமத்துக்குப் போய் வாயேன் சோமா.''

''நா மம யன்ன பகாய்... மாட்டேன், நான் போகவில்லை. இங்கு வேலையிருப்பதாக அம்மேக்கு எழுதிவிட்டேன். நீங்கள் கவலைப் படாது போய்வாருங்கள்...''

ஏமாற்றம் முகத்தில் 'பளீரெ'னத் தெரிந்தது. அவனை அவளால் ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை. கலங்கிவிடுமாப்போல விழிகள் தத்தளித்தன. அப்படியே அவனைத் தன்னுடன் வாரி அணைத்தும் அவன் மார்பில் முகத்தைப் புதைத்து, விழிகளில் தளும்பிய நீரை மறைத்துக் கொண்டாள்.

''மே டே காலை நிச்சயம் வந்துவிடுவேன் சோமா ''

சொல்லியபடியே வந்துவிட்டான். அவன் வீட்டில், அவனை நின்று போகுமாறு அனைவரும் மறித்தனர்.

''வந்தனி ரெண்டுநாள் நிண்டிட்டுத் தான் போவன். நல்லாமெலிஞ்சும்போனுய்'' என்று அம்மா வேண்டினுள்.

''என்ன அவசரம், தம்பி. நாளைக்கும் விடுமுறைதானே? நாளைக்குப் போகலாம் தானே...?'' என்று அக்கா மறித்தாள்.

எல்லாருக்கும் ஒவ்வொரு காரணத்தைக் கூறி, மெயில் ஏறுவதற்குள் போதும் போது மென்ருகிவிட்டது.

கல்கிசை பஸ்ஸில் தாவி ஏறிக்கொண் டான்.

''பம்பலப்பிட்டி எக்காய்...''

பாராளுமன்றக் கட்டிடத்தைக் கடந்த போது, அவனுக்கு பஸ்சில் இருப்பதற்கு இடம் கிடைத்தது.

அதிகாலையிலேயே கொழும்பு நகர் கலகலப்புப் பெறத் தொடங்கிவிட்டது. நகரத்தைநோக்கி வாகனங்கள் வரத் தொடங்கியிருந்தன. வர்த்தக நிலையங்கள் சில திறக்கப்பட்டிருந்தன.

பஸ்சின் யன்னலூடாக வெளியே நோக்கும் போது, காலி வீதியின் ஒருபக்கம் தெளிவாகத் தெரிந்தது. வீதியோர மதில்களில், நடந்து முடிந்து போன தேர்தல் பிரச்சார விளம்பரங்கள் அழிந்து போகாது தெரிந்தன. பலவற்றில் இன்று ஆட்சியைப் பொறுப்பேற்றிருக்கும் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் படம் சிரித்துக் கொண்டிருந்தது அவன் ஐக்கிய தேசியக் கட்சிதான் ஆட்சியைக் கைப்பற்றுமெனத் தேர்தல் காலத்தில் நம்பியிருந்தான்.

'இருபத்திநான்கு மணி நேரத்தில் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவேன்' என்ற பண்டாரநாயக்கவின் தேர்தல் வாக்குறுதிக்குச் சிங்கள மக்கள் தலைசாய்த்துவிட்டார்கள். அதனுல் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைத் தழுவநேர்ந்துவிட்டது. மக்களின் உணர்ச்சிகளை வெகுவேகமாகத் தட்டியெழுப்ப இன, மொழி, மத உணர்வுகள் ஏற்ற ஆயுதங்களாகும். இந்த ஆயுதங்கள் சிங்களப் பிரதேசங்களில் மட்டுமன்றி, தமிழ்ப் பிரதேசங்களிலும் தேர்தல் காலங்களில் பயன்படுத்தப்பட்டன.

'தமிழுக்குச் சம அந்தஸ்து. தமிழினத்துக்குச் சமஷ்டி ஆட்சி' என்ற தேர்தல் வாக்குறுதிப் பாணத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி முன் வைத்து, தமிழ்ப் பிரதேசப் பதினுறு தொகுதிகளில் பதினுன்கில் போட்டியிட்டு, பத்துத் தொகுதிகளைத் தன தாக்கிக் கொண்டுள்ளது.

அவனுடைய தமையன் குமாரசாமி, இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முக்கிய அங்கத்தவர்; பிரச்சாரப் பேச்சாளர். அதனுல், அவனுக்கும் அரசியலில் ஈடுபாடிருக்கிறது.

இனத்தையும் மொழியையும் மதத்தையும் அரசியல் வெற்றிக்கான தேர்தல் காய்களாகப் பயன்படுத்துவதை அவன் அறவே வெறுத்தான். பாராளுமன்றக் கதிரைகளைக் கைப்பற்ற மக்களின் மூலாதார உணர்ச்சிகளையா தட்டிவிட வேண்டும்? சமூகநலனைப் பாதிக்கும். வறுமை, வேலையின்மை என்பனவற்றைத் தீர்க்கும் மார்க்கங்களை முன் வைத்து, அரசியலில் போட்டியிடக்கூடாதா?

பஸ் குலுக்கலுடன் ஒரு தரிப்பில், நின்று புறப்பட்டது. கொள்ளுப்பிட்டியைப் பஸ், தாண்டிக் கொண்டிருப்பதை உணர்ந்து தன் னிருக்கையை விட்டு எழுந்திருந்தான்.

''இஸ்சரு ஹோல்றெக்க பயினவா...'' என்ருன். 'விடுதிக்குப் போய் குளித்துவிட்டு, சோமாவிடம் ஓடிச் செல்ல வேண்டும்''

# 2

கடற்காற்று இதமாக வீசியது. விடுதியிலிருந்து பார்க்கும் போது, கடல் பரப்பும் அலையெறிவும் தெளிவாகத் தெரிந்தன. கடற்கரையோரமாக கரையோரப் புகையிரதப் பாதை அமைந்திருந்தது. அடிக்கடி அந்த இரட்டைப் பாதையில் புகையிரதங்கள் அசுர வேகத்தில் விரைந்துகொண்டிருந்தன. அவற்றின் இரைச்சல் நாகராசனுக்குப் பழக்கப்பட்ட சங்கீதம்.

கரையோரப் பாறைகளில் இரவு படர்வதை எதிர்பார்த்து, களவுச் சுகம்பெற வந்திருக்கும் இளம் 'ஜோடி'கள் காத்திருப்பார்கள். அவர்களில் நிச்சயமாக சுரேந்திரனும் சோமாவும் இருக்கமாட்டார்கள்.

சுரேந்திரன் அவன் அறை நண்பன். இரண்டாண்டுகளாகத்தான் அவர்களுக்கும் பழக்கம். ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டிருக்கின்றார்கள். சுரேந்திரன், கல்வித் திணைக்களத்தில் 'கிளார்க்'காக வேலை செய்து வருகின்றான். அங்குதான் சோமாவதியும் வேலை செய்கிறாள்.

நாகராசன் அரசாங்க உத்தியோகம் பார்ப்பவனல்லன். கொழும்பிலிருந்து வெளிவரும் ஒரு தமிழ்த் தினசரியின் அலுவலக நிருபனாக இருக்கிறான்.

ஒருநாள் அதிகாலை அந்த விடுதியை நடத்துபவர், சுரேந்திரனைஅழைத்துவந்தார்.

''மிஸ்டர் நாகராசன், உமது அறையில் இவர் தங்கப் போகிறார், உம் றூம் மேற்றாக...''

அவன் சுரேந்திரனை ஏறிட்டுப் பார்த்தான். கள்ளங்கபடமில்லாத இளைஞனாகப் பட்டது. யாழ்ப்பாணத்துக் கட்டுப்பாட்டு வாழ்வை, கொழும்பு விரைவில் மாற்றி விடும்.

''எனக்கு ஆட்சேபணையில்லை ..''

''நான் இங்கிருப்பது உமக்குச் சிரமமில்லையே?...''எனச் சுரேந்திரன் கேட்டான். அவன் அவ்வாறு கேட்டது அவன் உள்ளத்தை நெகிழச் செய்துவிட்டது.

அவர்கள் நண்பர்களாகிவிட்டார்கள்.



காதலி: அத்தான் என்னை உயிருள்ளவரை காப்பாத்துவீர்களா?

காதலன்: கண்ணே! இண்டைக்கு எங்கட பக்கம் ஆமி செக்கிங். அதுக்குத் தப்பினாத்தான் எல்லாம்.

---

சோமாவை அவன் காதலிக்கின்ற செய்தியை அறிந்ததும், முதலில் திகைப்படைந்து பின்னர் வாழ்த்தியவன் அவன்தான்.

''அவள் சிங்களப் பெண் சுரேன். அவளை நீ கலியாணம் செய்து கொள்வது எவ்வளவு தூரம் சாத்தியமாகும்? உன் பெற்றோர் இதற்கு ஒருபோதும் சம்மதிக்கமாட்டார்கள் ''

அவன் எதுவும் பேசாது தலையைக் குனிந்தவாறிருந்தான். பின்னர் சொன்னான்:

''அவளை என்னால் பிரிந்து வாழமுடியாது. வாழ்ந்தால் அவளுடன்தான் ''

அவனையறியாமல் உதடுகளில் புன்னகை மலர்ந்தது. அவன் இன்று பாராளுமன்றத்திற்கு நிருபனாகச் சென்றிருந்தான். அங்கு 'சிங்களம் மட்டும் ஆட்சிமொழி' என்ற மசோதா மீதான விவாதம் நடந்தது. இச் சட்டத்தின் மூலம், சிங்கள மக்களையும், தமிழ் பேசும் மக்களையும் பிரித்து விடுகின்ற இனவாதக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கி விட்டன. அங்கு இரண்டு இனங்களும் பிரிவினைச் சக்தியில் பிழவுறத் தொடங்க, இங்கு இரு இன உள்ளங்கள் ஒன்று பட முயல்கின்றன.

அங்கு நடந்த விவாதங்கள் அவனுக்கு நினைவில் வருகின்றன.

காலிமுகத்திடலில் கம்பீரமாக எழுந்து நிற்கும், ஆங்கிலேயக் கட்டிடக் கலையின் திண்மையை வெளிப்படுத்தும், பாராளுமன்றக் கட்டிடத்தின் செய்தியாளர் கலரியில் அவன் அமர்ந்திருந்தான்.

பாராளுமன்றத்தின் இருக்கைகள்நிரம்பி யிருந்தன. இலங்கையின் பல்வேறு தேர்தல் தொகுதிகளின் பிரதிநிதிகள், வெற்றிக்களிப் புடன் அங்கு அமர்ந்திருப்பதாக அவனுக்குப் பட்டது. இந்தப் பாராளுமன்றத்தின் கதி ரைகளைக் கைப்பற்றுவதற்காகக் கடந்த தேர் தலில், இவர்கள் எவ்வளவு பகீரதப் பிரயத் தனப்பட்டார்கள்? எவ்வளவு வாக்குறுதிகளை மக்கள் முன் சிந்தினார்கள்? 'அதிகாரம்' என்பது அவ்வளவு இனிமையானதா?

சிங்களத்தை ஆட்சிமொழியாக்குவதா கச் சிங்கள மக்கள் முன் கூறி, அரசாங்கத் தினைக் கைப்பற்றி இருக்கும் மகாஜன எக் சத் பெரமுன என்ற, எம். ஈ. பி. ஆளுங் கட்சி உறுப்பினர்கள் ஒரு வரிசையில் இருந் தார்கள். அவர்களின் தலைவர், இந்த நாட் டின் பிரதம மந்திரி எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க முன்னணியில் அமர்ந் திருந்தார். இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகளைப் பேணி இந்த நாட் டில் ஒரு சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்து வோம் என வடக்கு, கிழக்கு மக்களுக்கு வாக்களித்து, வாக்குப் பெற்று வந்திருக்கும் சமஷ்டிக் கட்சியினர் எதிர்க்கட்சியினரோடு அமர்ந்திருந்தார்கள்.

அவர்களில் பலரை அவனுக்குத்தெரியும். நாடறிந்த பெருமக்கள் அவர்கள். தனிப் பெருந் தலைவர் என யாழ்ப்பாண மக்களால் மதிக்கப்படும் ஜி. ஜி. பொன்னம்பலம், வவு னியாச் சிங்கமெனக் கருதப்படும் சி. சுந்தர லிங்கம், மன்னார்ப் பிரதிநிதி வி. ஏ. அழகக் கோன், கொழும்பு மத்தி இரண்டாம் பிரதி நிதி சேர். ராஸிக் பரீத், வட்டுக்கோட்டைப் பிரதிநிதி ஏ. அமிர்தலிங்கம் பருத்தித்துறை யின் ஒரேயொரு கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதி நிதி பி. கந்தையா, கல்முனை எம். பி. கேற் முதலியார் காரியப்பர், மட்டக்களப்பு பிரதி நிதி எஸ். இராஜதுரை, கோப்பாய் கோமான் சி. வன்னியசிங்கம், நுவான்வெலப் பிரதிநிதி டாக்டர் என். எம். பெரேரா, கொழும்பு மத்தி முதல் பிரதிநிதி பீற்றர்கெனமன், வெள்ளவத்தைப் பிரதிநிதி டாக்டர் கொல் வின் ஆர். டி. சில்வா, வெலிமடைப் பிரதி நிதி கே. எம். பி. ராஜரத்ன, மூதூர் எம்.பி. எம். ஈ. ஏச். முகமட்அலி, ஊர்காவற்றுறைப் பிரதிநிதி வி. ஏ. கந்தையா, பட்டிருப்புப் பிரதிநிதி எஸ். யூ. எதிர்மன்னசிங்கம், சாவ கச்சேரிப் பிரதிநிதி வி. என். நவரத்தினம், ...இன்னும் பலர்.

மேன்மை தங்கிய தேசாதிபதியின் சிம் மாசனப் பிரசங்கம் மீதான விவாதம், பராளுமன்றப் பிரதிநிதிகளினால் கடும் விமர் சனத்திற்குள்ளாகியது.

''இந்தநாட்டின் சிறுபான்மை மக்கள் இருபத்தைந்து இலட்சம் பேரின் அடிப்படை யுரிமைகள் இச்சட்டத்தால் பறிக்கப்படுகின் றது. தமிழ் பேசும் இச்சிறுபான்மை மக்கள் இரண்டாந்தரப் பிரசைகளாக்கப்படுகின்றார் கள். அறுபது இலட்சம் சிங்களப் பெரும் பான்மைகள் இதன் மூலம் சிறுபான்மை மக் களின் நல்லெண்ணத்தை இழக்கிறார்கள். இந்த நாடு ஒரு மொழி, ஓரின நாடன்று. இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களும் சிங் கள மக்களும் நீண்ட காலமாக தெளிவான பிரதேச வரையறைக்குள் வாழ்ந்து வருகின் றார்கள்'' தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வநாயகம் பாராளுமன்றத்தில் உரை யாற்றிக் கொண்டிருந்தார்.

இந்த நாட்டின் ஆதிக்குடிகள் தமிழரும் சிங்களவருந்தாம். சிங்களக் குடியேற்றம் விஜயனின் வருகையோடு ஆரம்பமாகிறது. விஜயன் கி. மு 3 ஆம் நூற்றாண்டில் இலங் கைக்கு ஆரியக் குடியேற்றத்தின் முதற் பிரதி நிதியாக வந்தான்.

வவுனியாப் பாராளுமன்றப் பிரதிநிதி சுந்தரலிங்கம் தன் அறிவிலும் அனுபவத் தாலும் பாராளுமன்றத்தைக் கலகலப்பாக்



**ஆசிரியை :** ரங்கா ஏன் நீ வீட்டுப்பாடம் செய்து வரவில்லை?

**ரங்கன் :** நான் அகதி முகாமில இருந்து தான வாறன்.

**-செல்வானந்**

குபவர். அவர் பேச எழுந்த போது பாராளு மன்றம் கலகலத்ததை உணர்ந்தான், நாக ராசன்.

''இந்த நாட்டில் மிகப் புராதன காலத் திலிருந்து தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின் றனர். சிங்களவர்கள் இங்கு எப்போது வந் தார்கள் என்பது எமக்குத் தெரியும். தமி ழர் எப்போது வந்தார்கள் என்பது உங்க ளுக்குத் தெரியுமா! எங்களுக்கு இன்னொன் றும் தெரியும். கௌதம புத்தர் வந்த போது, இந்த நாட்டில் தமிழர்கள் இருந் தார்கள்...''

சுந்தரலிங்கத்தின் பேச் சினைத் தொடர்ந்து இந்த விடத்தில் பெரும் சிரிப்பு பாராளுமன்றத்தில் நிறைந் தது.

''ஓ... அலட்சியப்படுத்து கிறீர்கள். சபாநாயகர் அவர் களே, கௌரவ பிரதம மந்திரி யிலிருந்து கீழ்மட்டம் வரை இது ஒரு வியாதியாகிவிட்டது. எனது நெருங்கிய நண்பர் கௌரவ பிரதம மந்திரிக்கும் தெரியும், புத்தர் வந்தபிறகே இந்த நாட்டிற்கு விஜயன் வந் தான் என்று, ஒல்லாந்த நில வளவையாளர்கள் பதிந்து வைத்துள்ளகுறிப்புகளிலிருந்து மூன்றுமைல் நீளமானதண்ணி மூறிப்புக் குளத்தில் புத்தர் நடந்தார் என்று தெரிகிறது. அவர்கள் நாகரிகமானவர்கள். கதிர்காமக்கந்தனை வழிபட் டார்கள். கதிர்காமக்கடவுள் ஒரு இந்து...''



சபையில் சரசரப்பு எழுந்தது. சில பாராளுமன்ற அங்கத்தவர்கள் எதிர்க் குரல் தந்தார்கள். சுந்தரலிங்கம் அவர் களின் பேச்சில் குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வுகளிலுள்ள உண்மையை ஆராயத் தான் வேண்டும், என அவன் எண்ணிக் கொண்டான் வவுனியாப் பிரதிநிதியின் பேச்சுக்கள் மிகவும் சுவையானவை.

யாழ்ப்பாணப் பிரதிநிதி ஜி.ஜீ. பொன் னம்பலம் தனது பேச்சினைத் தமிழில் ஆரம் பித்தார்; கம்பீரமான அவரது ஆங்கில வுரைக்குமுன், அவரது தமிழ்ப்பேச்சுமழலை தான்.

''சபாநாயகர் அவர்களே! இன்றை க்கு இந்த ஸ்தானத்தில் எங்களுடைய பாஷையின் நிலவரத்தைப்பற்றிப் பேசுகிற நேரத்தில், நான் ஆங்கிலத்தில் பேசுவ தற்கு முன்பாக இரண்டு நிமிஷம் எம்மு டைய மற்றப் பிரதிநிதிகளுக்கும், பொது வாகத் தமிழ் பேசும் மக்களுக்கும், சொல்ல வேண்டியது என்னவென்றால், 2500, 3000 ஆண்டு காலமாக இலங்கைத்தீவில் தனிப் பெரும் பாஷையாக விளங்கின. எங்களு டைய தாய்ப்பாஷையை, இந்தத்திட்டம் மூலமாக இலங்கையை அழிக்கிறதுக்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக் கிறதாக நான் விளங்குகிறேன் என்பதை பிரதிபலிக்கமாகச்சொல்ல விரும்புகின்றேன் அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நாங்கள் இந்த சபையில் மாத்திரமல்ல அது சிறிய விஷயம் – இலங்கை முழுவதிலும் வெளியி லும் எதிர்ப்போம் என்பதை இச் சபை யிலே கூறி, நான் சொல்ல வேண்டியதை ஆங்கிலத்தில் பேசுகிறேன்...''

'' கேளுங்கள் கேளுங்கள் '' ... என வவுனியா பிரதிநிதி குரல்தந்தார்.

விடுதியிலிருந்து கொண்டு யன்னலூடாக அலையெறியும் கடலை அவதானிக்கும் போது அந்த ஒலி இந்த நாட்டில் இன்று எழுந்திருக்கும் இனவாதக் குமுறலாகப்பட்டது, அமைதியான குளத்தில், விசமிகள் யாரோ கல்லெறிந்து குழப்பிவிட்டதான உணர்வு தோன்றுயது. இனந்தெரியாத வேதனை இதயத்தில் படிவதாக நாகராசன் உணர்ந்தான்.

மட்டக்களப்புப் பிரதிநிதி எஸ், இராசதுரை தன் பேச்சில் குறிப்பிட்ட கலக்கத்தின் அர்த்தம் இப்போது புரிந்தது.

''சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய தேசாதிபதியின் சிம்மாசனப் பிரசங்கம், இந்தநாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களிடையே என்றுமில்லநத பெருங் கவலையையும் கலக்கத்தையும் எதிர்காலம் பற்றிய ஏக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது...'' என மட்டக்களப்புப் பிரதிநிதி குறிப்பிட்டார். அவர் தமிழ் பேசும் மக்களின் இரண்டு ஜீவாதாரப் பிரச்சினைகளை எதிரொலித்தார்.

''கடந்த பல்லாயிரமாண்டுகளாக இந்த நாட்டிலுள்ள சிங்களம் பேசக்கூடிய மக்களும் தமிழ் பேசக்கூடிய மக்களும் அண்ணனும் தம்பியும் போல்இங்கு வாழ்ந்து வந்திருக்கிறுர்கள். ஆனுல் கடந்த சில ஆண்டுகளாக அந்தச் சூழ்நிலை மாறிக் கொண்டு வருகின்றது. மொழி ஒரு இனத்தின் விழி. எனவே அவர்களுடைய தாய் மொழியையும், கலை, கலாச்சாரம் ஆகிய வற்றையும் அவர்களுடைய சந்ததியினருக்கும் பாதுகாத்து வைக்கும் உரிமை அவர்களுக்குமுண்டு...'' தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமையை வலியுறுத்திய அவர், தமிழ் மக்களின் பிரதேசவுரிமையையும் வற்புறுத்தினுர். ''பரம்பரை பரம்பரையாகத் தமிழ் பேசும் மக்கள் வாழக்கூடிய பிரதேசங்களில் சிங்களம் பேசும் மக்களை அரசாங்கம் குடியேற்றி, பொருளாதார, கலாச்சார, சமூக நெருக்கடிகளால் தமிழ் பேசும் இனத்தை நசுக்கிவிட முயலும் முன்னைய அரசாங்கத்தின் குடியேற்றத் திட்டத்தில் எதுவித மாற்றமும் தேசாதிபதி குறிப்பிடவில்லை.''

பாராளுமன்ற நிருபராகக் கலந்து கொள்வதால், இந்தநாட்டின் வரலாற்று நிகழ்வுகளை அவனுல் புரிந்து கொள்ள முடிந்தது.

தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றதோ என அவன் கவலைப்பட்டான். கடல் குமுறி அலையெறிந்தது.

## 3

காலி வீதியின் சீரானதளத்தில் அதிக குலுக்கமின்றி பஸ் சென்று கொண்டிருந்தது. சுரேந்திரனின் தோளில் தலையைச் சாய்த்து, அவன் இடது கரத்தைத் தன் மடிமீதிட்டுப் பற்றிய வாறு சோமாவதி அமர்ந்திருந்தாள்.

''சோமா...'' என்று மெதுவாக அவன் அழைத்தான்.

''ம் ''

''இப்படியே என்றுமிருந்துவிட வேண்டும்...''

அவள் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்துச் சிரிப்பை உதிர்த்தாள். அவள் சிரிக்கும் போது, மக்களின் வரிசை முத்தெனப்பளீரிட்டது. சிவந்த கன்னங்களில் கடும் பொட்டிட்டது போலக் குழிகள் தோன்றின. நெற்றியில் சிலும்பிக் கிடக்கும் கூந்தலை, வலக்கரத்தால் படியவாரிவிட்டாள். உயர்த்திய கரத்தின் வளவளப்பும் நிறமும், கரத்தில் இருந்த தங்கவளையல்களைப் பழித்தன.

''என்றும் ஒன்ருக இருக்கத்தான், போகின்ருேம், சுரேன்''

''உன் வீட்டார் ஒப்புக் கொள்வார்களோ?''

அவள் எதுவும் பேசவில்லை. பஸ் யன்னலூடாக வெளியே வெறிக்கப் பார்த்தாள். விழிகள் கலக்கத்துடன் விழித்தன. அவள் பேச்சை மாற்ற விரும்பியவளாக,'' இன்றைக்கும் ஒபிசுக்கு லீவு போட்டு விட்டு, ஊர்சுற்றியிருக்கிருேம்'' என்ருள்.

''தெகிவளை பயினவாத? ''

அவர்கள் தெகிவளையில் இறங்கினுர்கள். சோமாவதி, தெகிவளையிலுள்ள பெண்கள் விடுதியொன்றில் இருக்கிருள்,

''நீங்கள் போங்கள்... சுரேன் நான் போவேன்''

''இல்லை சோமா, உன்னை உன் விடுதியில் கொண்டு வந்து விட்டு விட்டுப் போகின்றேன்...''

அவர்கள் மெதுவாக நடந்து விடுதியை அடைந்தார்கள். விடுதியினுள் நுழைந்த போது ஹோலில் இருவர் அமர்ந்திருந்தார்கள். சோமாவதி நெருப்பை மிதித்தவள் போலத் துடித்துப் போனுள்.

''அம்மே. ''

சோமாவின் தாயும், தமையனும் அவர்கள், இருவரையும் கவலையுடன் ஏறிட்டுப்பார்த்தனர்.

—தொடரும்

# மாற்றங்கள்


தமிழ்ப்பிரியா

மெல்லத் தாளம் போடுவது போன்ற ஓசையில் யாரோ கதவைத் தட்டுகின்ற சப்தம் கேட்டு, உள்ளே ஈஸிச்செயரில் அமர்ந்து 'அபிராமி அந்தாதி' படித்துக் கொண்டிருந்த பராசக்தி எழுந்து வந்து கதவைத் திறந்தாள். வாசலில் நின்ற புது முகமான இரண்டு இளைஞர்களும் அவளை ஆழமாக உற்றுப்பார்த்தார்கள். தூய வெள்ளையில் சிறிது சிறிதாக தூரத் தூரப் பூப்போட்ட வோயில் சாரி... நெற்றியில் பளிச்சிடுகின்ற விபூதிப் பூச்சு, வெறுமையான கழுத்து.., அமைதியில் தோய்ந்து போயிருக்கும் முகம்.., இங்கே இந்த வீட்டில் யாரிந்தப் பெண்? என்ற கேள்வியாய் அலைந்த பார்வையை விலக்கிக் கொண்டு-

''மிஸிஸ் பாலசிங்கத்தை சந்திக்கவேணும்.'' என்றார்கள் தயங்கிய குரலில்.

சட்டென்று நெஞ்சில் ஏதோ ஒன்று உதைத்தது போல் பதறிப்போனாள். இருபது வருடத்தின் பின்பு மறந்து போன இந்தப்பெயரை ஞாபகப் படுத்திக் கொண்டு வருகின்ற இவர்கள் யார்?' என்ற கேள்வி நெஞ்சில் சின்ன வெம்மையாய் கோடு போட்டது. ஒரு நிமிஷம் தயங்கி நிதானமாக அவர்களைப் பார்த்தவள் ''உள்ளே வாருங்கள்!'' என்றாள் மிக மெதுவாக.

''சொல்லுங்கள்! என்ன விஷயம் தம்பியவை?'' குரலில் எந்த ஆர்வமும் இல்லாத கேள்வி பதட்டமில்லாமல் உதயமாகியது.



'வந்து..பாலசிங்கம் மாஸ்ரருக்கு வருத்தம் கடுமை. பெரியாஸ்பத்திரியிலை அட்மிட் பண்ணியிருக்கிறம். அதை அவருடைய மனைவியிடம் சொல்லிப் போட்டுப் போகத்தான் வந்தனாங்கள்...''

''ஓ! அப்படியே! அதுக்கு அவா என்ன செய்ய வேணும் என்று எதிர் பார்க்கிறியள்?''

இந்தக் கேள்வியால் சற்று அதிர்ந்து போனவர்களாய் மிரண்டுபோன பார்வையோடு அவளையே பார்த்தார்கள். இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது? என்று தெரியாத திகைப்போடு மௌனமாக விழித்த அவர்களிடம் மிக மெதுவான குரலில் அமைதியாகச் சொன்னாள்—

''இத்தனை வருஷமாய் அவளுக்கு யார் யார் அனுசரணையாக இருந்தார்களோ.., அவர்களிடமே போய் இதைச் சொல்லுங்கோ தம்பியவை..!''

இந்த இளைஞர்கள் தொடர்ந்தும் என்ன பேசுவது என்று தெரியாமல் திகைத்தார்கள். ''யார் இந்தப் பெண்?'' என்ற கேள்வி அவசரமாக மனதிற்குள் விரிய ஆரம்பித்தது'

''வந்து நீங்கள் யாரென்று .?' மனதிற்குள் ஆரம்பம்போட்ட கேள்வியைநிவர்த்தி செய்ய முயன்றான் ரமண்.

''நீங்கள் தேடிவந்த அதே பெண்''

உண்மையாகவா? என்று வினவுவது போல் அவர்களின் விழிகள் அகலமாக விரிந்து நின்றது. இப்படியொரு கோலத்தோடு, இவ்வளவு முதுமையோடு அப் பெண் இருப்பாள் என்று அவர்கள் சிறிது கூட எண்ணிப் பார்க்கவில்லை.

சில நிமிஷம்வரை அதிர்வோடு மௌனமாக நின்று தங்களை சுய நினைவிற்கு இழுத்துக் கொண்டு வந்தவர்கள் ''அப்ப நாங்கள் போட்டு வாறம்..!'' என்றபடி எழுந்து கொண்டார்கள்.

அவள் அதே மாருத அமைதியோடு தலையை மட்டும் அசைத்தாள். அவர்கள் வெளியில் வந்து முற்றத்தில் நின்ற சைக்கிளை எடுத்துக் கொண்டு அதை உருட்டியபடி மௌனமாக நடந்து போவதை அவள் வாசலில் நின்று பார்த்துக் கொண்டு நின்ருள். அவர்களின் இந்த மௌனக் கோலத்தைப் பார்க்க அவர்களுக்குப் பாவமாக இருந்தது. அவர்களைத் திரும்ப ''உங்களை யார் தம்பியவை என்னிடம் போகச்சொன்னது?'' என்று கேட்போமோ என நினைத்தவள் மறு நிமிஷமே அந்த நினைப்பைநிராகரித்துவிட்டு உள்ளே வந்து மீண்டும் அந்த ஈஸிசேயரில் அமர்ந்து கொண்டாள்.

கை தாஞகவே அசைந்து 'அபிராமி அந்தாதி'யை தடவிப் பார்த்தது. அதை எடுத்து, பக்கங்களைப் புரட்டி, பார்வையை ஓடவிட மனம் மறுத்தது. யதேச்சையாக ஏற்பட்ட காயம் போல் நெஞ்சு மெல்ல உரிந்தது, பொட்டுப் பொட்டாய் ரத்தம் கசிய முற்படுவது போன்ற எரிவாய்...! அந்த எரிவின் பிம்பமாய் நயனங்கள் நீராட முயன்றன.

'இப்போ என்ன நடந்து விட்டது? யாரோ இரண்டு முகம் தெரியாத இளைஞர்கள். அவள் மறந்து போயிருந்த 'திருமதி'ப் பட்டத்தை ஞாபகப் படுத்தியிருக்கிருர்கள். அவ்வளவுதானே?'' அவள் சட்டென்று தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள்.

தன்னை சுயநிலைக்கு கொண்டு வந்து விட்ட நினைப்போடு அவள் எழுந்து வேலைகளைக் கவனிக்க உள்ளே போனுள். மனம் போலிச் சமாதானத்திற்கு ஆள்படமறுத்து சின்ன அவஸ்தையில் குலுங்கியது. 'பாறையாகிப் போன மனம் கசிய முற்படுகிறதா?' என அவள் தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

'இல்லை இல்லவே இல்லை!' அவளையும் மீறி தலை வேகமாக அசைந்தது. மறந்து போன காலத்தை - வாழ்வின் அவல நாட்களை திடீரென மீண்டும் ஞாபகப்படுத்தியதால் மனம் தாங்க முடியாமல் அலறுகின்றது. அவ்வளவுதான்.

''அந்த இளைஞர்களை என்னிடம் போகும்படி யார் அனுப்பி வைத்திருப்பார்கள்? என்று திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்தாள். ஒரு வேளை அவர்' இல்லை...'அவன்' தான் அனுப்பி வைத்திருப்பானே? வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் அவளிடம் மன்னிப்பை யாசிப்பதற்காக...!

''மன்னிப்பு!'' நினைத்ததும் மனம் 'ஜிவ்' வென்று தகிக்க ஆரம்பித்தது. தலை மெல்ல சுற்றுவது போன்ற ஒரு உணர்வு தெரிந்தது. பதட்டப்படாமல் மெல்லமெல்ல நடந்து வந்து மீண்டும் அந்த ஈஸிசெயரில் சாய்ந்து கொண்டாள். முடிந்தவற்றை நினைக்க மீண்டும் மயக்கம் வர ஆரம்பித்து விடுமோ என்று அவளுக்கு அச்சமாக இருந்தது. இத்தனை வருடங்களாக அமைதியாக இருந்த மனதை அந்த இளைஞர்கள் வந்து ஏன் குழப்பினுர்கள்? என்று சின்னக் கோபம் ஏற்பட்டது. உதட்டைக் கடித்தபடி விழிகளை மெல்ல மூடிக்கொண்டாள்.

இருபத்தொரு வயதில் அவளுக்குத் திருமணம் நடந்தது. ''இந்த அழகான பொம்பிளைக்கு இது ஒரு மாப்பிள்ளையே!'' என மற்றவர்கள் முணுமுணுத்துக் கொண்ட போது கூட அவள் மென்மையாகச் சிரித்தாள். ''தன் கணவன் படித்த பட்டதாரி ஆசிரியர்' என்ற நினைப்பே அவள் நெஞ்சில் மகிழ்ச்சிச் சுருதியாய் இழையோடியது. இந்த மகிழ்ச்சியெல்லாம் எண்ணி ஒரு வருடங்கள் தான்... அவள் வாழ்க்கை குப்பென்று அஸ்தமித்து விட்டது.

'அதிபர்' பதவி கிடைத்து இரு வாரங் இருக்கும். அந்த சந்தோஷத்தைக் கொண்டாடி விட்டு அவர் திரும்பிக் கொண்டிருக்கும் போது விதி இடையில் நின்று அழகு காட்டியது.

இப்படித்தான் சிலமணி நேரத்திற்கு முன்பு வந்த மாதிரி இரண்டு இளைஞர்கள், சைக்கிளில் ஓடி வந்து விடயத்தைச் சொன்னுர்கள். அவருக்கு 'அக்ஸிடென்ற்' என்றதும் அவள் நெஞ்சம் அலறித் துடித்


தது. என்ன செய்வது என்று தெரியாத திகைப்பில் விழிகள் பொழிவாளுக உதிர தடுமாறி நின்ருள். 'குழந்தை' இல்லையே என்ற கவலையை மிஞ்சிக் கொண்டு இது ஒரு பெரும் கவலையாய்... அவள் இதயத்தைப் பிழிந்தது. பக்கத்தில் உள்ள அக்காவின் துணையோடு ஆஸ்பத்திரியை அடைந்தாள்.

அவளின் பிரார்த்தனைக்கு செவிசாய்த்து அவளின் மாங்கல்யத்தை காப்பாற்றிய இறைவன் அவனின் விழிகள் இரண்டையும் நிரந்தரமாகவே பறித்துக் கொண்டான். இந்த பாரிய இழப்பை மெல்ல ஜீரணிக்க முயன்ருள். இந்த அஸ்தமிப்பின் கொடூரத்தை மனதிற்குள்ளேயே புதைத்து விட்டு உடைந்துபோன கணவரை மெல்ல மெல்ல சமாதானப்படுத்தினுள். விழிகளின் இழப்பு தாக்கத்தை ஏற்படுத்தாதிருக்க தானே விழிகளாக முன்ளுல் நின்ருள். ஆனுல் அவள் நினைத்ததற்கு மாருக ஒவ்வொரு நிகழ்வும் நடந்தது. அவன் எத்தனையோ யார் தொலைவில் விலகிப் போய் கொண்டிருந்தான். மிக வேகமான விலகலாக..!

ஒருநாள் "இந்த வயதிலை.., அழகியான நீ ஒரு குருடனின்ரை கையைப் பிடித்துக் கொண்டு 'இவன் தான் என்ரை கணவன்' என்று சொல்ல இருக்கும் என்ன?" என்ருன்.

அவள் சட்டென அவனை ஏறஇறங்கப் பார்த்தாள்... இவன் ஏன் இப்படியெல்லாம் கதைக்கிருன் என்று யோசித்தாள். ஒரு விளுடிகூட தாமதிக்காமல் அழுத்தமான குரலில் 'இல்லை' என்ருள். பதில் சொன்ன வேகத்தோடு அந்த இடத்தை விட்டு விலகி உள்ளே போனுள். தொடர்ந்தும் அவள் அதில் நின்ருல் தேவையில்லாத வார்த்தைகளைப் பிரயோகித்துக் கொண்டிருப்பான்.

நாட்கள் மெல்ல மெல்ல நகர மாதங்கள் உதயமாகி உருண்டு கொண்டிருந்தது. அவன் முன்பைவிட வெம்மையாகிக்கொண்டு வந்தான். வார்த்தைகளால் அவளை உலுப்பி நிறுத்தினுன் சுளீர் என சுடுகின்ற மனதை அவள் இரகசியமாகத் தடவிக் கொண்டாள். பொறுமை - சகிப்புத் தன்மையை தனக்கே



வேட்பாளர் : அன்பார்ந்த வாக்காளப் பெருமக்களே என்னைத் தேர்ந்தெடுத்து நாடாளுமன்றம் அனுப்பினுல் நான் சந்திரமண்டலத்திலிருந்து அரிசி கொண்டு வருவேன் அப்படிக் கொண்டு வராவிட்டால் அதற்கான காரணத்தையாவது சொல்லுவேன்

நிரந்தரச் சொந்தமாக்கி கொண்டாள். இந்த வெம்மையெல்லாம் மனத்தின் பலவினத்தில் வெளிப்படுவது என நினைத்தாள். அவளின் நினைப்பு நீளாமல் மண்மேடாய் பொலபொலத்தது.

இன்னமும் ஒருநாள்—"இப்ப யாரோ ஒரு ஆம்பிளையின் குரல்கேட்டுது.யாரவன்?"

அவன் குரலின் கடுமை அவளை என்னவோ செய்தது. ஆனுலும் பதில் சொன்னுள்.

"மணியம் சித்தப்பாதான் வந்தவர். ஏன்? உங்களோட தானே முதலிலை வந்து கதைத்தவர்."

"ஓ! எனக்குக் கண் தெரியாது தானே! நீ யாரெண்டு சொல்கிருயோ... அதை நம்ம வேண்டியது தானே?"

அவளுக்கு நெஞ்சு வெலவெலத்தது, கதைக்கப் பிடிக்காமல் மௌனமாக நின்ருள்.

"அவன் இப்ப என்ன தேவைக்கு உன்னைப் பார்க்க வந்தவனும்..?"


"இப்ப ஏனடா மகளைப் பார்க்க வந்தனீ? என்று நீங்களே அவரிடம் கேட்டிருக்கலாமே!"

அவள் சொல்லிமுடிக்கவில்லை. மேசையில் இருந்த ரம்ளரை எடுத்து அவளை நோக்கி வீசினான். 'சுளீர்!' என்று முழங்காலில் ஏற்பட்ட நோவைப் பொறுமையோடு தடவிக்கொண்டு சமையலறையினுள் நுழைந்துகொண்டாள். அவன் தொடர்ந்து கேவலமான முறையில் வார்த்தைகளைக் கொட்டுவது அவளுக்குக் கேட்டது.

மனம் பொறுக்க முடியாதவளாக அவள் உள்ளே இருந்து அழுதாள். இவன் இப்படியெல்லாம் ஏன் நடந்துகொள்கிறான்? என திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்தாள். சித்தப்பா, மாமா, அக்காவின் கணவர்யார் வந்தாலும் - எந்த ஆண்குரல் கேட்டாலும் மிகக் கீழ்த்தரமாக அவர்களுடன் இணைத்து ஏசினான். சண்டை பிடித்தான். கையில் அகப்பட்டதால் எறிந்தான். அடித்தான். இப்படியொரு தலைவிதி தனக்கே அமைந்துவிட்டதே என்பதை நினைக்க அவள் மனம் வெந்து அலறியது. ஒன்பது வருடங்களாக இந்த நரக வாழ்க்கையை தன்னால் எப்படிச் சகிக்க முடிந்தது என எண்ணிப் பார்த்தாள். தொடர்ந்தும் இதற்குள் உருண்டு கொண்டிருக்க தன் மனதிற்குப் பலமில்லை என்பது அவளுக்குத் தெரிந்தது. வாழ்க்கையுமில்லாமல். நிம்மதியுமில்லாமல் தான் மோசமாக பாதிப்படைந்து வருவேனோ .. என்று அவளுக்கு அச்சமாக இருந்தது.

அவள் மனம் மிக நொந்து போயிருந்த வேளையில் தான் ரவி லீவில் வந்தான். மருத்துவக் கல்லூரியில் இரண்டாவது வருடம் படித்துக் கொண்டிருக்கிறான், நீண்ட நாட்களின் பின்பு வந்திருக்கிறான். சித்தி ..சித்தி .. என்று சின்ன வயதில் அவளின் மடியில் வளர்ந்தவன் இப்போ எவ்வளவு பெரியவனாகி விட்டான். வளர்ந்து .., குரலும் மாறி.. மீசையும் அரும்பி ! ரவியில் அவளுக்கு அபார அன்பு. தன் பிள்ளை என்ற நினைப்பு. அவன் அன்று முழுவதும் அவளுடன் நின்றான். பேராதனைப் புதினங்கள் எல்லாம் சொல்லிச் சொல்லிச் சிரித்தான். அவளும் அன்று குதூகலமாகவே இருந்தாள். அவ்வளவு தான்.

ரவி போகும்வரை அமைதியாக இருந்த வீடு அமர்க்களமாகியது. வந்தவனை ரவியல்ல என்று மறுந்து சுயமான தன் வார்த்தைக் கொட்டுதலை அவன் தொடங்கியதும்



மனேஜர்: வங்கியில் வைத்த உங்கட நகைகளைப் பற்றி ஒன்றும் கவலைப்பட வேண்டாம். உங்கள் ஐந்துவயது மகள் கலியாணத்துக்கு வரும்போது கட்டாயம் திருப்பக்கிடைக்கும்.

அவளுக்கு அதீத கோபம் ஏற்பட்டது. சித்தப்பா, மாமா, அத்தான் .. எல்லோரும் முடிந்து—இப்போ மகன் தாரமா? எவ்வளவு கீழ்தரம். அவள் சட்டென பொறுமையை விட்டு விலகினாள். முதல் முதலாய் எதிர்த்து வார்த்தைப் போர் நடத்தினாள்.

''அந்த அக்ஸிடென்றில் உங்களின்ரை கண் மட்டும் பறிபோகேல்லை. அறிவு, புத்தி, மனிதாபிமானம்... எல்லாமே போட்டுது. இத்தனை வருடமாய் இந்தக் கொடுமையை எல்லாம் சகித்துக் கொண்டு பொறுமையாய் இருந்ததாலை தான் இது இவ்வளவு தூரம் வந்தது. அப்பா அம்மா விட்டபிழை இப்ப தான் எனக்குத் தெரியுது. அழகான ஒருத்திக்கு அழகில்லாத ஒருவனை செய்து வைத்தது முதல் பிழை. பதினாறு வயது வித்தியாசத்திலை மாப்பிளை எடுத்தது அடுத்த பிழை. வீண் சந்தேகத்துக்கும், இந்தக் கொடுமைக்கும் இதுதான் காரணம். என்ரை கணவன் ஒரு பட்டதாரி என்று பெருமைப்பட்டன். தூ... நீங்களும் ஒரு படித்த மனுஷனே? உங்களை கலியாணம் செய்த நேரம் நான் கன்னியாய் இருந்திருந்தாலும் நிம்மதியாய் இருந்திருப்பேன்...''

அவள் குமுறி முடியவில்லை. அவன் மேசை மீது இருந்த டோர்ச் லையிட்டை எடுத்து அவள் நின்ற பக்கமாக விட்டெறிந்தான். அது அவள் நெற்றியில் பட்டு தெறித்தது. 'குபீ'ரென இரத்தம் பீரிட்டது. அவள் 'ஐயோ!' என அலறியவளாய் நிலத்தில் வீழ்ந்தாள்.

அவள் மயக்கம் தெளிந்து கண் விழித்த போது அக்காவும் ரவியும் அருகில் நின்றார்

கள். அவளை அக்கா ஆதரவாக வருடிக் கொடுத்தாள். ''மூன்று மணி நேரமா நான் தவித்துக் கொண்டிருந்தேனடி. இப்போ தான் மனதுக்கு ஆறுதலாக இருக்கிறது.''

அவள் அக்காவின் கையைப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

''அக்கா! இனி எனக்கு அவன் வேண்டாம். அவனோடை இனியும் என்னால் வாழ முடியாது. என்ரை கண்ணிலை இனி ஒரு காலமும் அவன் விழிக்கக் கூடாது. இனி எனக்கு அவன் வேண்டாமக்கா..!

''அழாதை சக்தி!'' அக்கா அவளை சமாதானப்படுத்தி முடியுமுன்பே அவள் மீண்டும் மயக்கமானாள். மூன்று நாட்கள் அவள் ஹொஸ்பிற்றலில் இருந்து விட்டு வீடு திரும்பிய போது அவன் வீட்டில் இல்லை. அவளுக்கு பெரும் ஆறுதலாக இருந்தது.

அன்றிலிருந்து இன்றுவரை அவள் அவனைப் பார்க்கவில்லை. பார்க்க விரும்பியது இல்லை.

நினைவில் ஊர்ந்த பழைய நினைவுகளை உதறி விட்டு அவள் நேரத்தைப்பார்த்தாள். 3.30 ஆகிவிட்டது.

இரண்டு நாட்கள் மனம் அமைதியின்மையோடு நகர்ந்தது. மூன்றாம் நாள். காலை பத்து மணியிருக்கும். அவள் முற்றம் கூட்டிக் கொண்டிருந்த போது... அந்த இளைஞர்கள் மீண்டும் வந்தார்கள். முற்றத்தில் நின்ற அவளைப் பார்த்ததும் சற்றுத் தடுமாறியபடி ''பாலசிங்கம் மாஸ்ரர் செத்துப்போனார்..!'' என்றார்கள் மெதுவான குரலில்.

அவளுக்குச் சட்டென மனமும் உடம்பும் விறைத்துப் போன மாதிரியிருந்தது. தலையினுள் ஏதோ ஒன்று அங்கும் இங்கும் ஓடுவது போல் தெரிந்தது. கையில் வைத்திருந்த விளக்குமாற்றை கீழே போட்டு போட்டு விட்டு விட்டுப் படியில் அமர்ந்து கொண்டாள். இரண்டு நிமிஷம் வரை மௌனமாக இருந்தவள் அவர்களை நிமிர்ந்து பார்த்தாள். பார்வையில் உணர்வற்ற ஒரு இறுக்கம் தெரிந்தது. முகத்தில் விரக்தியின் வெளிப்படைக் கோடுகள்.

''தம்பியவை! நீங்கள் நினைக்கிற மாதிரி நான் இன்றுதான் விதவை ஆகேல்லை. இருபது வருடத்துக்கு முதல்-உங்களின்ரை பாலசிங்கம் மாஸ்ரர் போகும் போது சும்மா போகேல்லை. என்ரை கழுத்திலை இருந்த தாலியையும் அறுத்துக் கொண்டு தான் போனவர். அன்றைக்கு நான் விதவையாய் போனன். அன்றையிலிருந்து இந்த நெற்றியிலை நான் குங்குமம் வைக்கிறேல்லை. கழுத்திலை நகை போடுறேல்லை. ஏன்? இந்த வளவை விட்டே நான், வெளியிலை போறேல்லை. இப்ப அல்ல... இருபது வருடங்களுக்கு முதலே நான் விதவையாகிவிட்டன் தம்பியவை..!''

அவளின் குரலில் ஒரு வெதுவெதுப்புத் தெரிந்தது. பார்வையில் இன்னமும் கொஞ்சம் கூடுதலான இறுக்கம் தெரிந்தது. அவர்கள் அவளையே பார்த்துக் கொண்டு நின்றார்கள். என்ன கதைப்பது என்று தெரியாமல் .. 'போட்டுவாறம்' என்று கூடச் சொல்லாமல் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு நடந்தார்கள். கேற்றைக் கடந்து றோட்டில் போனதும் ஷங்கர் சொன்னான்...

''என்ன இருந்தாலும்-எவ்வளவு கோபமெண்டாலும் கணவன் செத்துப் போனான் என்றவுடனை ஒரு பொம்பிளை இப்பிடி அசையாமல் நிற்கமாட்டாள். மனிசிக்கு கண்ணாலை ஒரு துளி கண்ணீர் கூட வரேல்லையேடா? இப்படி ஒரு பொம்பிளையை நான் இண்டைக்கு வரை காணேல்லை...'

'இல்லை ஷங்கர் அவசரப்பட்டுச் சொல்லக் கூடாது. இப்படியான சந்தர்ப்பங்களிலைதான் நாங்கள் சற்று யோசித்துப் பார்க்க வேணும். கணவனே பெரிது என்று நினைக்கிற ஒரு குடும்பத்திலை... பண்பாட்டோடை வளர்க்கப்பட்ட ஒரு வயதான பெண் தன் கணவன் இறந்து போனான் என்றவுடனை 'ஐயோ' என்று அலறித் துடிக்காமல் இருக்கிறாள் என்றால்... அது ஏன்? இதைத்தான் நாம் யோசிக்க வேணும். இவள் வயதானவள். பழமையில் வாழ்ந்தவள். அப்படியான அவளின் மனதைக் கொடூரமாகச் சித்திரவதை செய்திருக்கிறார் பாலசிங்கம் மாஸ்ரர். அதனாலை தான் இந்தப் பெண் மனதில் இப்படியொரு வெறுப்பும், விரக்தியும், வெறுமையும் ஏற்பட்டிருக்குது. ''நான் இப்ப அல்ல இருபது வருடத்துக்கு முந்தியே விதவையாய் போட்டன்'' என்று சொன்னாளே.... அது போதுமடா ஷங்கர் அவளின் நிலையை உணருவதற்கு...!''

ரமண் ஏதோ பிரசங்கம் செய்வது போல் ஷங்கருக்குப் பதில் சொன்னான்.

''உண்மைதானடா ரமண். மனத்திலை நிம்மதி, சந்தோஷம் கணவன் என்ற அன்பும் இல்லாமல்... சும்மா போலிக்காக— மற்றவர்களுக்கு காட்டுவதற்காக கணவன் செத்தவுடனை அவள் 'ஐயோ' என்று அலறத் தயாராக இல்லை!''

''யெஸ். அதே தானடா ஷங்கர். என்ன கோபம், பிரிவு, வெறுப்பு இருந்தாலும் கணவன் இறந்தவுடன் ஒப்பாரி வைக்கிற பெண்களைத்தான் நாங்கள் இதுவரை பார்த்திருக்கிறம். ஆனால்... இது ஒருவயதான பெண்ணிடம் ஏற்பட்டிருக்கிற புதிதான ஒரு 'மாற்றம்' என்ன?''

இந்த மாற்றத்தை விரும்புபவர்களாக அல்லது வரவேற்பவர்களாக இருவரும் கதைத்தபடி பாலசிங்கம் மாஸ்ரர் இருந்த வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

பெத்தானியா.

ஜெரூசலத்தை அடுத்துள்ள கிராமம்.

அங்கு மார்த்தாளின் வீடு.

மார்த்தாளும், சகோதரி மரியாளும் தங்களது சகோதரன் லாசரை இழந்த வேதனையால் தலைவிரிகோலமாக இருக்கின் றனர்.

அவன் இறந்து நான்கு நாட்கள் கடந்து விட்டன.

லாசரின் பிரிவை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கன்றை இழந்த பசுபோல் அரற்றும் அவர்களிருவரையும் அங்கே நின்ற அயலவர்கள் தேற்ற முற் படுகின்றனர்.

கூறியவர் தொடர்ந்து ''லாசர் உறங்குகி றான். அவனை எழுப்பவே அங்கு செல்லுகி றேன்'' என்றார்.

அவருடைய கூற்றைப் புரிந்துகொள்ள முடியாத சீடர்கள், உறங்குகின்றவனை ஏன் எழுப்ப வேண்டும்.? நன்றாகத் தூங்கட் டுமே'' என்றார்கள்.

''அவன் உறங்கவில்லை. இறந்து விட் டான்'' என அவர்களுக்குப் புரியும்படியாக மீண்டும் கூறினார் ஏசு.

● ● ●

தேவகுமாரன் ஜூதேயா நகரத்திற்குள் வந்து விட்டார் என்பதைக் கேள்விப்பட்ட மார்த்தாள் அவர் இருக்குமிடம் சென்று அவரின் காலடியில் விழுந்து கதறியழுதபடி ''ஆண்டவரே! நீங்கள் இங்கிருந்திருந்தால் என் தம்பி இறந்திருக்கமாட்டான்'' — என்றாள்.

## எண்ணங்கள் — யாழ்வாணன்

''ஏசுநாதர் இங்கிருந்திருந்தால் லாசர் இறந்திருக்க மாட்டான். அவர் அவனைக் கட்டாயம் காப்பாற்றியிருப்பார்'' என மார்த்தாள் நினைத்து உளம் வெதும்பு கிறாள்.

● ● ●

'லாசர் நோய்வாய்ப்பட்டுள்ளான் என்று மார்த்தாள் அனுப்பிய செய்தி ஏசு நாதரின் செவிக்கெட்டியபோது அவர்''அவ னைப் பீடித்திருக்கும் நோயின் முடிவு இறப்பு அல்ல. மாறாக இறைவனின் சிறப்பு. தேவ குமாரனின் பெருமையை வெளிப்படுத்து வதற்கான வாய்ப்பு எனக்கூறினார்.

இரண்டு நாட்கள் கழிந்தன.

ஏசுநாதர் தம் சீடர்களைநோக்கி 'நாம் ஜூதேயா நகரம் செல்வோம்'' என்றார்,

''அங்கே செல்ல வேண்டுமா? யூதர் கள் தங்களுக்குக் கெடுதல் செய்யத் தரு ணம் பார்த்திருக்கின்றார்களே! மீண்டும் அங்கு செல்ல வேண்டுமா?'' என வினவினர் சீடர்கள்.

அதற்கு ஏசுநாதர் பகல்நேரம் பன்னி ரண்டு மணித்தியாலங்கள் தானே. அந்தச் சமயத்தில் ஒளியில் பார்த்து எந்தவித மான துன்பங்களும் ஏற்படாவண்ணம் எச் சரிக்கையாக செல்லலாம்தானே. இரவில் ஒளிகுறைந்த காரணத்தால் நடந்து சென் றால் ஏதாவது இடர்கள் ஏற்படும். எனக்

''உன்தம்பி மீண்டும் உயிர்ப்பான்'' என்றார் ஏசு.

''ஆண்டவரே நீங்கள் இங்கிருந்தால் என்தம்பி இறந்திருக்கமாட்டான்''என்றான்.

அவரது கூற்றைப் புரிந்துகொள்ள முடி யாத மார்த்தாள் 'உலகம் முடியும் சம யத்தில் அவன் மீண்டும் உயிர்த்தெழு வான்'' என்றாள்.

''உயிர்ப்பும் உயிரும்நானே. என்னை நம் புகின்றவன் இறந்தாலும் பிழைப்பான். உயிருடைய ஒருவன் என் மீது நம்பிக்கை கொண்டால் அவன் ஒரு நாளும் அழி யான். என்றும் வாழ்வான். இதனை நம்பு கிறாயா'' என்றார்.

''ஆம், பிரபு நீங்கள் தான் தேவகுமா ரன். நீங்கள் என்றும் வாழும் இறைவனின் மைந்தன். உங்களுடைய வருகைக்காகவே உலகம் காத்து நிற்கிறது எனநான் நம்பு கிறேன் எனக் கூறியவள் மீண்டும் தன் வீட்டிற்கு ஓடிச் சென்று சகோதரியான மரியாளிடம் தேவகுமாரன் வந்துள்ளதைத் தெரிவித்தாள்.

அவளது கூற்றினைக் கேட்ட மரியாள் பைத்தியம் பிடித்தவளைப் போல, எழுந்து ஓடினாள். அவள் கண்முன்னே ஏசுவின் திரு வுருவம் தென்பட்டது. பரிமள தைலம் பூசிய தனது அழகிய கூந்தலினால் அவரின் பாதங்களைத் துடைத்த சம்பவம் நினைவிற்கு வந்தது.

பித்துப் பிடித்தவள் போல், ஓடிச் சென்று ஏசுவின் பாதங்களில் விழுந்து 'நீங்கள் இங்கிருந்தால் அவன் இறந்திருக்கவே மாட்டான்'' எனக் கூறி அழுதாள்.

சிறிது நேர அமைதிக்குப்பின், ஏசு பிரான் அவளைநோக்கி ''லாசரை எங்கே புதைத்துள்ளீர்கள்?'' என்றார்.

லாசரை புதைத்திருந்த இடத்திற்கு அவரை அழைத்துச் சென்றாள். அவருடன் கூடவே அங்கு நின்றவர்களும் தொடர்ந்து சென்றனர்.


அவர்களுடன் கூடிச்சென்ற யூதர்களிற் சிலர் குருடர், செவிடர்களைக் குணப்படுத்திய இவர் ஏன் லாசரை இறங்கும்படி விட்டு விட்டார்? என ஏளனமாகக் கூறினர்.

கல் அகற்றப்பட்டது. பிணநாற்றம் அங்கு குழுமியிருந்தோரை விரட்டியது. ஆனாலும் சூழ நின்ற மக்கள் அடுத்து என்ன நிகழப்போகின்றது? என்பதை எதிரும் ஆவலுடன் ஏசுவையே நோக்கிய வண்ணம் நின்றனர்.

ஏசு தன் விழிகளை உயர்த்தி வானத்தைப் பார்த்து ''தந்தையே! என் மன்றாட்டத்தைக் கேட்டதற்கு உமக்கு என் நன்றி என் வேண்டுகோளை நீர் என்றும் நிறைவேற்றுவீர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இங்குள்ள மக்கள் பொருட்டு இதை நான் சொல்லுகின்றேன். நீர்தான் என்னை அனுப்பினீர் என்பதனை அவர்கள் நம்பும்படி செய்யும்'' என வேண்டினார். பின் கல்லறையை நோக்கி ''லாசரே எழுந்து வெளியே வா'' என அழைப்பு விடுத்தார்.

# விந்தை மனிதர்கள்

ஞ. இராசநந்தினி



புத்தனே புனிதனே
உத்தமன் நீ—
போதி மரத்தின் கீழ்
ஞானம் பெற்றவன்.
அன்பு, கருணை
அகிம்சை இவையெல்லாம்
உனக்கு—
எலும்பும், தோலும்,
இரத்தமும், தசையும்!
பிறர்படும் துன்பம்
உனக்குக் கசக்கும்
புண்படப் பிறரை
வதைப்பதை வெறுப்பாய்.
ஏழ்மையைக் கண்டால்
இரக்கம் கொள்வாய்
இதனால் உனக்கு
இமயப் பெருமை.
பகையை வெறுக்கும்
பக்குவம் உனது
பாரில் இந்தப்
பண்புகள் அரிது
உனது நிழலில்
ஞானம் தேடி
நீ—
நடந்த சுவட்டில்
கால் தடம் பதித்து
நடக்கின்றார் இங்கே
விந்தை மனிதர்கள்...

கல்லறையை அண்மிய ஏசு, லாசரின் கல்லறையை மூடியிருந்த கல்லை அப்புறப்படுத்தும்படி கட்டளையிட்டார்.


மார்த்தாள் அவரிடம் வந்து ''லாசர் இறந்து நான்கு நாட்களாகி விட்டன. இப்போது கல்லறையைத் திறந்தால் அழுகிய அவனது உடலிருந்து துர்நாற்றம் வீசுமே'' என்றாள்.

''நான் உனக்குச் சொல்லவில்லையா? நீ நம்பிக்கை வைத்திருந்தால் கடவுள் பெருமைஅடைவதைக் காண்பாய்'' என்றார்.

குழுமிநின்ற மக்கள் விழிகள் கல்லறை மீது மொய்த்தன. லாசர் அங்கிருந்து எழுந்து மெதுவாக ஏசுவை நோக்கி வந்தான்.

''அவனைப் பிணைத்திருக்கும் கட்டுக்களை அவிழ்த்து விடுங்கள்'' என அங்கு நின்றோரிடம் கட்டளையிட்டார் ஏசு.

மார்த்தாள், மரியாள், லாசர் ஆகியோர் தேவகுமாரனின் பாதார விந்தங்களில் விழுந்து வணங்குகின்றனர்.



# முதல் தவறு

ராகுல்ய அரவிந்தன்

அவள் பெயர் நகுலி. தாய் வழிச் சமூகத்தின் நிலைப்பாட்டில் அக்கூட்டத்தின் தலைவியாக அவள் இருந்தாள். அவள் கரத்தில் கனமான ஈட்டியொன்று இருந்தது. அவளை அடுத்து, காட்டு புஸ்பமாக அழகிய இளமங்கையொருத்தி துள்ளல் நடையுடன் மானாகப் பின் தொடர்ந்தாள்.

விடியற்காலையின் வைகறைக் குளிர்ச்சியைப் பொருட்படுத்தாது, அடர்கானகத்தினூடாக கொனா நதியின் (காலஓயா) மருங்கே மேற்குத் திசை நோக்கி, முப்பது பேர் கொண்ட ஒரு மக்கட் கூட்டம், ஒருவர் பின் ஒருவராக எறும்புச் சாரியாகச் சென்று கொண்டிருந்தது. கீழை வானில் எழத் தொடங்கிய சூரியகதிர்கள், அடர் மரங்களூடாக நதிக்கரையைத் தழுவ வலியற்றிருந்தன.

ஐந்து ஐந்தரை அடி உயரமும், ஆரோக்கியமான உடல் வாகும், கரிய நிறமும் கொண்ட அவர்கள் திராவிட இனத்தவர். நியோலிதிக் காலத்தின் இறுதிக்கட்டத்தில் கி. மு. 3 ஆம் நூற்றாண்டளவில், தாமிரபரணி என்ற இலங்கை மண்ணில் நிலை கொண்டிருந்த மக்கட் கூட்டத்தினர். அவர்களைப் போன்ற மக்கட் கூட்டத்தினர் வடக்கே ஜம்புக்கோளம் (யாழ்ப்பாணம்), கிழக்கே கோகர்ணம் (திருகோணமலை) தெற்கே மகாகமம் (திசமாறகம), மேற்கே மகாதீர்த்தம் (மன்னார்) முதலான பகுதிகளிலும் நிலைகொண்டிருந்தனர். நாம் சந்திக்கும் இந்த மக்கட் கூட்டத்தினர் கல்யாணி நதிக்கும் (களனி கங்கை) கதம்ப நதிக்கும் (மல்வத்து ஓயா) இடைப்பட்ட தம்பபண்ணை என்ற பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

நதிக்கரையோரமாக மேற்குத் திசை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் அம்மக்கட் கூட்டத்தினரை, சரியான தடத்தில் வழிகாட்டி அழைத்துச் சென்று கொண்டிருந்த முதலாள் ஒரு பெண். வயோதிபத்தின் சுவடுகள் உடலில் பதிந்திருந்தாலும், கம்பீரமான உருவத்தையும், விழிகளில் காண்போரை அடக்கும் தலைமைத்துவமும் அப்பெருந் தாயிடம் தெரிந்தன.

அவர்களைப் பின் தொடர்ந்து ஆண்களும் பெண்களும் கரங்களில் ஈட்டி, வில், அம்பு ஏந்தி தோள்களிலும் தலைகளிலும் பொதிகளைச் சுமந்தவர்களாகப் பின் தொடர்ந்தனர். யானைத் தந்தங்கள், மான், சிறுத்தைப் புலி, கரடி என்பனவற்றின் தோல்கள், ஆமை ஓடுகள், கராம்பு ஏலக்காய்ப் பொதிகள் என்பனவற்றை அவர்கள் சுமந்து சென்றனர்.

''அம்மா, இன்னும் எவ்வளவு தூரம் இப்படியே நடக்கவேண்டும். கால்கள் வலியெடுக்கின்றன'' என்று அந்த அழகிய இளமங்கை சிணுங்கினாள். பொங்கிப் பூரித்துக் குவடு சரியா அவள் மார்பகங்கள் குலுங்கின.

தலைவி தரித்து நின்று, மகளைத் திரும்பிப் பார்த்தாள். அவள் பார்வையில் கண்டிப்புச் சுடர்விட்டது; மறுகணத்தில் பாசம் சுரந்தது.

''என்ன பெண் நீ, குவேனி. காட்டில் சில பொழுது நடப்பதற்கே சோர்ந்து போகிறாய். நாளைக்கு நீ எப்பிடித்தான் இந்தக் கூட்டத்தின் தலைவியாக இருக்கப் போகிறாயோ? காட்டுவிலங்குகளிடமிருந்தும், நம்மை அடிக்கடி தாக்கும் மோரியா (மயில்), பாலிப்கோயகா (காகம்) மக்கட் கூட்டத்தினரிடமிருந்தும் எப்பிடித்தான் காப்பாற்றப் போகிறாயோ?'' நகுலி தொடர்ந்து நடந்தாள்.

''எனக்கு இது பிடிக்கவேயில்லை, அம்மா என்னிலும் பார்க்க தாரதத்தன் கம்பீரமானவன். பலசாலி... உனக்குப் பிறகு அவனையே இந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்க வைப்பேன்...'' என்றாள் குவேனி.

''பைத்தியக்காரி போலப் பேசாதே. கேட்பவர்கள் சிரிக்கப் போகிருர்கள். ஆண்களினுல், தலைமை தாங்க முடியுமா? பலம் என்பது உடல் வலிமையைப் பொறுத்தது அல்ல. பெண்ணே புத்திக்கூர்மையைப் பொறுத்தது. பெண்கள் தான் இயல்பாகவே புத்திசாலிகள். ''மதியத்திற்குள் நாம் சேர வேண்டிய இடத்தை அடைந்து விடலாம். பேசாது வா...''

தூரத்தில் யானை ஒன்றின் பிளிறல் எழுந்தது. நதியில் நீரருந்திக் கொண்டிருந்த காட்டெருமைகள், ஒரு கணம் தலைகளை நிமிர்த்திப் பார்த்துவிட்டு, காட்டினுள் ஒதுங்கிச் சென்றன.

மதியம் நெருங்கிக் கொண்டிருந்தவேளையில், அவர்கள் பெரியதொரு ஆலமரநிழலை அடைந்தார்கள். விழுதுகள் விட்டுப் பரந்த மாபெரும் விருச்சம் அது. அதனை நெருங்கியதும் நகுலி தன் காத்தில் இருந்த ஈட்டியை நிலத்தில் வைத்துவிட்டு முழந்தாளிட்டு வணங்கினுள். அவளைப் பின்பற்றி ஏனையோரும் வணங்கினர். அடர்காட்டின் நடுவே, பெரியதொரு இராச்சதனைக் கிளை பரப்பி வளர்ந்திருந்த அந்த விருச்சம் அவர்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

அம்மரத்தின் கீழ் அவர்கள் இளைப்பாறினர்கள். தேனில் ஊறிய மாமிச வற்றலும் தினைமாவும் எல்லாருக்கும் மதிய உணவாக வழங்கப்பட்டன. தனக்கு வழங்கப்பட்ட உணவை இலையில் தாங்கிய தாரதத்தன், குவேனியின் அருகில் வந்து அமர்ந்து கொண்டான்.

''தாரதத்தா, சிறிது தள்ளித்தான் உட்காரேன்...'' என்று குவேனி சிரித்தாள். அவன் முகம், உச்சி வெயில் பட்ட, உதிர்ந்த காட்டிலை போன்று சருகாகியது. என்ருலும் சிரிக்க முயன்ருன்.

''ஏன், குவேனி...?''

'உன் கண்கள் போகின்ற இடங்கள் எனக்குக் கூச்சத்தைத் தருகின்றன. மார்பகங்களை நீ கண்டதில்லையா? ஏன் அப்படி உற்றுப் பார்க்கிருய்?''

அவன் தலையைக் குனிந்து கொண்டான். அவனைப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாக விருந்தது. அவளுடைய காதலைப் பெறுவதற்காக அவன் எத்தனையோ அசாதாரண காரியங்களைச் செய்திருக்கின்ருன். செங்குத்தான மலைச்சாய்வுகளில் உயிரை மதிக்காது ஏறி தேன்வதைகளை அவளுக்காகக் கொண்டு வந்து தந்திருக்கிருன். ஒவ்வொருநாள் அதிகாலையும் அவள் தலையில் சூடுவதற்காக ஒவ்வொரு தாமரைமலரைத் தவருது பறித்துத் தந்து வருகிருன்.

''தாரதத்தா, நாங்கள் மிருகங்களல்ல. நாகரிகமானவர்கள். கோகர்ண மக்களைப் போன்ருே, மகாகம மக்களைப் போன்ருே நாங்கள் தோல்களை ஆடைகளாக அணிவதில்லை. பருத்திப் பஞ்சில் நூல் இழைத்து அதனை நெய்து ஆடையாக அணிந்து வருகிருேம். அவர்களைவிட நாங்கள் முன்னேறியவர்கள்.''

''அதை ஏன் சொல்கிருய், குவேனி?''

''காதலுக்கும் நாகரிகம் தேவை. ஏனே எனக்கு உன்னைப் பிடிக்கவில்லை. இந்தக் கூட்டத்திலுள்ள ஒரு இளைஞனையும் பிடிக்கவில்லை. உங்களது கரியநிறம் எனக்குப் பிடிக்கவில்லை ''

அவன் முகம் தொங்கிவிட்டது. அவள் அங்கிருந்து எழுந்து ஆற்றை நோக்கி நடந்தாள். அரையில் கட்டியிருந்த துணியை அவிழ்த்துக் கரையில் வீசிவிட்டு, ஆற்று நீரில் மீனெனத் தாவினுள்.

சூரியன் மேற்கு வானில் சரியத் தொடங்கிய வேளையில், நகுலி கூட்டத்தினர் தம்பபண்ணைக் கடற்கரையை அடைந்தார்கள். அடர்காட்டை விட்டு வெளியேறியதும், வெள்ளை வெளேரென பரந்து விரிந்து கிடந்த மணற்பரப்பும், அலையெறிந்து கரை தாவும் சமுத்திர விரிவும் குவேனிக்கு உற்சாகத்தைத் தந்தன. அவள் தாயை முந்திக் கொண்டு கடற்கரை மணலில் தாவியோட முயன்ருள்.

''பொறு, குவேனி...'' எனத் தலைவி கட்டளையிட்டாள், ''தாரதத்தா, அந்நியர்கள் எவராவது கடற்கரையில் தென்படுகிருர்களா எனப் பார்த்து வா...''

தாரதத்தன் விரைந்து சென்ருன்.

''எவராவது இருந்தால் எமக்கென்ன?''

''அந்நியர் முன் நாங்கள் வருவதில்லை.''

''அப்படியென்றால் அவர்களுடன் எப்படி வியாபாரம் செய்வீர்கள், அம்மா?''

''நீ இன்றுதான் இங்கு வந்திருக்கிறாய்... எப்படியென இருந்து தான் பாரேன்...''

''எப்படியென்று சொல்லுங்கள்...''

''மரக்கலங்களில் அவர்கள் சமுத்திரத்தைத் தாண்டி வருவார்கள். நீரில் அவற்றை நிறுத்திவிட்டு, சிறிய தோணிகளில் கரைக்குவருவார்கள்...''

''அவர்கள் யார்? எங்கிருந்து வருவாகள்?''

யாருக்குத் தெரியும்? கடலுக்கு அப்பால் எங்கள் நாடு போல வேறு நாடுகள் இருக்கிறன தாம். அவர்கள் தான் .. வனியா (ரோமர்)க்களும், நவிகா (அராபியர்) க்களும் நாங்கள் அவர்கள் முன் செல்வதில்லை. நாங்கள் கொண்டு வந்திருக்கும் பொருட்களைக் கடற்கரையில் வரிசையாக வைத்து, நமக்குத்தேவையான பொருட்களை ஆமை ஓடுகளில் வரைந்து அவற்றின் முன் வைத்துவிட்டு, காட்டிற்குள் மறைந்து கொள்வோம் அவர்கள் கொண்டுவந்த பொருட்களை எங்களுக்குக் காட்டி, நாங்கள் வைத்திருக்கும் பொருட்களைச் சுட்டிக்காட்டுவர். அவர்கள் காட்டும்பொருள் எங்களது பொருளுக்குச் சரியாகுமாயின் நாங்கள் காட்டோரமிருந்து வெள்ளைக் கொடியை அசைப்போம். அவர்கள் புரிந்து கொள்வார்கள். இவ்வாறு தான் நூறுண்டுகளுக்கு மேலாக நடந்து வருகிறது ''

''முன்னின்று வியாபாரம் செய்தால் என்ன?'' என்று குவேனி கேட்டாள்.

''அந்நியர் முன்பா? அவர்களோடு நெருங்கக் கூடாது, பெண்ணே. அது நமது நாட்டையும் நமது பழக்கவழக்கங்களையும் அந்நியமாக்கிவிடும் ''

''அவர்கள் இப்போது வருவார்கள் என்பது எப்படித் தெரியும்?''

''வாடைக்காற்று வீசும்போது, கிழக்கே சென்றவர்கள்... சோளகம் வீசும்போது திரும்பி வருவார்கள், சோளகம் வீசத் தொடங்கி இருபது நாட்களாகின்றது! இன்



னும் ஒருசில நாட்களில் அவர்களது மரக்கலங்கள் இக்கடற்கரையில் தரிக்கும்...''

''அவர்கள் நம்மை ஏமாற்றிவிட்டு, நாம் கடற்கரையில் வைக்கும் பொருட்களைக் கவர்ந்து சென்றுவிடமாட்டார்களா?''

''அவர்கள் வியாபாரிகள். கொள்ளைக்காரரல்லர். அப்படிக் கவர்வாராகில் தோணிகளில் ஏறுமுதலே எங்களது அம்புகளுக்கு இரையாவார்கள்.''

தாரதத்தன் திரும்பி வந்தான். கடற்கரைப் பிரதேசத்தில் அந்நியர் எவருமில்லை எனத் தெரிவித்தான். அதன்பின் நகுலி சைகை செய்ய, அக்கூட்டம் கடற்கரையில் இறங்கியது. தாங்கள் காவிவந்த பொருட்களை வரிசையாகக் கடற்கரையில் வைத்தார்கள்.

கடற்கரையின் அழகு, குவேனியை மிகவும் கவர்ந்தது. சாய்கதிரின் மஞ்சள் நிறக் கதிர்களின் பரவலில், அது அவளுக்கு எல்லையில்லாத ஆனந்தத்தைத் தந்தது.

கடற்கரை மணலில், கடலாமைகள் வந்து சென்றமைக்கான சுவடுகள் தெரிந்தன.

''குவேனி, வருகிறுயா? உனக்குக் கடலாமை முட்டைகள் எடுத்துத் தருகின்றேன்...'' என தாரதத்தன் அவளை அழைத்தான்.

''சரி... ஆனுல், நீ என்னை அப்படி உற்றுப் பார்க்கக் கூடாது...''

அவர்கள் இருவரும் கடற்கரையோரமாக நடந்தனர். தாரதத்தன் கடற்கரை மணலை அவதானித்து வந்தவன், ஓரிடத்தில் தரித்து நின்றுன். கிளறி மூடிய மணல் திட்டு ஒன்றினை ஆவலோடு, கைகளால் வாரித்தூர் எடுத்தான். அவன் கணிப்புப்பிழைக்கவில்லை. நூற்றுக்கணக்கான ஆமைமுட்டைகள் அக்குழியினுள் கிடந்தன. பொறுக்கி எடுத்துக் கொண்டார்கள்.


''கடலாமைகள் கடற்கரை மணலில் வந்து, குழிதோண்டி அதில் முட்டையிடும்'' என்றுன் தாரதத்தன்.

''காட்டின் நடுவே குடியிருப்பு அமைத்து இருப்பதிலும் பார்க்கக் கடற்கரையில் குடில் அமைத்து வாழ்வது நல்லது. உணவுகள் இங்கு ஏராளமாகவுண்டு...'' என்றுள் குவேனி.

''கடற்கரையோரம். பாதுகாப்பில்லை. அந்நியர்கள் வருவார்கள்... கடற்கரையோரமாகக் குடியிருப்புகள் இருந்தால் அவர்கள் இந்த மண்ணில் நிரந்தரமாகத் தங்கவும் பார்ப்பார்கள்... நமது உணவை அவர்கள் பங்கு போடப் பார்ப்பார்கள்...''

குவேனி எதுவும் பேசவில்லை.

அவர்கள் திரும்பி வந்தபோது, இரவு படர்ந்திருந்தது.



''ஏன் பேயறைஞ்சமாதிரி விழுந்து கிடக்கிறியள் ?''

''பேயறைஞ்சாலும் பரவாயில்லை வலியக் கொளுவிகரெண்ட் எடுத்தன் அது அறைஞ்சு போட்டுது ''

— செல்வானந்

''குவேனி, உன்மனம் மாறுதா?'' எனத் தாரதத்தன் கேட்டான்.

''தாரதத்தா, எனக்காக நீ காத்திருக்காதே. எங்கள் கூட்டத்தில் நல்லதொரு பெண்ணுகத் தெரிந்தெடுத்துக் கொள்.''

ஏழாம் நாள் அதிகாலை, தூரத்தில் மரக்கலங்கள் கரையை நோக்கி வருவது தெரிந்தது. பாய்கள் விரித்த பெருங்கலங்கள் மதியம்போல் அவற்றிலிருந்து, தோணிகளில் ஏறிக் கரைக்குப் பலர் வந்தார்கள். அவர்கள் அராபிய வர்த்தகர்கள்.

நகுலிக்கூட்டத்தினர், காட்டோரம் மறைந்து கொண்டார்கள். பார்வைபடும் தூரத்தில் யானைத் தந்தங்கள், தோல்கள், முதலான பொருட்கள் வரிசையாகவிருந்தன.

''அவர்கள் யார், அம்மா?'' எனக் குவேனி கேட்டாள்.

''நவிகாக்கள்...''

குவேனி அவர்களை வியப்புடன் பார்த்தாள். ஆஜானுபாகுவான தோற்றப் பொலிவுடன், செக்கச்செவேலெனச் சிவந்து நிறத்தோடு, அவர்கள் காட்சி தந்தார்கள்.

'இப்படியொரு நிறத்தில் மக்கள் இருக்க முடியுமா?' என வியந்தாள்.

நகுலி விபரித்தவாறே வியாபாரம் நடந்தது. வெள்ளி, செம்பு மாலைகள், பாத்திரங்கள், கண்ணுடிகள், மட்பாண்டங்கள், சிறிய கத்திகள், மஸ்லின் துணிகள், அரிசித்தானி

யம் முதலியன அவர்கள் கொண்டுவந்த பொருட்களுக்குப் பதிலாக அங்கு வைக்கப்பட்டிருந்தன, அப்பொருட்கள் குவேனிக்கு வியப்பைத் தரவில்லை. அவற்றைக் கொண்டு வந்து வைத்துவிட்டுச் சென்ற நவிகாக்களின் சிவந்த எழில் நிறமே வாய்ப்பைத் தந்தது.

மாரி கழிந்து கோடை பிறந்தபோது, தம்பபண்ணைக் கடற்கரையில், காட்டோர உட்புறத்தில். சில குடியிருப்புகள் உருவாகியிருந்தன. நமக்கு ஏற்கனவே பரிச்சயமானவர்கள் அவற்றில் இருந்தார்கள்.

அக்கூட்டத்திற்கு இன்று குவேனி தலைவியாகவிருந்தாள். ஒரு மழைக்காலத்தில் கூட்டத்தினரோடு உணவு தேடிக் கானகத்துக்குள் சென்ற நகுலியை அரவந்தீண்டிவிட்டது. அவளைத் தூக்கி வந்தபோது வழியிலேயே அவள் நுரைகக்கி மரணித்துவிட்டாள். அதனால், அக்கூட்டத்தினரின் தலைவியாகக் குவேனி பொறுப்பெடுத்துக் கொண்டாள். தலைவியின் ஆவி, பழைய குடியிருப்பில் சுற்றி அலையும் எனப் பயந்ததால் அவர்கள் புதிய இடத்தில் குடியிருப்பை அமைத்துக் கொண்டார்கள்.

புதியவிடத்தைக் குவேனியே தேர்ந்தெடுத்தாள். காட்டுவிலங்குகளால் ஏற்பட்ட மனித அழிவு, புதியவிடத்தில் குறைவாக இருந்தமையால் அக்கூட்டத்தினர் குவேனியின் முடிவினைப் பெரிதும் மதித்தனர் கடல் உணவுகளும் ஏராளமாகக் கிடைத்தன.


குடிலைவிட்டு, குவேனி வெளியில் வந்தபோது, தாரதத்தன் ஒரு பெண்ணுடன் வாசலில் நிற்பது தெரிந்தது

‘‘அவள் என்னைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள், அம்மா’’ என்றான் தாரதத்தன்.

குவேனியின் நெஞ்சத்தில் ஒரு கணப்பொழுது, ஏமாற்றம் கவ்வியது. அவள் தாரதத்தனை ஏறிட்டுப் பார்த்தாள். எதுவுமே அவளால் பேசமுடியவில்லை.

அந்தவேளை சமுதா என்பவன் விரைந்து ஓடிவந்தான்.

‘‘அம்மா, கடற்கரையில் தோணிகள் சில வந்திருக்கின்றன. அவற்றில் அந்நியர்கள் உள்ளனர்...’’



*‘‘உடல் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்பவர்கள் யார்?’’*

*‘‘சிகரட் கொம்பனிக்காரர், சார்*

*‘‘என்ன? ’’*

*‘‘அவங்கதானே விளையாட்டுப் போட்டிகளுக்கும் கிரிக்கெற் மாட்சுகளுக்கும் ஸ்பொன்சர் செய்யிறவங்க’’*

*— ராஜபுவனன்*

‘‘வணியாக்களா? நவிகாக்களா? எனக் குவேனி வினவினாள். ‘இது வர்த்தகக் காலமல்லவே?’

‘‘யாரெனத் தெரியவில்லை, தாயே! புதியவர்கள். இந்த மண்ணிற்குப் புதியவர்கள் ...’’

குவேனியும் அவர்கள் கூட்டத்தினரும் தங்களைக் காட்டோர மரங்களுள் மறைத்துக்கொண்டு கடற்கரையைப் பார்த்தார்கள். பலர் கடற்கரையில் இறங்கி நிற்பது தெரிந்தது. சமுதா கூறியதுபோல இந்த மண்ணிற்குப் புதியவர்கள்தாம்.

யார் அவர்கள்?

குவேனியின் அருகில் நின்றிருந்த. அவள் வளர்க்கும் நாய், திடீரென அவர்களைப் பார்த்துக் குரைத்தது. அவள் அதை அடக்கினாள்.

நாயின் குரைப்பொலியை அந்த மனிதர்கள் கேட்டிருக்க வேண்டும். அவர்களின் தலைவன் போலக் காணப்பட்டவன், தனியனாக நாயின் குரைப்பொலி எழுந்த திக்கில் வரத் தொடங்கினான்.

கடற்கரை மணலில் கால்கள் புதைய அவன் நடந்து வந்தான். சிவந்த, உயர்ந்த வடிவம். அரையில் நீண்ட வாள் தொங்கியது.

தாரதத்தன் அம்பினை ஏற்றி வில்லினை வளைத்து, கட்டளைக்காக குவேனியைப் பார்த்தான். குவேனி ''பொறு'' எனத் தடுத்தாள்.

அதற்குள் அந்த மனிதன் காட்டோரத்தை அணுகிவிட்டான். அந்நியனை அவர்கள் அன்றுதான் முதன் முதல் வெகு அருகில் காண்கிறார்கள்.

''நீ யார்'' எனக் குவேனி கேட்டாள்.

அவள் கேள்விக்கு விடை கூறாமல், அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்கள் வெட்கமின்றி அவள் திறந்த மார்புகளில் பதிந்து, ஒருகணம் தடுமாறிப் பிரிந்தன.

' யார் நீ? ..''

''என் பெயர் விஜயன் ..'' என்றான் அவன்: ''லாலா நாட்டிலிருந்து வருகின்றோம் . பசியால் என்கூட வந்தவர்கள் தவிக்கிறார்கள் .. நாங்கள் ஆரிய வம்சத்தவர்கள். நீங்கள் யார்? இது எந்த நாடு?''

''இவனை உடன் அனுப்பி விடுங்கள், தாயே? '' என்றான் தாரதத்தன்.

''பசி என்கிறார்கள்.. சில நாள் தங்க இடமளித்து, உணவு கொடுங்கள் ..'' எனக் குவேனி கட்டளையிட்டாள்.

இந்த மண்ணின் உணவில் முதன் முதல் அன்றுதான் அவர்கள், பங்கு கொண்டார்கள்.

குவேனியின் குடிலில் விஜயன் அமர்ந்திருந்தான். அவன் தம்பண்ணைக்கு வந்து நான்கு நாட்களாகிவிட்டன.

''உங்கள் மன்னன் யார்?'' என ஆரிய விஜயன் கேட்டான். அக்கேள்வி அவளுக்கு வியப்பைத் தந்தது.


''மன்னா? அப்படி யென்றால் ?''

''தலைவன்... அரசன் ''

''இந்தக் கூட்டத்திற்கு நான் தான் தலைவி. பெண்தான் இங்கு பெரியவள் ''

''ஆண்களே எங்கள் சமூகத்தில் முதன்மையானவர்கள்' நாங்கள் பெண்களைப் பூக்கள் போலப் பேணுவோம் ''

அவள் அவனை வியப்புடன் ஏறிட்டுப் பார்த்தாள்.



வீட்டிலிருந்த குழந்தையிடம் வீட்டிற்கு வந்தவர் கேட்டார் — 'என்ன உள்ளே அப்பாவும் அம்மாவும் சண்டைபிடிக்கினம். என்னத்தைப்பற்றி?''

' எல்லாம் என்னைப் பத்தித்தான்.''

''உங்கள் மக்கட் கூட்டத்தில் எத்தனை வர்ணங்கள், சாதிகள் உள்ளன? ..

''சாதிகளா? அப்படி யென்றால்? ''

''பிரிவுகள் ''

''மனிதருள் பிரிவுகளா? '' எனக் குவேனி சிரித்தாள்.

''க்ஷத்திரியர், பிராமணர், வைசிகர், சூத்திரர் என நான்கு வர்ணப் பிரிவுகள் எம்மிடையே உள்ளது ..''

''அப்படியொரு சாதிப்பிரிவு நமது இனத்துக்கு வேண்டாம். நாங்களென்ன மிருகங்களா? மான், மரை, புலி எனப் பிரிப்பதற்கு? நாங்கள் மனிதர்கள் ''

''நீங்கள் பயிர் செய்வதில்லையா? எவ்வளவு நதிகள், வளமான மண்பூமி இங்குள்ளன '' என்று கேட்ட விஜயனைக் குவேனி ஏறிட்டுப் பார்த்தாள்.

'நீ கேட்பது எனக்குப் புரியவில்லை . விஜய லாலா எங்குள்ளது? ''

''வடக்கே பாரதம் என்ற பெருந் தேசத்தில் குவேனி நீங்கள் தாஸ்யுக்கள் (கறுப்பர்) ஆயினும் கவர்ச்சியானவர்கள்! நீ மிகவும் கவர்ச்சியானவள்''

குவேனி தலைகுனிந்து சிரித்தாள்.

நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் இப்படியொரு நிறமா? நெருப்புப்போல உன் நிறம் பிரகாசிக்கிறது. உன்னை நான் தொட்டுப்பார்க்கலாமா? ''

குவேனி தவறு செய்தாள், லாலா நாட்டிலிருந்து எக்காரணங்களுக்காக விஜயனையும் அவன் தோழர்களையும் அரசன் நாடு கடத்தினனோ, அக்காரியத்தை மீண்டும் புரிய, குவேனி வலிந்து காரணமானாள்.

ஏழுநாட்கள் கழிந்து விட்டன. விஜயனும் அவனுடன் கூட வந்தவர்களும் தம்பபண்ணையை விட்டு வெளியேறுபவர்களாக தெரியவில்லை. இரவு வேளைகளில் விஜயன் குவேனியின் குடிலில் தங்கிப் பிரிந்த செய்தியும் பரவியது.

செய்தி அறிந்த தாரதத்தன் கொதிப்படைந்தான். குடியிருப்பில் வேறுசில பிரச்சினைகளும் தலைதூக்கின. விஜயனுடன் கூடவந்தவர்களுக்குத் தனிமையைப் போக்கத் துணை தேவைப்பட்டது.

தாரதத்தன், குவேனியின் குடிலுக்கு விரைந்து வந்தான்.

''தாயே, நீங்கள் நடந்து கொள்வது சரியாகவில்லை ''

''எப்படி? –''

''அந்நியனுடன் உண்டு, உறங்குவது''

''அதில் என்ன தவறு! அவர்களும் இனிமேல் எங்கள் கூட்டத்துடன் தான் இருக்கப் போகிறார்கள், நான் விஜயனை மணந்துகொள்ளப் போகிறேன் ''

''அவர்கள் ஆரியர்கள். இந்த மண்ணுக்கு அந்நியமானவர்கள். எங்களிலும் வேறுபட்டவர்கள் ''

''கடலில் திசைமாறி இங்கு வந்து அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். இந்நாட்டில் இருக்க விரும்புகிறார்கள் நமது பெண்களை அவர்கள் ''

வேகமாக தாரதத்தன் குறுக்கிட்டான்.

''வேண்டாம் தாயே வேண்டாம் இது விஷப்பரீட்சை. நமது இனத்தையே அழிக்கும் செயல். அந்தத் தவறினை மட்டும் செய்து விடாதீர்கள். விஜயனை நீங்கள் மணந்து இந்த நாட்டில் ஆரியரின் வம்சம் நிலைபெறக் காரணமாகி விடாதீர்கள். வருங் காலச் சமூகம் உங்களைப் பழிகூற வைத்து விடாதீர்கள் அவர்களால் இங்கு தனித்து இருக்கமுடியாது இங்கு அவர்களுக்குப் பெண்கள் கிடையாவிடில் இந்த நாட்டைவிட்டு வெளியேறி விடுவார்கள் ''

குவேனி திடமாகச் சிரித்தாள்.

''நான் முடிவு செய்துவிட்டேன்.'' என்றாள் குவேனி. விஜயனின் அரவணைப்புச் சுகத்தை இழக்க அவள் தயாராகவில்லை.

''நமது உணவில் அவர்களுக்கு முதலில் பங்கு கொடுத்தீர்கள் பின்னர் உடலில் பங்கு கொடுத்தீர்கள் நாளை இந்த மண்ணில் பங்கு கொடுக்கமாட்டீர்கள், முற்றாகவே கொடுத்து இழந்து விடுவீர்கள் நீங்கள் செய்கின்ற இத்தவறு நமது இனத்தைக் காலம் காலமாக அழவைக்கப் போகின்றது ''

தாரதத்தன் மேற்கில் அஸ்தமனமாகும் சூரியனை ஏறிட்டுப் பார்த்துப் பெருமூச்செறிந்தான்.

மறுநாள் அதிகாலை தாரதத்தனும் அவனோடு சேர்ந்த ஒருபகுதி மக்களும் குவேனி கூட்டத்தைவிட்டுப் பிரிந்து, வடக்கே ஜம்புகோளத்தை நோக்கி, நடக்கத் தொடங்கினர்.

## ஷாம்பு பயன் படுத்துவது எப்படி? ★

தலைக்கு சிகைக்காய் பயன்படுத்துவது மறைந்து வருகிறது. ஏழை முதல் பணக்காரர் வரை ஷாம்பு தான் தலைக்கு.

போலியான ஷாம்புகளைத் தவிர்க்க வேண்டும். தரமானவை விலை கூடியிருந்தாலும் தலைமுடியின் ஆரோக்கியத்திற்கு அவையே உகந்தவை.

தண்ணீருக்குப் பதிலாக, வெந்நீரால் தலையை முதலில் நன்றாக நனைத்துக்கொண்டு சிறிதளவு ஷாம்புவால் தலை எங்கும் தேய்க்கவும். அதிக ஷாம்புவைக் கொட்டித் தேய்ப்பது பணத்துக்கும், முடிக்கும் கேடு


பின்னர் விரல்களால் தலையை நன்றாக மசாஜ் செய்வது அவசியம். இரத்தவோட்டம் அதிகரிப்பதுடன், பொடுகு போன்றன அகலும்.

குளிர்ந்த நீரில் தலையை நன்றாகக் கழுவவும்.

குளோரின் நீர் உள்ள இடங்களில் ஷாம்புவைத் தவிர்க்கவும். இல்லாவிட்டால் முடி கொட்டிவிடும்.


முடியைக் காயவிட இயற்கையை நாடவும். 'ஹெயர் ரையர்' தவித்தல் வேண்டும்.

– புத்தகப்புழு




நாளாந்த வாழ்வின்
இழந்த சக்தியை மீட்டுத்தர
வல்ல நல்லாரோக்கியத்திற்கு

**றோயல் தயாரிப்புகள்**





பண்டிகைத் தினங்களில்
உங்கள் இல்லங்களைப்
பண்பாட வைப்பது

**றோயல் தயாரிப்புகள்**




பிஸ்கெட், பாண், கேக் என
பிள்ளைகள் விரும்பும்
பல்சுவைப் பண்டங்களுக்கு

**றோயல் பேகிங் பவுடர்**




புத்துணர்ச்சி மிக்க புதுநாள்
மலர—புதுக்கோலம் காட்ட

**றோயல் கோப்பி**

# றோயல் இன்டஸ்றீஸ்

☎ 26679
221/1, ஆதமலி பில்டிங்ஸ்
ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13

கிளை: றோயல் இன்டஸ்றீஸ்: பொன்னையா லேன், வண்ணார்பண்ணை வடமேற்கு ஆனைக்கோட்டை

# 1· பெனிட்டோ அமில்கேர் முஸொலீனி

‘புதுமைப்பித்தன்’

எழுதும்

# பேஸிஸ்ட் ஜடாமுனி



கிறிஸ்து முனி பிறந்த பின் 1936 வருஷங்கள் கழித்து மே மாதம் 5-ந் தேதி மாலை 7-30 மணிக்கு...

அதாவது, அந்த மகானின் உபதேசங்கள் யாவும் வேரூன்றி, பரந்து, தழைத்து-ஆனல், மனித நினைவை விட்டு அகன்று போகப் போதிய காலம் கடந்து.......

அந்த மகானின் சீடன் பேதுரு— ‘கால தேவனின் பார்வையால் சலியாத குன்று’ என்று பரிவுடன் அழைக்கப்பட்ட பேதுரு— நம்பிக்கையின் அஸ்திவாரத்தையிட்ட அந்த நகரத்திலேயே... அதே ரோமாபுரியிலே...

மனித வம்சத்தின் அதிகார உன்மத்தத்தையும், தியாகத்தின் வரம்பையும், குறுகிய நோக்கத்தின் குரூரத்தையும், பூசாரித்துவத்தின் சேவையையும், கொலை வெறியையும், சிறப்பையும் சிறுமையையும் கண்டு சகித்துச் சகித்து, ஆயிரக்கணக்கான வருஷ அளவுள்ள மனித நாடகத்தின் படுதாவாக விளங்கும் அந்த நகரத்திலே...

சர்வாதிகாரியின் ‘பலாஜா வெனிஜியா’ என்ற அரசாங்க மாளிகையில்...

மேடையில் பேஸிஸ்ட் துவஜம்—கண்ணைப் பறிக்கும் மின்சார விளக்குகள்...

கீழே சதுக்கத்திலும், வீதியிலும் ஜன சமுத்திரம்—உற்சாக வெறியில் தலை தெறிக்கக் கோஷமிடும் மனிதக் கும்பல்... தூரத்திலே தெரியும் கொலீஸியம் வரை இப்படித்தான்

கூட்டத்தில் குழந்தைகள் நசுங்குகின்றன. போலீஸார் பாய்ந்து மீட்கின்றனர். கூட்டத்தைச் சமாளிக்க முயலுகின்றனர். மக்கள் அரசாங்கத்துடன் ஆனந்தத்தில் லயிக்கும் பொழுது ‘அதிகார’த்திற்கு அதிகாரமேது?

கீழ்க்கோடியிலே, தேன் துளும்பும் கிண்ணம் போல் சந்திரன் உதயமாகிறது.

மாடியில் அமைந்துள்ள முகப்பு மேடையில் பெனிட்டோ தோன்றுகிறான்.

‘‘இல் தூஸே! இல் தூஸே!’’ என்ற கோஷம் வானைப் பிளக்கிறது.

பேஸிஸ்ட் வணக்க முறைப்படி அவன் கையமர்த்துகிறான்...

உடனே நிசப்தம்...

‘‘இன்று மாலை நான்கு மணிக்கு வெற்றி வாகை சூடிய நம் படைகள் அடிஸ் அபாபாவில் பிரவேசித்தன. யுத்தம் முடிந்துவிட்டது என்பதை இத்தாலிய மக்களுக்கும் உலகிற்கும் அறிவிக்கிறேன். எதியோப்பியா இத்தாலிய தேசமாகிவிட்டது!’’

சர்வாதிகாரி உள்ளே சென்றுவிட்டான் உள்ளே...

பேஸிஸ்ட் அதிகாரிகளும், பேஸிஸ்ட் உலகப் பிரபலஸ்தர்களும் கைதட்டி, ‘தூஸே! தூஸே!’ என்று வரவேற்கின்றனர்.

‘‘போதுமே!...’’ என்கிறான் முஸொலீனி சடக்கென்று.

இவன்தான் சர்வாதிகாரி பெனிட்டோ முஸொலீனி,— நெப்போலியனைப் போல, ஐந்தடி ஆறு அங்குல உயரம். ஆனல் முரட்டு ஆசாமி. பரந்து விரிந்த மார்பு, ஊடுருவிப் பாயும் கண்கள், கத்தி வெட்டு வடுப்போல இறுக மூடப்பட்ட உதடு. முன்னே தள்ளிய முகவாய்க்கட்டை. ஐந்து குழந்தைகள் பெற்றவன். வயது ஐம்பதுக்கு மேலாகியும் மார்க்கண்ட வாலிபம்-சிறிது அசுர மோஸ்தரில்;

'பலாஜா வெனிஜியா' அவனுடைய பிரத்தியேகக் காரியாலயம்; 'வில்லாடொரோ லினியா' அவன் வாசஸ்தலம். இந்த மாளிகையை இளவரசன் அவனுக்குப் பரிசளித்தான். ஏனென்றால், அவனுக்கு அதை வைத்து நடத்த முடியவில்லை! இப்பொழுது திரும்பப் பெற்றுக்கொள்ள ஆசை தான். ஆனால் முஸோலினிதான் அதன் மீது காதல் கொண்டு விட்டானே! மேலும் அது காரியாலயத்திற்குச் சமீபத்தில் இருக்கிறது.

முஸோலினி உணவிலே சுத்த சைவம். அதுவும் ஒரு சமயம் வயிற்றுக் கோளாறு வந்தபின் ரொம்ப ஜாக்கிரதை. ஒரு அமெரிக்க நிருபருக்குப் பேட்டியளித்த பொழுது சொல்லுகிறான்:

அவனுக்குத் தேகப் பயிற்சியில் அபார மோகம். குதிரைச் சவாரி, கத்திச் சண்டை, நீச்சல், நடத்தல், தலைகெறிக்கும் வேகத்தில் நீண்ட மோட்டார் பிரயாணம், விமான யாத்திரை — ஏதாவது ஒன்று செய்து கொண்டேயிருப்பான் அரசாங்கக் காரியாலயத்திலும் மேஜை வேலை அதிகரித்துவிட்டால் இடையில் கத்திச் சண்டை பழக ஆரம்பித்து விடுவான்.

வாலிபத்திலேயே பெண்கள் என்றால் அர்ஜுன-ரசனை. இப்பொழுது ரொம்ப ஜாக்கிரதையாக வாழ்கிறான்.

சாதாரணமாக முஸோலினி ஆறு மணி நேரம் சர்க்கார் காரியங்களைக் கவனிப்பான்.

---

*தமிழில் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், திரைக்கதை வசனம், கட்டுரை, பத்திரிகை - என எல்லாத் துறைகளிலும் தனது தனித்துவமான பார்வையால், சமூகப் பிரக்ஞை கொண்ட எழுத்தால், 1930-ஆம் ஆண்டுகால இலக்கிய கர்த்தாக்களுக்கும், சமூகப் பிரமுகர்களுக்கும், பத்திரிகைத் தாபனங்களுக்கும் அளித்த அதிர்ச்சி வைத்தியத்தின் மூலம் இத்துறைகளை நவீனமயப்படுத்தியவர் புதுமைப்பித்தன் என்ற புனைபெயரில் மறைந்திருந்த சொ. விருத்தாசலம் பி. ஏ.*

*உலக அரசியலில் பாஸிசம் பிறந்த காலத்தில் வாழ்ந்தவர். அதன் கர்த்தா பெனட்டா அமில்கேர் முஸோலினியை நன்குணர்ந்திருந்தவர். பாஸிசத்தின் கொடுமைகளையும், அது எதிர்காலத்தில் ஏனைய நாடுகளிலும் மறைந்தும் மறையாமலும் செலுத்தப் போகும் அதன் ஆதிக்கத்தையும் அநர்த்தங்களையும் நன்குணர்ந்த தீர்க்கதரிசி. அதன்விளைவே - இந்தக் கட்டுரை. பலரின் பார்வையில் அன்றும் இன்றும் படாதது மறுபதிப்பு ஏறுதது.*

*பாஸிசம்...பாஸிசம்...என்கிறார்களே. அது என்ன... எப்படி யாரால் தோற்றுவிக்கப்பட்டது? —என்பதை அறிய ஆவல் கொள்ளாத வாசகர்கள் யார் இருக்கிறார்கள் இக்காலத்தில்? வரலாறு காவியச் சுவையென நாவலென மயங்கும் அற்புத எழுத்து நடை புதுமைப்பித்தனுடையது.*

—கௌரவ ஆசிரியர்.

---

''எப்போதும் நான் ஆரோக்கியமாக இருப்பதன் ரகசியம் இதுதான்: பழங்கள், பழங்கள், பழங்கள்...!''

மேஜையின் மேலிருந்த பழக்கூடையைக் காட்டிவிட்டு, ''அதுதான் என் உணவு. காலையில் ஒரு கப் காப்பி, பழம்; மத்தியானம் கொஞ்சம் கஞ்சி, பழம்! இராத்திரியிலும் பழந்தான். நான் மாமிசத்தைத் தொடவே மாட்டேன்; சமயா சமயத்தில் கொஞ்சம் மீன்'' என்று சொல்லி முடிக்கிறான்.

அப்புறம் ஓய்வு. அதாவது வாசித்தல். சிந்தனை அல்லது தேகப்பயிற்சி ஏதாவது ஒன்று இருந்து கொண்டேயிருக்கும்.

''உமக்கு என்ன சம்பளம் கொடுக்கிறார்கள்? மேல் வரும்படி உண்டா?'' என்ற கேள்வியை முஸோலினியிடம் கேட்டால், அதற்கு அவன் பதில் சொன்னால் இப்படியிருக்கும்:

''மாசம் 3000 லையர் (135 பவுன்) சம்பளம். அப்போதைக்கப்போது தேவையானதை எடுத்துக் கொள்ள சர்க்கார் கஜானாவில் வசதி செய்துகொண்டிருக்கிறேன்.''

இவன்தான் முஸோலீனி. இவன் ஆளும் நாடு? பூகோளப் படத்தைப் பார்க்கச் சாவகாசப்பட்டால். ஐரோப்பாக் கண்டத்தில் மத்யதரைக் கடல் என்று குறிப்பிடப்பட்ட பகுதியில், ஏறக்குறைய பூட்ஸ் கால் மாதிரி ஒரு தீபகற்பம் கடலுக்குள் நீண்டு கிடப்பதைப் பார்க்கலாம். அதுவும் அதைச்சுற்றிய இரண்டொரு தீவுகளும் சேர்ந்தது இத்தாலி. இத்தீபகற்பத்தின் வட எல்லை ஆல்ப்ஸ் மலையுடன் முடிகிறது. அதற்கப்புறம் ஸ்விட்ஸர்லாந்து சர்வதேச சங்கம் என்ற நைந்து தேய்ந்த சோனியின் பீடம் அங்கேதான் இருக்கிறது இத்தாலியில் போ, அடிஜ், டைபர் என்ற நதிகள் பாய்கின்றன. டைபர் நதிக்கரையில் தான் ரோமாபுரி. முன்னால் இத்தாலி திராட்சை ரசத்திற்கும், பூசாரித்துவத்துக்கும் பெயர் பெற்றது—இப்பொழுது சர்வாதிகாரத்திற்கும்.

பலாஜா வெனிஜியா முன்னால் வானைப் பிளக்க எழும் கோஷம், இத்தாலிய மக்களுக்கு பேஸிஸத்தின் மீதிருக்கும் அபார பற்றுதலைக் காட்டுவது போலிருக்கும் அங்குதான் விவசாயிகள், தொழிலாளர் கலகங்கள் யாவும் அப்படியே அமுக்கப்பட்டு, அரசாங்க ரகசியமாகக் காப்பாற்றப்படுகின்றன.

தொழிற்சாலையில் வேலை செய்கிறவர்கள் நிலைமைக்கு ஒரு காட்சி காட்டுகிறேன். ஸ்ரீ. ஸ்பிவட் என்ற ஒரு அமெரிக்கர், சர்வாதிகாரத்துவத்தின் 'குட்டுகளை' உடைத்து ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அதில் முதல் பகுதி இத்தாலியைப் பற்றி. தொழிற்சாலையில் பதிநான்கு வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகள் வேலை செய்வதை வர்ணிக்கிறார். கண்ணாடித் தொழிற்சாலையில் வேலை செய்கிறவர்களுக்கு, 'குளோவ்ஸ், என்ற கைஉறைகள் கூடக் கொடுக்கமாட்டார்களாம். சிறுவனுக்குக் கையில் கண்ணாடித் தூள்கள் குத்திவிடுகின்றன. தினசரி அவற்றை எடுப்பதுதான் அவனுக்கு வேலை. அவனும் அவன் பெற்றோரும் வாழும் பொந்திற்குச் சென்று பார்க்கிறார். அங்கு அவன் தகப்பனார், கண்ணாடித் தொழிற்சாலையில் வேலை செய்ததற்குப் பலியாக, உழைக்கச் சக்தியற்றுக் கிடக்கிறார். அவர்கள் மனது இடிந்து கிடக்கின்றது—அவர்கள் குடியிருக்கும் இடத்தைப் போல.

பட்டினி கிடப்பவர்களுக்குத் தலைவன் தோன்றுவான் என்ற நம்பிக்கை ஒன்றுதான் ஒட்டிக்கொண்டிருக்கிறது.

அப்படியானால் முஸோலீனியைத் தலைவன் என்று யார் ஒப்புக்கொள்ளுகிறார்கள்? அந்தச் சிறுவனின் இளவயதைப் பற்றிக் கூடச் சிரத்தை கொள்ளாத 'உடையவர்' கள்தான்.

## 2.
## கர்த்தர் ஓய்வெடுத்த அன்று

சர்வாதிகாரி, நவீன இத்தாலியின் சிருஷ்டிகர்த்தன், நாவலாசிரியன், கவிஞன், பத்திரிகாசிரியன், நாடகாசிரியன், அபேதவாதி, நாள்வேலைக் கூலிக்காரன், இத்யாதி, இத்யாதி நாம விகற்பாதிகளுககுள் அடங்கும் பெனிட்டோ முஸோலீனி என்ற நபர் இத்தாலி தேசத்திலுள்ள வரானோ டி காஸ்டா என்ற கிராமத்தில், 1883-ம் வருஷம், ஜுலை 29-ந் தேதி பிறந்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. அதாவது கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுகிற அநந்த கோடி மக்களுக்கும் ஓய்வுநாள். தெய்வம், தன் சிருஷ்டித் தொழிலை முடித்துவிட்டு, சிரமபரிகாரம் செய்து கொண்டதாக விவிலியம் கூறுகிறது. தெய்வங்களே ஓய்வெடுத்துக் கொண்ட அப்புனித தினத்தில் என்றும் அமைதியாயிருக்கும் இச்சிறு கிராமத்தில் சிறிது பரபரப்பு;-ஒரு ஆண் குழந்தை பிறந்து விட்டதற்காக அல்ல!-காமினேட் மடாலய பக்தர் ஒருவரின் குரு பூஜை தினம் அன்று. அந்த ஊர், குன்றின் சரிவில், ராஜாளிக் கூடுபோல அமைந்த சிறு கிராமம். விடுகளும் அவைகளின் ஓடுகளுங்கூடக் கருங்கல்லால் அமைந்தவை. மலைச் சிகரத்திலே, காலத்தின் முத்திரை தாங்கிய காமினேட் மடாலயம், இடிந்தும் தகர்ந்துமுள்ள நிலையில், ஆசியளித்து வருகிறது.

ஒரு காட்டாறு அதற்குச் சிறிது தூரம் தள்ளி ஒரு சிற்றோடை. அதன் அருகில் ஒரு கொல்லன் பட்டடையும் அதனுடன் சேர்ந்த வீடும்.

**அன்று உலைக்கூடத்தில் தணல் இல்லை. தன் எண்ணப்படி இரும்பை வளைந்து கொடுக்**

கும்படி செய்வதற்கேற்ற முறுக்கேறிய தசைக் கைகளால் கன்னத்தை ஏந்திய வண்ணம் உட்கார்ந்திருக்கிறன் அலிஸாண்ட்ரோ முஸோலினி. சுருத்த தலைமயிர், கண்ணிலே நல்ல குணம், கையிலே நல்ல பலம் உதட்டின் கோணத்திலே எப்பொழுதும் மறைந்து கிடக்கும் புன்சிரிப்பு. அன்று அவன் கண்களில் நினைவு தேங்குகிறது. உள்ளே டாக்டர் போகிறர்; ஸ்திரீகள் போகிறர்கள்; அலிஸாண்ட்ரோவின் நினைவும் அவர்களைத் தொடர்கிறது.

பிற்பகல் இரண்டு மணி. வீட்டினுள், "குவா! குவா!" என்று ஒரு மனிதன் தான் இவ்வுலகில் வந்துவிட்டதை முதன்முதலாகப் பறைசாற்றுகிறன். பராக்! பேஸிஸம் பிறந்துவிட்டது!

அலிஸான்ட்ரோவின் முகம் புன்சிரிப்பால் மலர்கிறது. அவன் அபேதவாதி; மெக்ஸிகோ புரட்சியில் விழுந்த பெனிட்டோ ஜாரஸின் ஞாபகச் சின்னமாகத் தன் மகனை ஆக்கிவிடவேண்டுமென்று உறுதிகொண்டு விடுகிறன். பெனிட்டோ ஜாரஸ்—பெனிட்டோ முஸோலினி—என்ன வித்தியாசம்!

அலிஸாண்ட்ரோ கொல்லன் மட்டுமல்லன் அவன் கைகள்தான் இரும்புடன் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தன. அவன் மனம் இவ்வுலகத்தையே மோட்ச சாம்ராஜ்யமாக்க வேண்டும் என்று கனவு கண்ட சகாக்களுடன் உறவாடிக்கொண்டிருந்தது.

ருஷிய 'முதல் இன்டர்நாஷன'லில் அவனுக்குச் சம்பந்தமுண்டு. ஆன்ட்ரியா காஸ்டா பால்டுச்சி, அமில்கேர், கிப்ரியானி என்ற இத்தாலியப் பொதுவுடைமைச் சுடர்கள் யாவரும் இவனது நெருங்கிய நண்பர்கள். கவிதையுள்ளம் படைத்த கியாவோனி பாஸ்கோலியும் இவர்களுடைய கோஷ்டிக்கு விதிவிலக்கல்லர். அவர்களுக்கு ஒவ்வொரு மகாநாடும் உலகத்தின் விதியையே எட்டிப் பிடிக்கும்; ஒவ்வொரு கொள்கையும் நித்தியத்துவத்தையே அளிப்பதாகப் புலப்படும்.

இப்படி இவர்கள் கனவு கண்டதன் காரணம் என்ன? இத்தாலியின் சரித்திரம் அதற்குப் பதிலளிக்கும்.

* * *

நம்மவர்க்கு காசித் தலம் எப்படியோ அப்படி வெள்ளைக்காரருக்கு ரோமாபுரி. காரணம் கிறிஸ்தவ மதத்தினரில் ஒரு பகுதியாருக்கு அது ஒரு க்ஷேத்திரம். அங்கு ஆலயம் ஒன்றும் இல்லை; மடாலயம் இருக்கிறது. அந்த மடாலயம் ஐரோப்பியச் சிந்தனைகளில் குடியேறி, கட்டுப்பாடான ஆட்சி புரிந்தது. அதன் விளைவாக இத்தாலியின் சரித்திரம் சென்ற கதை ஒரு தனிப் பெரும் பாரதம்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன், ரோம சாம்ராஜ்யம் கிரீஸ் தேசத்தின் வாரிசாக வந்து மனிதனின் சுதந்திரத்தை நிர்த்தூளியாக்கியது. அதன் சக்தி க்ஷீணித்த சமயத்தில், நாகரிகத்தின் தாழ்ந்த படிக்கட்டில் இருந்தவர்களாகக் கருதப்பட்ட வான்டல்கள், காத், விஸிகாத் என்ற ஜாதியினர் அதைத் தாக்கிச் சிம்மாசனத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டனர். யூதர்கள் கிறிஸ்து முனியின் கற்பனையைக் கசக்கி முகர்ந்தனர். புரட்சிக்காரனுக்கும், 'அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவ'னுக்கும் அக்காலத்தவர்கள் விதித்த தண்டனையை அளித்துவிட்டனர். திசைக்கொருவராக ஓடிய சிஷ்யர்களுள், 'காலதேவனல் அசைக்க முடியாத குன்று' என்று உபசாரமாகக் கூறப்பட்ட பேதுரு (Peter) என்ற அப்போஸ்தலர் (சீடர்) ரோமாபுரியில் கிறிஸ்துவின் பெயரால் மடாலயத்தை ஸ்தாபித்தார்.

உலகத்தவர் நன்மையைக் கருதி அமைக்கப்படும் ஸ்தாபனங்களும், வகுக்கப்படும் சித்தாந்தக் கோவைகளும், அசுரத் தன்மை பெறும்படி வரையளிப்பது காலதேவன் இதுவரை செய்து வரும் கைங்கரியம். பேதுரு அமைத்த மடாலயமும் இதற்கு விதிவிலக்கன்று. ரோமாபுரியிலிருந்தே மத சாம்ராஜ்யம் ஒன்றை எழுப்பி அதனுள் ஐரோப்பா முழுவதையுமே அடைத்து வைக்க விரும்பினர்கள்; அடைத்துவைக்கவும் செய்தார்கள். பக்கபலமாக 'புனித ரோம சாம்ராஜ்யம்' என்ற அரசியல் சட்டுக்கோப்பு ஒன்றையும் வகுக்க முயன்றர்கள். பழைய ரோம சிங்காதனத்தைக் கைப்பற்றியவர்களுடைய பூர்விக ஸ்தலம் மத்ய ஐரோப்பா. மற்றும் அக்காலத்தில் ஜெர்மனி, ஆஸ்திரியா, பிரான்ஸ் என்று மூன்று கூறாகப் பிரிக்கப்பட்டிருக்கும்.

நிலப் பரப்புக்கு 'பிரர்ங் ராஜ்யம்' என்று பெயர். பின்னர் பிராங்க் மன்னர்களின் இரு வாரிசுகளுள் பங்கிட்டுக்கொள்ளப்பட்ட நாடுகள் பிரான்ஸும் ஜெர்மனியும். பூர்பன், ஹாப்ஸ்பர்க் ராஜகுடும்பங்களின் வளர்ச்சியுடன் இவை ஒன்றுபட்டன.

இக்காரணத்தால், புனித ரோம் சாம்ராஜ்யத்தின் கேந்திர ஸ்தானம் ரோமாபுரியை விட்டு மத்ய ஐரோப்பாவில் மாறிவிட, இத்தாலியின் சரித்திரமும் ஜெர்மன் பிரெஞ்சு சரித்திரங்களின் அனுபந்தக் குறிப்புக்களாகமாறியது. பரமார்த்திக விவகாரங்களின் மூலம் ஐரோப்பாவை ஆட்சி புரிய முயன்ற ரோமாபுரி, மற்றப் பகுதிகளிடம் நெருங்கிய அரசியல் பிணிப்பை விட்டு, ஒற்றைக் காலில் நிற்க வேண்டியதாயிற்று.

அரசியல் பிணிப்பு ஒழிந்துவிட்டால் குழப்பத்தைக் காசு கொடுத்தா விலைக்கு வாங்க வேண்டும்? ஆமாம், இத்தாலியில் வாழ்ந்தவர்களும் மனிதர்கள்தான்; 'நாம் உண்டு நம் ஊர் உண்டு' என்று தங்கள் தங்கள் நகரத்தைப் பார்த்துக் கொள்ள முற்பட்டனர். இதனால்தான் இத்தாலியில் 13, 14-ம் நூற்றாண்டுகளில் நகரத்தையே தம் இலட்சியப் பூர்த்தியின் எல்லையாகக் கொண்ட அரசியலமைப்புகள் பிறந்தன. கடற்கரையையடுத்த, வர்த்தகப் பாதைகளில் அமைந்த வெனிஸ், ஜெனோவா போன்ற நகர ராஜ்யங்கள் செழித்தோங்கி, பக்கத்து நகரங்களுடன் நிரந்தரமாகச் சண்டையிடுவதையும், வர்த்தகம் செய்வதையும் தங்கள் தர்மமாகக் கொண்டன.

இப்படியாக ஒரு காலத்தில் நீல நதியின் வளம் கொழிக்கும் எகிப்தில் கண் வைத்து, கிளியோபாத்ராவின் ஆசை முகத்திற்காக உயிரையும் பதவியையும் இழந்த அகஸ்தஸ்களும், அந்தோனிகளும் திகழ்ந்த சாம்ராஜ்யத்தின் நிலைக்களனான இத்தாலி தேசம், பூர்பன், ஹாப்ஸ்பர்க்ராஜகுடும்பங்கள், மடாலயம் என்ற முக்காலியில் கட்டப்பட்டு, பல நூற்றாண்டுகள் சரித்திரத்தின் சவுக்கடிகளைப் பெற்று வந்தது.

''இத்தாலியக் கம்பன்' என்று சொல்ல வேண்டிய தாந்தே பிறந்தான்; தேச ஐக்கியத்தைப் பற்றிப் பாடிவிட்டுச் சென்றான். அவன் கவிஞன் தானே! பின்னர் மாஜினிகளும், சவூர்களும், கரிபால்டிகளும் படிப்படியாக வளர்த்த ஐக்கியக்கோயில் இப்பொழுது முஸொலீனியால் முற்றும் அமைக்கப்பட்டு, கும்பாபிஷேகம் நடத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அவன், அதனுள்ளிருந்த 'தேசமாதா' என்ற தெய்வத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டு, 'ஏகாதிபத்தியம்' என்ற பேயைக் குடியேற்றி வழிபட்டு வருகிறான்...

பெனிட்டோ முஸொலீனி பிறப்பதற்குச் சரியாக இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன், பீட்மான்ட் சிற்றரசன் விக்டர் இமானுவல் தலையில் கிரீடம் ஏறியது. இத்தாலியில் மூன்றில் இரண்டு பங்கு அதன் எல்லைக்குட்பட்டது. இந்நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் வருமாறு; பிரெஞ்சுப் புரட்சியின் பின்னணியில் ஏற்பட்ட நெப்போலியனுடைய ஏகாதிபத்தியம் இத்தாலிக்குச் சாதகமாக இருந்தது. நெப்போலியன் இத்தாலியக் கிரீடத்தை ஏற்றான். அவனுடைய இத்தாலிய நட்பு' 1811-ம் ஆம் வருஷத்தில் அதன் வடக்கெல்லையை மெரானோ வரையில் விஸ்தரித்தது. பின், நெப்போலியன் சிறைப்பட்டு ஹெலினா தீவில் குடிபுகுந்தான். இத்தாலியும் பழையபடி முக்காலியில் கட்டப்பட்டது.

பின்னர் மாஜினியும் கரிபால்டியும் அரங்கத்தில் தோன்றிவிட்டனர், சுதந்திர இயக்கம் பிரிட்டிஷ் அனுதாபத்துடன் கனிந்தது. இத்தாலியத் தலைவர்கள் இத்தாலியின் மோட்ச சாம்ராஜ்யம் குடியாட்சியே என்று கண்டனர். மறுமலர்ச்சி இயக்கம் நாடெங்கும் பரந்தது. புரட்சிகள், கலகங்கள், எழுச்சிகள் யாவும் தினசரிச் சம்பவங்களாயின. பிரிட்டிஷ் லிபரல் கட்சியினர் தங்கள் நாட்டிலிருந்து செய்திகள் விடுத்து ஊக்கமூட்டினர். வெற்றிப் பாதையிலே சென்ற மறுமலர்ச்சி, கட்சித் தலைவர்களிடையே தோன்றியவேறுபாடுகளால், தேசத்தை அந்நிய சந்தர்ப்பவாதிகளின் கையில் சிக்கவைத்துவிடும்போலிருந்தது.

விடுதலை வீரன் கரிபால்டி எழுப்பிய முடியாட்சியின் ஆவேசம் விக்டர் இமானுவல் பக்கம் சார்ந்தது. 1861ம் வருஷம் மன்னர் ஆட்சியை ஏற்படுத்தியது. டூரின் தலைநகராயிற்று. வெனிஸ் போன்ற நகரங்களும், ரோம் மடாதிபதியான போப்பின்

சமஸ்தானங்களும் கைப்பற்றப் படாமல் இருந்தன.

அந்தஅரைகுறையான வெற்றிக்கப்புறம் நாடு விஸ்தரிப்பு என்ற சதுரங்கத்தில் புதிய இத்தாலி மட்டுமின்றி, ஆஸ்திரியா, பிரஷ்யா தேசங்களும், போப்பும் காயை உருட்டி விளையாடவே, மண்ணில் தலைகள் உருண் டன. முடிவில் 1870-ம் வருஷம்; செப்டம் பர் 20-ந் தேதி விக்டர் இமானுவலின் படை கள் இத்தாலியின் தலைநகரான ரோமாபுரிக் குள் புகுந்தன. 1872-ல் ஆல்ப்ஸ் மலை எல்லை தவிர மற்றப் பகுதிகளின்மீது இமானுவல் ஆட்சி புரியலானான்.

புதிதாக ஐக்கியப்படுத்தப்பட்ட இத் தாலியின் அரசியலமைப்பு, சவாய் வம்சத் தைச் சார்ந்த சார்லஸ் ஆல்பர்ட் என்ற மன்னன் பீட்மான்ட் வாசிகளுக்கு அளித்த தானம். அது பிரதிநிதித்துவம் வாய்ந்த அரசியல் நிர்ணய சபை விவாதித்து வகித்த அரசியலமைப்பு அன்று. ஆஸ்திரியாவை இத்தாலியைவிட்டுத் தொலைப்பதற்காக அவன் பீட்மான்ட் வாசிகளுக்கு அளித்த லஞ்சம் என்றே கருத வேண்டும். படிப் படியாக இத்தாலி முழுவதையும், மறுமலர் ச்சியின் பயனாக, அதன் ஆட்சிக்கு உட்ப டுத்தப்பட்டது. அந்த அரசியல் முறை இங் கிலீஷ் அமைப்பைப் போன்றது. பிரதிநிதி களின் சபைக்கு மன்னன் சட்டபூர்வமாக வும், யதார்த்த மாகவும் கட்டுப்பட்டவன். பிரதிநிதிகள் சபைக்கு சட்டம் அமைக்கவும் நிர்வாக இயந்திரத்தைக் கட்டுப்படுத்தவும் அதிகாரம் உண்டு.

இங்கிலீஷ் பிரபுக்கள் சபையைப் போல் 'செனட்' என்ற மேல் சபை ஒன்றும் உண்டு. பண விஷயங்கள் தவிர மற்றவற்றில் பிரதி நிதிகள் சபைக்குச் சமானமான அதிகாரம் உண்டு. இப்படிப்பட்ட முறை சரியாக வேலை செய்வது கட்சிகளின் திறமையையும் தன்மையையுமே பொறுத்தது.

★ ★ ★

அப்பொழுதுதான் மழை பெய்து ஓய்ந்தது. கொல்லன் அலிஸாண்ட்ரோ வீட் டுக்கருகில் உள்ள சிற்றோடையில் வெள்ளம் துள்ளித் ததும்பிக் கொந்தளித்து ஓடுகிறது. கிழிந்துபோன, ஆனால் தையலுக்கு மேல் தையல் போடப்பட்ட உடைகளை அணிந்த இரு சிறுவர்கள் ஓடி வருகிறார்கள். கட்டை குட்டையான மூத்த பையன் முதலில் ஓடிச் சென்று முழங்காலளவு தண்ணீரில் இறங்கி விடுகிறான், பக்கத்திலிருந்த கல்லையும் கட்டி யையும் ஓடையில் போட்டுஅணைகட்டுகிறான். அவன் கையருகிலிருந்த கற்கள் யாவும் காலி யாகின்றன. தம்பிக்கு உத்தரவு போடுகிறான். அவன் தூரத்தில் கிடப்பவைகளை எல்லாம் தூக்கமுடியாமல் தூக்கி முக்கி முனகிக் கொண்டுவருகிறான். சுமைதாங்க முடிய வில்லை. வழியில் பொத்தென்று போட்டுவிடு கிறான்.

''முட்டாள்!'' என்று கத்திக்கொண்டு மூத்தவன் கரையில் குதித்தேறி, அவனை நோக்கி ஓடி வருகிறான். கல்லைத் தூக்கி வீசு கிறான், ஏற்கெனவே கட்டப்பட்ட கற்குவி யல் அணைக்கட்டுச் சிதைந்து உருண்டுவிடு கிறது. மறுபடியும்தண்ணீரில் குதிக்கின்றான்.

அச்சமயம் அலிஸாண்ட்ரோவின் வீட்டி னுள்ளிருந்து நடையில் வந்து நின்ற ஸ்திரீ, ''பெனிட்டோ! ஆர்னல்டோ!'' என்று உரத்த குரலில் கூப்பிடுகிறாள். அவள்தான் அவர்களுடைய தாயார் ரோஸா மல்டோனி. குழந்தைகள் இரண்டும் கொச்சையான பாஷையில். ''இதோ வருகிறோம்!'' என்று சொல்லிக்கொண்டு அவளிடம் ஓடுகின்றன.

''சுத்தமான இத்தாலிய பாஷையில் பேச வேண்டும்'' என்று இதமாகப் புத்தி மதி சொல்லுகிறாள் அன்னை. அவள் ஆரம் பப் பாடசாலை உபாத்தியாயினி.

அலிஸாண்ட்ரோ உலையில் எதையோ காயவைத்து உருக்கிக் கொண்டிருக்கிறான். பற்றுக்கோலைத் திருப்பிக் கொடுத்துக் கொண்டே, ''பெனிட்டோ, அந்தச் சுத்தி யலை எடு!'' என்கிறான்.

வேலை முடிந்தது. குடும்பம் சாப்பிட உட்கார்ந்துவிட்டது. உணவு பசியின் கூர் மையை அதிகப்படுத்துவதற்கு மட்டுமே காணும். உழைப்பின் மிகுதியால் தட்டில் கவ னத்தைச் செலுத்தினான் அலிஸாண்ட்ரோ. ரோஸா தனது தேவையைக் காட்டாது, அவனுடைய தட்டிலும், குழந்தைகள் தட்டிலும்உணவைப் பரிமாறி விடுகிறாள்.

அவர்கள் பணப்பை நிரந்தரமாகக் காலியாகவே கிடக்கும். எண்ணி வைத்ததற்கு மேல் சாப்பிடப்படும் ஒவ்வொரு உருளைக் கிழங்குத் துண்டும் பெருத்த பொருளாதார நெருக்கடியை உண்டுபண்ணும் என்பது வறுமையில் சுருண்டு துடிப்பவர்களுக்குத் தான் தெரியும். இவர்களுக்குச் சமூக ஏற்றத்தாழ்வின் காரணஸ்தர்கள் மீது சீற்றமும், பொதுவுடைமைக்கனவும் ஏற்படுவதுஅதிசயமன்று. 1874-ம்வருஷம் போர்லியில் ஆன்ட்ரியா காஸ்டாஆரம்பித்தமுதல் இன்டர்நாஷனலின் கிளையில் அலிஸாண்ட்ரோ சேர்ந்ததும் அதிசயமன்று.

சாப்பாடானதும் குழந்தைகள் படுக்கச் சென்றுவிடுகின்றன. படுக்கை என்று விசேஷமாக ஒன்றுமில்லை. மூலையில் விரிக்கப்பட்ட வைக்கோல் மீது ஒரு துணி. அதுதான் குழந்தைகளின் படுக்கை.

குழந்தைகள் தூங்கிவிடுகின்றன,

"பையனைப் படிக்க அனுப்ப வேண்டாமா?" என்கிறாள் ரோஸா.

அவன் தாடியை மெதுவாக நெருடிவிட்டுக் கொண்டு, மற்றொரு கையால் பல்லைக் குத்திக்கொண்டே, 'மரானியிடந்தான் போய்ப் படித்துவிட்டு வருகிறானே!" என்கிறான். அவன் மனது ஸ்தல நிர்வாக ஊழலில் குமைந்துகொண்டு கிடக்கிறது.

"அது போதுமா? பாஸாகிவிட்டானே" என்கிறாள் ரோஸா.

"பியன்ஸாவுக்கு வேண்டுமானால் அனுப்புகிறது!" என்று விஷயத்தை முடிவுகட்டுகிறான் அலிஸான்ட்ரோ.

மறுநாள் காலை. பக்கத்து வீட்டுக்காரன் கழுதையை இரவல் வாங்கி வண்டியில் பூட்டுகிறான் அலிஸான்ட்ரோ. சின்ன மூட்டை' பழைய பாடப்புத்தகம், புதிதாகத் துவைத்து ஒட்டுப்போட்டுத் தைத்த சாயம் போன பட்டுச்சட்டை முதலிய அலங்காரங்களுடன் வண்டியில் வந்து ஏறிக்கொள்கிறான் பெனிட்டோ. வாசல்படியில் நின்று அம்மாவும் தம்பி ஆர்னல்டோவும் இவனை வழியனுப்புகின்றனர்.

பியன்ஸாவுக்கு வண்டியை ஓட்டிக்கொண்டு போகிறான் அலிஸான்ட்ரோ. கழுதையும் ரொம்பச் சுறுசுறுப்பாகப் புறப்படுகிறது. 20 கஜம்கூடப் போகவில்லை — அடடா! என்ன! கழுதையாருக்குத் திடீரென்று படுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. ஓடும் வழியில் சடக்கென்று படுத்துக்கொள்ளுகிறார். இந்த அதிர்ச்சியில் வண்டி, அப்பா, மகன்—எல்லாம் அபேதமாகக் குழம்பவேண்டியதாயிற்று,

பிறகு. வெகு சிரமப்பட்டதற்கப்புறம், கழுதையாருக்கு என்ன தோன்றியதோ, எழுந்து சாதுவாக நடக்க ஆரம்பிக்கிறார்.

பையனை பியன்ஸாவிலுள்ள சாமியார் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டுத் திரும்புகிறான் அலிஸான்ட்ரோ.

பெனிட்டோவின் பள்ளிக்கூட வாசம் நெடுநாள் நீடிக்கவில்லை. தன் வயதுக்கு மிஞ்சிய ஒரு பையனை ஒரு மொண்ணைக் கத்தி கொண்டு குத்தி விடுகிறான். சாமியார்கள் இவனுடைய படிப்புக்குச் சீட்டுக் கொடுத்துவிடுகிறார்கள். திடீரென்று மகன் புஸ்தக மூட்டை வகையறுக்களுடன் வருவதைக் கண்ட அலிஸான்ட்ரே விசாரிக்கிறான். சமாசாரம் தெரிகிறது.

"அன்றைக்குக் கழுதை படுத்துக்கொண்டபோதே எனக்குத் தெரியுமே!" என்றான் தகப்பன்,

தனிக்காட்டு ராஜாவாகக் குருவிக் கூடுகளைப் பிய்த்தெறிந்துகொண்டிருந்த பெனிட்டோவுக்குப் பள்ளிக்கூட வாசம் ஒத்துவரவில்லை. ஆனால் படிப்பில் ஆசை இல்லாமலில்லை.

பியன்ஸா சம்பவத்துக்கப்புறம் வீட்டில் கொஞ்சநாள் இருந்து ஒரு காட்டுவாத்தைப் பழக்க ஆர்னல்டோவுடன் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறான் பெனிட்டோ.

அப்பொழுதுதான் நூதன தினுசான கதிரடிக்கும் யந்திரம் பழக்கத்திற்கு வந்துகொண்டிருப்பது, அலிஸான்ட்ரோ அதன் நுணுக்கத்தைக் கற்றுக்கொள்ள முயன்றான். கொல்லுலையில் தகப்பனுருக்கு உதவியாக நின்றுகொண்டிருந்த பெனிட்டோவுக்கும் அதில் நாட்டம்சென்றது.

எத்தனை காலந்தான் இரும்புடன் மல்லுக் கட்டிக்கொண்டிருப்பது?

பிரக்யாதி பெறவேண்டிய மனிதர்களின் தாயார் போன்றவள் ரோஸா. பிள்ளையிடம் பெரிய திறமைகள் மறைந்து கிடப்பதைக் கண்டாள். திறமைகள் என்ன? வாத்தியாராவதற்குத்தான்! பார்லிம்போப் போலி என்ற ஊரில் உள்ள டிரெய்னிங் ஸ்கூலுக்கு பெனிட்டோ அனுப்பப்பட்டான். அந்தப் பாடசாலையை நடத்தியவர் கார்டூச்சி என்பவர் அவருடைய சகோதரர் ஒரு கவிஞர்.

உபாத்தியாராகப் பரிணமிக்குமுன் ஆறு வருஷங்கள் புஸ்தகங்கள், பென்சில், இங்கி, காகிதம் இவற்றுடன் இடைவிடாது மல்லாட வேண்டியிருந்தது.

கடைசியாக யோக்கியதா பத்திரமும் கிடைத்தது. ஊருக்கு அருகிலுள்ள முனிஸிபாலிட்டியில் குமாஸ்தா வேலைக்கு மனுப் போட்டு முயற்சி செய்தான் பெனிட்டோ. அப்பா அபேதவாதியாயிருந்தது வேலைக்குக் குறுக்கே வந்து நின்றது.

ஆனால், வேறொருமாகாணத்தில் குவால்டீரி என்றஊரில்வேலைகிடைத்தது.வாத்தியாரானான் பெனிட்டோ. ஒரு நாள் மத்தியானம், ''நீங்கள் முயற்சி செய்தால் ...'' என்ற தலைப்பில் ஒரு வியாசத்தை அவன் மாணவர்களுக்கு எழுதிக் கொடுக்கும்வரை அந்த உத்தியோகம் நிலைத்தது. பெனிட்டோ மாணவர்களுக்கு உப்புச்சப்பில்லாமல் இருக்கும் வியாசத்தை எழுதிப்போட்டுப் பொழுதைக் கழிக்கவில்லை. அதற்கு மாறாக அவனுடைய வியாசம் மேலதிகாரிகளுக்கு அஜீரணத்தை உண்டுபண்ணியது. பள்ளிக்கூடத்தையே மூடிவிட்டார்கள்.

அப்பொழுது முஸொலீனிக்கு வயது பத்தொன்பது.

வேலையோ போய்விட்டது. வீட்டிலோ அடுப்பில் பூனை படுத்திருக்கிறது. வெளியிலோ, பொதுமக்களில் பொரும்பாலோர் பொதுவுடைமைவாதிகளா யில்லாவிட்டாலும், அலிஸான்ட்ரோவின் மனநிலை கொண்டிருந்தனர். நாட்டிலே மத்ய சர்க்கார், பிரான்ஸிஸ்கோ கிரிஸ்பி என்ற பிரதம மந்திரியின் கீழ், அடக்குமுறைப் பாணத்தைத் தொடுத்து வந்தது.

பெனிட்டோவின் உத்தியோகப் பருவத்தில் நடந்த 'ரொட்டிப் புரட்சி' இதற்குச் சரியான உதாரணம். நிலச் சுவான்தார், பணக்காரர்கள் கொடுமை தாங்க மாட்டாமல், அபேதவாதிகள், அராஜகர்கள் தலைமையில் தொழிலாளர்கள் திரண்டனர், கலகங்கள், சூறை, சிறைகளைத் திறந்து கைதிகளை வெளிவிடல் முதலிய திருவிளையாடல்கள் எங்கும் எழலாயின. இவற்றிடையே உள்நாட்டுக் கலகங்கள் என்று சொல்லக் கூடிய தன்மையில் தேர்தல்களும் நடைபெறும். வெற்றி பெற்றவர்கள் ஜனநாயகம் விவரிக்கும் மக்களின் பிரதிநிதிகளோ என்னவோ—ஆட்சி நடத்தலாயினர். மந்திரி சபை அடக்குமுறைப் பாணத்தைத் தொடுத்தது. 1894 ஜனவரியில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சிறை சென்றனர். தலைவர்கள் பலர் இரவோடிரவாக சர்க்காரால் கைது செய்யப்பட்டுக் கடத்தப்பட்டனர். இத்தாலியே கொந்தளித்துவிட்டது. இது அபேதவாத இயக்கத்திற்குப் புதிய உத்வேகம் அளித்தது. 1895-ம் வருஷப் பொதுத் தேர்தலில் 12 அபேதவாதிகள்வெற்றிபெற்றனர்.

சர்வசந்தேகமும், குருட்டுப்பிடிவாதமும் கொண்ட கிரிஸ்பி, முந்திய வருஷம் அக்டோபரில்தான் அபேதவாத ஸ்தாபனங்கள் மீது தடைவிதித்துவிட்டான். இதனுடன் கலகம் அமுங்கிவிடவில்லை. 'உணவுப்புரட்சி' என்று பொதுவாகக் கூறப்படும் பெருங்கலகம் 1889 ஆம் வருஷம் தோன்றியது. மிலான் நகரில் மட்டும் 400 பேர் மாண்டனர். 828 பேர் கைது செய்யப்பட்டனர். 6⁴8 பேருக்கு ஈவிரக்கமற்ற தண்டனை. அபேதவாதத் தலைவனை தூராட்டிக்கு 12 வருஷம் கடுங்காவல். புரட்சி-ராணுவச் சட்டம்-இதுதான் 1914-ம் வருஷத்திய ஜெர்மன் சண்டை வரை இத்தாலி சென்ற பாதை. கிரிஸ்பியின் வளர்ச்சி வீழ்ச்சி, அவனுடைய முயற்சி, எல்லாவற்றையும் கண்டான் முஸொலீனி. அப்பொழுது அவன் அபேதவாதி. என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தானோ? ஆனால் இன்று முஸொலீனியின் ஆட்சியில் கிரிஸ்பிக்கு ஓர் உன்னத ஸ்தானம் அளிக்கப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

---

பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் ஒருவர்:
—''நான் பி. எச். டி, நீங்கள்?''
''நான் எம். ஏ. டி.'' —துருவன்

# மாற்றம்

சொக்கன்

மங்கள நாயகி தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் கந்தசாமிக்கு ஓய்வுபெற இன்னும் ஒருவாரந்தான் இருந்தது. அவர் நினைத்திருந்தால் லீவில் நின்று கடைசிநாள் பாடசாலைக்கு வந்து பொறுப்பை உரியவரிடம் கொடுத்திருக்கலாம். மலரிலே அமர்ந்து தேனைச் சுவைக்கும் வண்டு மலரிலுள்ள தேனின் கடைசித் துளியை உறிஞ்சும்வரை அதைவிட்டு நீங்காதது போல, அவரும் தமது அதிகாரத்தை இறுதி நாள் வரை சுவைத்தே ஆகவேண்டும் என்ற தீர்மானத்தால் நாள் தவறாது பாடசாலைக்கு வந்தார் போலும்.

ஆனால் இந்தக்காலத்தில் அதிகாரம் என்பது முட்படுக்கை என்பதையும் அவர் அறிந்துதான் இருந்தார். அதிலும் பாடசாலை ஒன்றின் அதிபராய் அமர்ந்து நிர்வாகத்தை நடத்துவது போலச் சிரமமான காரியம் வேறு இல்லை.

அன்றுங்கூடப் பாடசாலைக்கு வந்த அரை மணித்தியாலத்தில் பிரச்சனை ஒன்றுக்குக் கந்தசாமி முகம் கொடுக்க நேரிட்டது. ஏதோ இயக்கமாம். பிரசாரப் புத்தகங்கள் விற்க வேண்டுமாம். இப்பொழுதுதான் தான் பூனைமீசை அரும்பிக்கொண்டிருக்கும் இளைஞர் இருவர் வந்திருந்தார்கள். ''தம்பிமாரே, இது சின்னப் பள்ளிக்கூடம். பிள்ளைகள் வசதி குறைந்தவர்கள். வேணுமெண்டால் எல்லாரின் சார்பிலும் நான் ஒரு புத்தகம் வாங்கிறன். தயவு செய்து வகுப்புகளுக்கை போய் வாத்திமாரையும், பிள்ளையளையும் குழப்பாதையுங்கோ'' என்று அவர் அவர்களின் காலில் விழாதகுறையாய் மன்றாடியபோதிலும் அவர்கள் கேட்பதாயில்லை

பிடிவாதமாக, கடுமையாக, தாங்கள் சொல்வதைக் கேட்காததையிட்டு மிகுந்த கோபமாக அந்த இளைஞர்கள் பேசினார்கள். கந்தசாமி தமது கோபத்தை அடக்கிக் கொண்டு நந்தனாருக்கு வழிவிட்ட நந்தி போல அவர்களின் கோரிக்கைக்கு இறுதியில் இணங்கவே வேண்டியதாயிற்று.

சிறிய பள்ளிக்கூடந்தான். மாணவர் தொகை ஐந்நூறுக்கும் குறைவுதான். முதலாந்தரம் தொடக்கம் பத்தாம்தரம் வரைதான் வகுப்புகள். ஆசிரியர் தொகையும் பதினைந்திற்குள். ஆனால் பிரச்சினைகளோ தலைக்குமேல். ஆசிரியர்களுக்குள் இரு கன்னைகள். மாணவரிடையே ஒழுங்கும் கட்டுப்பாடும் போற்றத்தக்கதாயில்லை. அடிக்கடி பாடசாலைப் பொருள்கள் சிறுச்சிறு அளவிலே களவாடப்பட்டுக்கொண்டிருந்தன. ஹர்த்தால்கள். ஊர்வலங்களால் திடீர் திடீரெனறு பாடசாலை மூடப்பட வேண்டிய நிர்ப்பந்தம் மேலிடக் கெடுபிடிகள், பெற்றோர் பழையமாணவர், ஊராரின் அநாவசிய தலையீடுகள்.

இவற்றிலிருந்து இன்னும் ஒரு வாரத்தில் விடுதலை கிடைப்பதையிட்டு ஆறுதலும் மகிழ்ச்சியும் அடையவேண்டிய நிலையில் மனதில் ஓர் உறுத்தலும் கந்தசாமிக்கு இருந்ததிற்கு நியாயம் இல்லாமல் இல்லை.

அவர் தமது முப்பத்தைந்து வருட சேவையிலே பள்ளிக்கூடமே உலகம் என்று இருந்துவிட்டார். அதிலும் அதிபராய்ப் பணியாற்றிய கடந்த பதினைந்து ஆண்டுகளிலே அவர் தமக்கென ஓர் 'இமேஜை'யும் தம்மளவில் ஏற்படுத்திக் கொண்டார். 'அதிபர் கந்தசாமியா? அவர் மிகவும் கடுமையானவர். ஆசிரியர்கள் அவரைக் கண்டால் நடுங்குவார்கள்'' என்பதுதான் அந்த 'இமேஜ்'

ஓய்வுபெற்றதும் இந்த 'இமேஜு'ம் தன்னால் கழன்று போய்விடும் என்று அவர் மிகவும் அஞ்சினார். தம்மால் அதிகாரம் செய்யப்பட்டவர்கள் தம்மைக் கண்டால் அலட்சியமாக கிள்ளுக்கீரைபோல் நடத்துவார்களே என்று அவர் நினைத்து நினைத்துத் தம்முள் ஒடுங்கிப் போனார்,

நிர்வாகம் என்பது மேலுள்ளவருக்குக் கீழுள்ளவர் அடங்கி நடத்தலுக்கான சூழ்நிலையை உருவாக்குவதே என்ற கருதுகோளை விதியாக்கி அந்த விதியைச் செயற்படுத்தி வந்தவருக்கு, எதிர்காலம் எப்படி அமையும் என்ற சிந்தனை அண்மைக் காலத்திலே

தான் ஏற்பட்டிருக்கிறது. காலம் கடந்த கழிவிரக்கம்.

ஆனல் கந்தசாமியின் உள்ளத்தைக் கழிவிரக்கம் முற்றுக ஆக்கிரமித்தது என்றும் சொல்வதற்கில்லை. இந்த நிமிஷத்திலும் தமது வீம்பை நிறைவேற்றி விட்டதான குரூரதிருப்தி ஒன்று அவரை ஆட்கொண்டு ஆட்டிப் படைப்பதை அவர் மட்டுமே அறிவார்.

கந்தசாமிக்குப்பின் மங்கள நாயகி தமிழ்க்கலவன் பாடசாலையின் புதிய அதிபர்



யார் என்பதை நிருணயிக்கும் உரிமை அவரின் கையிலேதான் இருந்தது. கல்வித் திணைக்களம் நிரந்தர அதிபர் ஒருவரை அனுப்ப வாய்ப்பில்லாது போனமையால் தமக்குப் பின் பாடசாலையில் கடமைபுரியும் அதிபராக யாரை நியமிக்கலாம் எனப் பரிந்துரைக்க வேண்டியவர் கந்தசாமிதான்.

பாடசாலையில் சேவை மூப்புக் காரணமாக ஒருவரை அதிபராக்குவதாயிருந்தால் அந்த அதிபர் முத்துச்சாமியாகத்தான் இருப்பார்; இருந்திருக்கவேண்டும். ஆனல் கந்தசாமியைப் பொறுத்தவரையில் முடிவு வேறுயிருந்தது.

முத்துச்சாமி வெளியிடங்களிலே பத்தாண்டுகளுக்கு மேல் உதவியாசிரியராயிருந்தவர். இந்தப் பாடசாலையிலே கடந்த பதினெட்டு வருடங்களாக உதவி ஆசிரியராயிருக்கிறுர். பயிற்சி பெற்ற முதலாம் தர ஆசிரியர், பழைய ஆங்கில எஸ். எஸ். ஸி. பால பண்டிதர். தமிழ், கணிதம் ஆகிய பாடங்களைக் க. பொ. த! வகுப்பிற் கற்பித்துத் திறமையான பெறுபேறுகளைப் பெற்றுத் தருபவர்.

இருப்பினும் முத்துச்சாமிக்கு எந்தவிதப் பொறுப்பினையும் அளிக்கக் கந்தசாமி தயாராயில்லை. சட்டங்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டு நேர்மையிலிருந்து, அணுவளவும் தவருது கடமை வீரராக முத்துச்சாமி விளங்கியதால் வந்தவினை; திறமையான ஆசிரியர் என்பதால் மாணவரிடையே விரவணக்கத்திற்கு உரியவராய்ச் செல்வாக்குடன விளங்கும முத்துச்சாமி மீது அவருக்கு ஒருவகையான பொருமையுணர்ச்சி இருந்துவந்தது.

தமது அதிகாரத்தைக் கேட்டுக் கேள்வி இல்லாது அங்கீகரிக்கும் ஒருவர்தாம் கந்தசாமிக்கு வேண்டியிருந்தார். அந்ததேவையை நிறைவு செய்த செல்வநாயகத்தின் மீது அவரின் கடைக்கண் பார்வை விழுந்ததில் ஆச்சரியம் இல்லை. வார்த்தைக்கு வார்த்தை 'சேர்' போட்டுக் கொண்டு, எதைச்சொன்னலும் மறுக்காமல் செய்து கொண்டு முன்னலும் பின்னலும் வாலைக் குழைத்து(?)க் கொண்டு திரிந்த செல்வநாயகத்தைக் கந்தசாமி தமது மெய்க்காப்பாளராக ஆக்கிக் கொண்டார்.

வேதவல்லி அரசாங்க அதிபர் ஒருவரின் சகோதரி. ஆனல் அந்த உயர்வுச் சிக்கல்தான் அவளின் துணிச்சலுக்குக் காரணம் என்று சொல்ல முடியாது. வீட்டில் அவள் பெற்ற சுதந்திர உணர்வினை வெளியிலும் வளர்த்துக் கொண்டு தனக்குச் சரி என்று பட்டதை எவருக்கும் அஞ்சாது சொல்லும் வீராங்கனைத்தனமே அவளை அவ்வாறு சொல்லவைத்தது.

அன்று கந்தசாமி தமக்கு ஏற்பட்ட கோபத்தை அடக்கிக் கொண்டது ஆச்சரியம் தான். மிஸ் வேதவல்லி, இது எனது நிர்வாக விஷயம், எனக்குச் சரியானதை செய்திருக்கின்றேன். தயவு செய்து இதுபற்றி விவாதிக்க வேண்டாம். அடுத்த விஷயத்துக்குப்

போவோம்'' என்று அவர் அழுத்தந்திருத்தமாகச் சொன்னபின் கூட்டம் அமைதியாக நடந்துமுடிந்தது.

கந்தசாமி அன்று மேற்கொண்ட முடிவின் பலனை அவர் தொடர்ந்து அநுபவிக்க வேண்டியதாயிற்று. ஆசிரியர்களிடையே இரு கன்னைகள் ஏற்பட்டு அடிக்கடி வாதங்களும் சச்சரவுகளும் உண்டாவதும், அவர் அடிக்கடி தமது நெற்றிக்கண்ணைத் திறப்பதும் வழக்கமாகியது. கந்தசாமியின் ஆதிக்கக் கரங்களிலே எங்கோ ஓர் இடத்தில் ஊனம் ஏற்பட்டுவிட்டது.

ஆசிரியர் கூட்டங்களில் இந்த ஊனத்தின் அடையாளங்கள் வெளிப்படலாயின. முத்துச்சாமி அதிபரை அடிக்கடி இடைமறித்துக் குறுக்குக் கேள்விகள் கேட்பதும், கிண்டல் பண்ணுவதும் சகஜமாயின. இடையிடையே வேதவல்லியின் பக்கவாத்தியமும் வாசிக்கப்படுவதுண்டு.

எல்லாரையும் அடக்கி ஆண்டுவந்த அவரால் முத்துச்சாமியையும் வேதவல்லியையும் அடக்கியாள்வது இயலாது போயிற்று. முத்துச்சாமி அவரின் சிவத்தக் கோடுகளுக்குள் அகப்படாது, பாடக்குறிப்பு, பாடப் பதிவு, பயிற்சித்திருத்தம் என்பவற்றையும் ஒழுங்காகச் செய்து வந்ததால், அவரைத் தமது சூழ்ச்சிக்குள் அகப்படுத்த முடியாது கந்தசாமி தத்தளித்தார்.

வேதவல்லியோ சில நாள்களில் நேரம் பிந்தி வருவாள். அடிக்கடி லீவில் நிற்பாள், அதிபர் கந்தசாமி ஏதாவது சொன்னால், ''வேணுமெண்டால் அரை நாள் லீவு போடுங்கோ'' என்றும், ''எனக்கு உரிமையான லீவு நான் எடுக்கிறன். வகுப்புவேலை பாதிச்சால் கேளுங்கோ'' என்றும் அவரை எதிர்த்துப் பேசுவாள்.

ஆசிரியர் யாராவது ''நீங்கள் மிஸ். வேதவல்லிக்கு இடம் கொடுக்கிறியள்'' என்று சாடை மாடையாகச் சொன்னால் சொன்னவர்பாடுதான் ஆபத்து.'' உவளுக்கு முப்பத்தைந்து வயசுக்கு மேலே. இன்னும் கலியாணம் முடிக்கேல்லை. ஹிஸ்டீரியா பிடிச்சிட்டுது. அதுதான் சத்தம் போடுகிறாள். உங்களுக்கென்ன? நீங்கள் கடமையைச் சரியாய்ச் செய்யுங்கோ. எனக்கு என்ரை கடமை தெரியும்'' என்று கந்தசாமி சத்தம் போடுவார். வேதவல்லி அரசாங்க அதிபரின் சகோதரி. அவளோடை மோதினால் எனக்குத்தான் ஆபத்து. அதனாலை தான் நான் பேசாமல் இருக்கிறன்.'' என்று தமது தாழ்வுச் சிக்கலை அவர் சொல்வாரா?

ஆனால் இருவருக்கும் குழிபறிக்கக் கந்தசாமி பின்னணியில் வேலைசெய்து கொண்டிருந்தார் என்பது யாருக்கும் தெரியாது.

முத்துச்சாமி தாரமிழந்தவர். நாற்பத்தாறு வயது. அவர் பத்தாம் வகுப்பு மாணவிகளோடு சரசமாடுவதாகவும், பின்னேர வகுப்புக்கள் லீவுகால வகுப்புக்கள் என்று வைத்துக் சல்லாபம் புரிவதாகவும் மொட்டைக் கடிதங்கள் அதிபரூடாக முத்துச்சாமிக்கு வரத் தொடங்கின. ஒருநாள் கந்தசாமி அவரை அழைத்து உபதேசம் செய்ய முற்பட்டு முத்துச்சாமி அவரை அடிக்கக் கையோங்கி, ஆண் ஆசிரியர்களால் விலக்குப் பிடிக்கப்பட்டது தனிக்கதை.

அன்றொரு நாள் கந்தசாமி வகுப்புக்களை மேற்பார்வை செய்யச் சென்றபொழுது ஆசிரியர் அறையில் முத்துச்சாமியும் வேதவல்லியும் உரையாடிக்கொண்டிருந்தார்கள். கந்தசாமியைக் கண்டும் காணாதவர்போல அவர்களின் கதை தொடர்ந்தது. அவர்களுக்கு அது பாடவிடுப்பு நேரம்.

கந்தசாமிக்குப் புதியதொரு வாய்ப்புக் கிடைத்தது விட்டது. அவர் செல்வநாயகத்தின் காதில் குசுகுசுக்க அது சக ஆசிரிய, ஆசிரியைகளிடையே பரவ, அதனால் அவர்களிருவருக்கும் பெரிய தலையிறக்கம் உண்டாகும் என்று கந்தசாமி எதிர்பார்த்தார். ஆனால் அவரின் ஏவாயுதம் விண்வெளிக்கு ஏறாமலே தரைதட்டிவிட்டது.

முத்துச்சாமி வேதவல்லியை நோக்கிச் சொன்னார். ''மிஸ் வேதவல்லி, அற்பத்தனமாக உவங்கள் பேசிறத்துக்கு நீங்கள் வருத்தப்பட மாட்டியள் எண்டுதான் நினைக்கிறன். நாங்கள் சின்னப்பிள்ளைகள் அல்ல''

''சீ! அவங்கள் என்னத்தையும் பேசட்டும். அப்படித்தான் இருந்தால் என்ன? ஆர் எங்களைத் தடுக்கிறது?''

முத்துச்சாமி முதலில் திகைத்தார்; பிறகு ஆச்சரியமடைந்தார். இறுதியில் ஆனந்தப்பட்டார்.

யாரோ ஒருவர் திட்டமிட்டு அநியாய மாக இட்ட நச்சுவிதை, தனது நச்சுத்தன் மையை இழந்து இனிய மலர்களையும், கனி யையும் வழங்கும் அழகிய தருவாக வளர முடியுமா?

வளரத் தொடங்கி விட்டது. அமைதியாக கௌரவமாக, மிக்க பெருந்தன்மையுடன்

இந்த நிலையிலேதான் அதிபர் கந்தசாமி யின் முடியிறக்கம் அண்மிவந்தது. வட் டாரக்கல்வியதிகாரியின் ஆலோசனையையும் மீறி, சுற்றிவர முணுமுணுப்புகளாகவும், குசுகுசுப்புகளாகவும் எழுந்த எதிர்க்கருத் துக்களையும் பொருட்படுத்தாது செல்வநா யகத்தை அதிபராகப் பரிந்துரைத்து திணைக் களத்தின் அங்கீகாரமும் பெற்று அவரின் கைகளில் பொறுப்புக்களை அதிபர் கந்தசாமி அளிக்கவிருக்கிறார்.

அந்தநாளும் வந்தது. தமது அதிபர் ஆசனத்தில் இருந்து கந்தசாமி எழுந்திருந்து அதற்குப் பிரியாவிடை அளிக்க இன்னும் சில நிமிஷங்களே இருந்தன.

''எப்படியோ இண்டுவரைக்கும் இந்தப் பாரத்தைச் சுமந்திட்டன். இனி உம்மடை பாடு. உமக்கு நான் சொல்லக்கூடிய ஆலோசனை இதுதான். எப்படியாவது முத் துச்சாமியையும், வேதவல்லியையும் மாற் றிப் போடும். மற்றவாத்திமார் பசுக்க ளைப்போலை. உமக்கு எந்தக் கஷ்டமும் வராது அவை உம்மோடை ஒத்துழைப்பினம்.

இவ்வாறு கந்தசாமி சொன்னபொழுது செல்வநாயகம் தமது வழக்கமான போலிப் பணிவுச் சிரிப்புடன் ''உங்கடை அனுப வமோ திறமையோ எனக்கு இல்லை. நீங்கள் சொன்னபடி செய்யிறன் சேர். அடிக்கடி உங்களிட்டை வந்து ஆலோசனை கேட்டுத் தொந்தரவு தருவன். போயிட்டு வாருங்கோ சேர்'' என்று கூறிக் கைகூப்பினர்.

''இவனிட்டைப் பொறுப்பை அளிச்சிட் டன். முத்துச்சாமியிலை உள்ள கோபத்தாலை மட்டும் நான் இவனை அதிபராக்கேல்லை. அவனிட்டைப் பொறுப்பைக் குடுத்தால் கணக்குவளக்குக் கேப்பான். தளபாடங்கள் குறையுதென்பான், இதெல்லாம் தொந்த ரவுதானே? என்ர பென்சனுக்கும் பழுது வரலாம். இப்ப இவனைப் பசையடிச்சு ஒப் புக்குடுத்திட்டன். இனி இவன் பாடு, திணைக்களம் பட்டபாடு.'' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி கந்தசாமி அதிபர் அலுவலகத்திலிருந்து புறப்பட்டார்.

''எவ்வளவோ யூனியராயிருந்தும் இவரை வால்பிடிக்கிற மாதிரி நடிச்சு இண் டைக்கு அதிபரும் ஆயிட்டன், பாவம்! பதவி போச்சுதெண்டு மனிசன் பெருமூச்சு விடுகிறர். இவர் சொன்னமாதிரி நடந்தால் அவன்பாடு அதோகெதிதான். முத்துச்சா மியையோ வேதவல்லியையோ நான் மாற்றப் போறதில்லை முத்துச்சாமி கெட் டிக்காரன். அவனை உப அதிபராக்கினல் கூடின ஒத்துழைப்பும் கிடைக்கும். பாட சாலையும் முன்னுக்கு வரும். வேதவல்லியும் நல்லவள். அவளை அணைச்சுக்கொண்டு போனல் பள்ளிக்கூட வளர்ச்சிக்கு எதுவும் செய்வாள். இவையைக் கருவியாகக் கொண்டு அதிபர் பதவியை நிரந்தரமாக் கொள்ள வேணும். பார்ப்பம்'' என்ற வகை யிலே செல்வநாயகத்தின் சிந்தனை ஓடிற்று.

## கனவு

சமீபத்தில் பாரதத்தில் அஸாம் மாகா ணத்தில் தேர்தல் நடந்து, அஸாம் மாண வர்களே நிர்வாகத்தைக் கைப்பற்றினர். ஆட்சியைக் கைப்பற்றியுள்ள அஸ்ஸாம் கண பரிஷத்தின் அறுபத்து நான்கு சட் டப் பேரவை உறுப்பினர்களில் ஐம்பத் திரண்டு பேர் பிரமச்சாரிகள். இவர் களில் அறுபது பேர் பட்டதாரிகள். எல் லாருமே இளைஞர்கள். முதல்வரான புரொபுல்லகுமார் மகந்தாவின் வயது 32. நேர்மை, நியாயம், ஊழலற்ற ஆட்சி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின் றது, ஈழத்திலும் ஏப்ரலில் தேர்தல் நடந் தால், தமிழ்ப் பகுதி இளைஞர் கையில் கிடைத்தால்...

—ஆர். ஜக்சன்

# மக்களைத் தேடி வரும்

## திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்

## POPE JOHN PAUL II

"நானே நல்ல மேய்ப்பன்; என் மந்தையை நான் அறிவேன். என் மந்தையும் என்னை அறியும்"

— என்றுரைத்த யேசுபிரானின் வாக்கிற்கு இலக்கணம் வகுத்து வரும் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் பயணஞ் செய்து, தமது ஞானமக்களை நேரிலே கண்டு அவர்களுடைய சுகதுக்கங்களைக் கேட்டறிந்து, இயன்றவரை தாமும் பங்குகொள்ளும் அரும்பணியின் அடுத்த கட்டமாக, நமது தாய் நாடாகிய பாரதபூமிக்கு மாசித் திங்கள் வருகைதர ஏற்பாடாகியிருப்பதை எமது வாசக நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறோம்.



யாத்திரை செய்யும் திருத்தந்தை என்று பல்வேறு நாட்டு மக்களாலும், அன்புடன் அழைக்கப்படும் இரண்டாம் அருள் சின்னப்பர் தமது அன்புத் தூதை எடுத்துச் சென்று பல நாடுகளிலுள்ள பல்வேறு மக்களையும் நேரிலே கண்டு, இறையன்பையும், பிறர் அன்பையும் மக்கள் மத்தியில் பரப்புவதே தனது பிரதான குறிக்கோளாக்கி, தமது முதிர்ந்த வயதையும் குறைந்த தேக ஆரோக்கியத்தையும் ஒரு பொருட்டாகக் கருதாமல் தமது அன்புப் பணியை ஆர்வமுடன் தொடர்வதை நோக்குமிடத்து மக்கள் மனதில் ஓர் அருட்சியும் நல்லெண்ணமும் ஏற்படுவதில் ஆச்சரியமில்லை.

# திருத் தந்தையின் புத்தாண்டுச் செய்தி

''ஏழை எளியவர்களுடன் திருச்சபைக்குள்ள ஒருமைப்பாட்டை வலியுறுத்தி வற்புறுத்துகிறோம். அனைத்துக் கிறித்தவர்களையும் விசுவாசத்தில் செல்வந்தர்களாகும் வண்ணம் அழைப்பு விடுக்கிறோம். இயேசு பிரானின் மலைப்பிரசங்கத்தில் கூறிய வண்ணம் சமூக வாழ்க்கையில் வறியவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டியது ஒவ்வொரு கிறித்தவனின் கடமையாகும்.

ஆடம்பரமான வாழ்க்கை ஆசையில் இறைமையை மறந்து மோசம் போகாதிருக்க எப்பொழுதும் விழிப்பாக மக்கள் இருக்க வேண்டியது மிகமிக அவசியமாகும். மனிதன் இறைவனை மறந்து உலகப்பற்றுக்களில் மிகுந்த ஆசையுள்ளவனாக மாறிவருவதையிட்டு மிகுந்த கவலையடைகிறோம். ஆடம்பரங்களிலே நாம் அதிக வாஞ்சையுடன் சீவிக்கும் அதேநேரத்தில் இயேசுபிரான் வறுமையில் பிறந்த நிகழ்ச்சியை நாம் பெருமையுடன் கொண்டாடி வருகிறோமென்பதையும் நாம் கவனத்தில் கொண்டால், எமது ஆடம்பர, போக வாழ்வில் மனம் படியாது. மக்கள் அனைவரும் கடவுளின் புத்திரர்கள் என எண்ணிக் கொண்டால், ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு ஒழிந்து கிறித்தவ திருச்சபையில் ஒருமைப்பாடு மிளிரும்.

நடைமுறை வாழ்வில் வறியவர்கள் எனப்படுவோரின் குறைகளை நீக்குவது மட்டுமின்றி, மக்களின் ஆன்ம சீவியத்தையடுத்த வறுமையையும் நீக்குவது மிக மிக அவசியமாகும் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

திருச்சபையானது, இதய சுத்தியுள்ள மனமாற்றம் என்னும் மகத்தான விடுதலையை மக்கள் பெற வேண்டும் என்னும் இலக்கை நோக்கியே போராடி வருவதை கிறித்தவ உலகிற்குச் சொல்ல விரும்புகிறேன்.'' —என்ற முக்கிய கருத்துக்களை திருத்தந்தை நத்தார் செய்தியாகவும், புத்தாண்டு அறிவுரையாகவும் உலகெங்கிலும் உள்ள கிறித்தவ மக்களுக்கு வழங்கியுள்ளார்.

தகவல் : வண. பிதா. எஸ். பி. இராயப்பு ஓ. எம். ஐ.
வத்திக்கான் நகரம், உரோம், இத்தாலி.
மொழிபெயர்ப்பு : ரி. எம். அன்ரனிப்பிள்ளை, சட்டத்தரணி.

# திருத்தந்தை பற்றிய சில தகவல்கள்

அனைத்து உலக திருச்சபையின் ஞானத் தலைவர் திருந்தந்தை **2ம்** அருள்சின்னப்பர் போலந்து தேசத்தில் 1920-5-18ம் திகதி பிறந்தார். இவருடைய பெயர் கரோல் (**KAROL WOJTYLA**) வொஜ்ரிலா என்பதாகும். 1946-11-01ம் திகதி திருச்சபையில் குருவாக திருநிலைபடுத்தப்பட்டார், 1958-9-28ம் திகதி தனது சொந்த நாட்டில் ஆயர் (**Bishop**) பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

1964-1-13ம் திகதியன்று பேராயர் (**Arch Bishop**) என்ற நியமனம் பெற்றார்.

1967-6-26ம் திகதியன்று கர்தனுல் (**Cardinal**) என்னும் உயர்பதவிக்குத் தகுதிபெற்றார். 1978. 10. 16ம் திகதியில் அனைத்துலக திருச்சபையில் தலைவர் என்னும் உன்னதமான பதவிக்கு உயர்த்தப்பட்டார். 2ம் அருள் சின்னப்பர் என்னும் பெயரையும் தெரிந்து கொண்டார்.

திருத்தந்தை, உலகில் எங்கெல்லாம் நீதியும் சமாதானமும் சீர்குலைய நேரிட்ட போதெல்லாம் அங்கெல்லாம் அவ்வப்போது அக்கறையுடன் குரல் கொடுத்து, மக்கள் மத்தியில் அன்பு, சமாதானம் ஆகியவை நிலவ வேண்டுமென்று அடிக்கடி பிரார்த்தித்த வண்ணம் அனேக நாடுகளுக்குத் தமது அன்பின் பயணத்தைத் தொடர்ந்து வரும் இக்கால கட்டத்தில், நம் அயல் நாடாகிய பாரத நாட்டிற்கு வருகை தரும் வேளையில், நமது நாட்டிற்கும் வருகை தரக்கூடிய சாத்தியம் உண்டா என்னும் வினா பரவலாக எங்கும் கேட்கப்படுகின்றது.

ஆயினும், திருத்தந்தையின் வருகை பற்றிய செய்தி நமது நாட்டில் ஏற்கனவே தெரிவிக்கப்படாத காரணத்தினால், நம்பிக்கையான பதில் இதுவரை கிடைப்பதாயில்லை. திருத்தந்தையின் வருகைக்கு நம்நாடு எதுகாலவரை காத்திருக்க வேண்டுமோ என்று நாமும் ஏங்கிய வண்ணமிருக்கின்றோம்... எப்படியாயினும், திருத்தந்தையின் வருகை நம் நாட்டிற்கும் கிடைப்பது சாத்தியமாகுமென்றால், நமது நாட்டு மக்களுக்கு அது பெரும் மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாய் அமையுமென்பது திண்ணம்.

## திருத்தந்தையின் வருகைக்கு இந்தியாவில் தயார் நிலை

பற்பல பிராந்தியங்களிலும், மறைமாவட்டங்களிலும் இந்நிகழ்ச்சியையொட்டி ஆன்ம மறுமலர்ச்சிக்குரிய ஆயத்தங்களும் செயல்திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. திருத்தந்தையின் வருகை காரணமாய், விசுவாசம், நம்பிக்கை சேவை மனப்பான்மை ஆகியவற்றில் ஆர்வம் அதிகரிக்க வேண்டுமென்ற ஆசிச் செய்திகளும் காணக்கிடைத்துள்ளன.

மேலும் திருத்தந்தையின் வருகையானது இந்திய மக்களின் மத்தியில் மகத்தான எதிரொலிகளை ஏற்படுத்துமென்பது திண்ணம். இது பற்றிய ஆயர்களின் சுற்றறிக்கையில், இது ''மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சி'' என்று குறிப்பிடுவதுடன் பிராந்திய திருச்சபைக்கு மட்டுமின்றி முழுத் தேசத்திற்குமே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சி'' என்று குறிப்பிடுவதுடன், ''நீதிக்கும், முன்னேற்றத்திற்கும், சமாதானத்திற்கும் எடுக்கப்படும் முயற்சிகளின் சமய உணர்ச்சிகளுக்கு ஊக்கமளிப்பதாய் அமையுமென்றும் கூறி, திருத்தந்தையை இந்தியாவுக்கு வருகை தரும்படி அழைப்பு விடுத்த இந்திய ஜனாதிபதி ஜெயில்சிங் அவர்களுக்கும், ஆயர்கள் நன்றி தெரிவித்துள்ளனர். ஈற்றில் திருத்தந்தையின் வருகையானது இந்திய அரசுக்கும் திருச்சபைக்குமிடையில் உள்ள நல்லெண்ணத்தை வளர்க்கவும் வகை செய்யுமென்ற நம்பிக்கையையும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மூதேவியும் சீதேவியும்

வண. வின்சன்ற் பற்றிக்

ஒருமுறை மூதேவியும் சீதேவியும் திருமாலைச் சந்திக்கின்றார்கள், ''எங்கள் இருவருள் யார் அழகி?'' என்று திருமாலைக் கேட்கின்றார்கள். இருவரையும் சிறிது தூரம் போய் வருமாறு அவர் பணித்தார். திரும்பி வந்ததும் திருமால் மூதேவியைப் பார்த்து, ''நீ போகும் போது அழகாய் உள்ளாய்'' என்றும் சீதேவியைப் பார்த்து, ''நீ வரும் பொழுது அழகாயுள்ளாய்'' என்றும் சீதேவியைப் பார்த்து, கூறினார்.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது முதுமொழியாகும். உள்ளத்தின் அழகு தான் உடலில் புலப்படுகின்றது, தீய பண்பாடுகள், தீய பழக்கவழக்கங்கள், தன்னலம் அகந்தை, ஆணவம் போன்ற மூதேவியின் தரிசனங்கள் எம்மை விட்டு பிரிகின்றபொழுது எமது உள்ளம் அழகு உள்ளதாகக் காணப்படுகின்றது. இவ்வாறே இறைப்பக்தி, பிறரன்பு பகிர்தல், விருந்தோம்பல், பணிபுரிதல் போன்ற சீதேவியின் சிறப்புப் பண்பாடுகள் எம்மைத் தேடி வருகின்ற பொழுது எமது உள்ளம் அழகுள்ளதாகின்றது.

அன்புறவின் அடிப்படையில் ஒருவரது அழகு இரசனைக்குரியதாகின்றது. அங்கத்தில் குறைவிருந்தாலும் அன்பினில் குறையாத மனிதர்கள்தான் அனைவராலும் விரும்பப் படுகின்றார்கள். அவர்களின் உள்ளங்களில் சீதேவியின் தாலாட்டுப் பாடல்கள் ஒலிக்கும்.

# காட்டிலே பொங்கல்



- புவனா -

ஊரெங்கும் ஒரே பட்டாசு வெடிச் சப்தம். எங்கும் மக்களின் நடமாட்டம்; ஆரவாரம்; அமர்க்களம். பச்சரிசி, நெய், மஞ்சள், இஞ்சி இலைக்கொத்து, வெல்லம், கரும்பு என எங்கும் இனிய மணம்.

ஊர்க்கோடியில் அந்தக் கடை இருந்தது.

கட்டெறும்புகள் சாரை சாரையாக வெல்ல வாசனையை மோப்பமிட்டன; நெய்ச் சாடியை முற்றுகையிட்டன. முந்திரிக் கொட்டைகளை துணுக்குகளாக்கித் தின்று கொண்டிருந்தன. பிளம்ஸில் மூழ்கிவிட்டன.

கடைக்காரன் அவற்றை உதறித் தட்டிக் கொட்டி எட்டவிரட்டினான்.

கட்டெறும்புகளுக்கு ஒரே ஏக்கம்.

''கடைக்காரன் இப்படி விரட்டிவிட்டானே? பிளம்ஸ் முந்திரிக் கொட்டை என்று தனித்தனியே தின்னவே இத்தனை ருசி என்றால்... இவை எல்லாம் ஒன்று கலந்து செய்யும் பொங்கல் என்ன சுவையாயிருக்கும்?''

தங்கள் ஏக்கத்தை வழியில் சந்தித்த முயலாரிடம் வெளியிட்டன. முயலாருக்கு காதுகள் இரண்டும் விறைத்து உயர்ந்தன.

''ஆமாம் பொங்கல் நன்றாக இருக்கும். நாம் ஏன் பொங்கல் கொண்டாடக்கூடாது? வாருங்கள்... எங்கள் நண்பர்களை ஆலோசனை கேட்போம்'' —என்றது.

## 2

மான்குட்டி, கரடிக்குட்டி, யானைக் குட்டி, ஒட்டகச்சிவிங்கி, கிளி, புரு, தேன் சிட்டு, முயல் கட்டெறும்பு, எலி, பசு, எருது குரங்கு எல்லாரும் ஒன்றுகூடினர். எறும்பாரைக் கண்டதும் கரடிக்குட்டியும், யானைக் குட்டியும் எட்ட அமர்ந்து கொண்டன. கட்டெறும்பு கடித்துக் கரடியாரும், காதுக்குள் கட்டெறும்பு நுழைந்து யானையாரும் பட்ட அவஸ்தையை இப்போது நினைத்தாலும் இருவருக்கும் நடுக்கம் தான்.

பொங்கலை எப்படியும் மனிதரைப் போல் கொண்டாட வேண்டும் என்று தீர்மானமாயின.

''பானை வேண்டுமே?'' -என்றது முயல்.

''பானைக்கு என்ன பஞ்சம். ஆற்றங்கரைப் பிள்ளையார் கோவிலடியில் பெண்கள் நீராடிவிட்டு நீர் எடுத்துச் செல்லப் பானைகள் கொண்டுவருவார்கள். அவற்றில் ஒன்றைக் கொண்டுவர நானாச்சு'' —என்று யானைக்குட்டி ஓடிச்சென்றது.

''அரிசி? ..''

''எங்கள் வளையில் புத்தம்புதுக் கதிர் நெல் ஏராளமாக உள்ளது. நான் கொண்டு வருகிறேன்'' —என்றது எலி.

''கரும்பு .. நான் கொண்டு வருகிறேன் எனது தோட்டத்திலிருந்து'' —என்றது கரடி.

''பால் நான் தருவேன்!''—என்றது பசு.

''நெல்லை மணியாக்கித் தருவேன்'' —என்றது எருது.

''தேன் நான் தருவேன்'' —என்றது தேன்சிட்டு.

''முந்திரிப்பருப்பு நான் கொண்டு வருகிறேன்'' என்று குதித்துப் பாய்ந்தோடினார் குரங்கார்.

''வெல்லம்... பிளம்சுக்கு நாமாச்சு'' —என்றபடி கட்டெறும்புகள் சாரைசாரையாக நகர்ந்தன.

'விறகுக் கட்டுகளை நான் சுமந்து வருகிறேன்'' என்றது மான்குட்டி.

''பூக்களைக் கொண்டு வருவோம்''—என்றன குருவிகள்.

''எல்லாம் சரிதான். பொங்கல் செய்ய நெருப்புக்கு எங்கே செல்வது?'' —என்று எல்லாப் பிராணிகளும் திகைத்தன.

## 3

காட்டின் எல்லையிலுள்ள கொல்லன் உலைக்கூடத்தில் எப்போதும் நெருப்புக் கனன்று கொண்டிருக்கும். கலைந்த தலையும் சிவந்த கண்களும், கொடூரமான முகமும் கொண்டவன். அப்பாதையில் செல்லும் பிராணிகளை வலைவைத்துப் பிடித்து உண்பவன். ஆதலால் அவ்வழியே போகவே மிருகங்கள் பயப்பட்டன. அப்படியானல் நெருப்புக்கு எங்கே போவது?

புதர்மறைவில் நின்று கொண்டிருந்த நரி கேட்டது. ''நான் நெருப்புக் கொண்டு வந்தால் எனக்கு பொங்கல் தருவீர்களா?''

எல்லா மிருகங்களும் ஒன்றுகூடி 'ஓ' என்றன.

''ஆனல், ஒரு நிபந்தனை'' —என்றது.

'நிபந்தனையா!' என்று கரடியார் திடுக்கிட்டார். முன்பும் ஒருமுறை இப்படித்தான். நரியாரும் அவருமாகச் சேர்ந்து கிழங்கு பயிரிட்டனர். நரியார் கரடியிடம் ஒரு நிபந்தனை போட்டார்.

''நாம் இம்முறை போடும் பயிரில் நிலத்திற்குக் கீழ்உள்ளவை எனக்கு. மேலுள்ளவை உனக்கு என்றுதான் பங்கு பிரிக்க வேண்டும். சம்மதமா?'' என்றது. கரடி முன் பின் யோசியாமல் சம்மதம் கொடுத்தது. விளைந்தவுடன் நரி கிழங்கு முழுவதையும் கொள்முதல் செய்ய கரடியார் விழித்தார். மறுபடியும் பயிர் செய்ய நரி கரடியாரை அழைத்தது. முதலில் மறுத்த கரடியார் பின் ஒருவாறு சம்மதித்து, 'இம்முறை நிலத்திற்கு கீழ் உள்ளது என் பங்கு; மேலுள்ளது உனக்கு' என்றது நரி சம்மதித்து— வாழை பயிரிட்டது.

கரடிக்கு அவமானமாகப் போய்விட்டது அன்று தொடக்கம் நரியுடன் கூட்டோ ஒப்பந்தமோ செய்வதில்லை. நரியின் பக்கமே தலை வைத்துப் படுப்பதில்லை.

'என்ன நிபந்தனை?'

'நெருப்பால் கனிந்தவை யாவும் எனக்குத் தான்' என்ருர் நரி.

எல்லா மிருகங்களும் ஒன்று சேர்ந்து கத்தின.

''மோசம்!... மோசம்.. அப்படியானல் எங்களுக்குப் பொங்கல் இல்லையா?...''

முயல் மனதில் திடீரென ஒரு எண்ணம் பளீரிட்டது

''சரி...சம்மதம்... நாங்கள் நெருப்பால் கனிந்தவற்றை முழுவதும் உமக்கே தருவோம். நீர் ஒன்று கூடவிடாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்றது

நரி நெருப்புக் கொண்டுவர ஓடியது.

## 4

நரியார் கொல்லன் வெளியே சென்றிருந்த நேரமாக பார்த்து பட்டடையிலிருந்து ஒரு இடுக்கியினல் ஒரு தணல் துண்டைக் கொண்டு வந்து சேர்த்தது.

எல்லா மிருகங்களும் நரியை ஆரவாரமாக வரவேற்றன.

பொங்கல்அமர்க்களமாக நடந்தேறியது.

பொங்கல் மணம் நாசியை நிறைத்தது. நாவில் நீரூறியது. எல்லா மிருகங்களும் வரிசையாக உட்கார்ந்தன. முயலார் பரிமாறப் பாத்திரத்தைக் கையில் எடுத்துக் கொண்டார். எல்லார் இலைகளிலும்பொங்கல்மணத்துடன் நிறைந்தது. நரியாரை யாருமே கவனிக்கவில்லை. அவருக்குக் கோபம் கோபமாக வந்தது.

''எல்லாரும் சாப்பிடுவதை நிறுத்துங்கள். என்னுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளை மறந்தாவிட்டீர்கள்? நெருப்பில் கனிந்த பொங்கல் எனக்கல்லவா சொந்தம்? நீங்கள் எப்படி உண்ணலாம்?''

எல்லா மிருகங்களும் கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போய்விடுமோ என அஞ்சின.

முயல் முன்னுக்கு வந்தது.

''நிபந்தனை என்ன? நெருப்பில் கனிவது முழுவது உமக்கு என்பது தானே? நெருப்பில் முதலில் கனிந்தவை காட்டு விறகுகளே. பின்னர்தான் பொங்கல். ஆகவே அதோ அடுப்பில் கனிந்து கனன்றுகொண்டிருக்கும் நெருப்புத் தணல்களே உமக்குச் சொந்தம். மொத்தமாக எடுத்துச் செல்லும். இல்லாவிட்டால் உமது வாலிலேயே கட்டி அனுப்புவோம். அதன் பிறகே உமக்குப் பொங்கல் என்றது.''

'அநியாயம் அநியாயம் .. மோசம்' என நரி ஊளையிட்டது.

'நல்ல நாளும் அதுவுமா ஊளையிடாதே! இதோ கனிந்த நெருப்புத்துண்டங்களை எடுத்துச் செல் என்று நாயொன்று கொள்ளிக்கட்டையை வாயில் கௌவி வந்து நரியின் வாலில் போட்டது.

வாலில் நெருப்புப் பற்றிய நரி பயத்துடன் வேகமாக ஓடி மறைந்தது.

எல்லா மிருகங்களும் பொங்கலை அமர்க்களமாகக் கொண்டாடின. ●

**நம்பி:**

ஆலங்கிளையின் மேலாக
அழகாய் ஓடும் அணிலாரே!
நாலு கால்கள் எனக்கிருந்தால்
நானும் ஓடி வருவேனே,

**அணில்:**

தம்பி தம்பி உன்னைப்போல்
தமிழைப் பேச வருமென்றால்,
நம்பியுடனே பள்ளிக்கு
நானும் ஓடி வருவேனே!



விரைவில் வெளிவர இருக்கும் பா. சத்தியசிலன் சிறுவர் நூலிலிருந்து

# நாக புஷ்பம்



மகேந்திரபுரியை வீரவர்மன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் குடிகளிடம் அதிக அன்பு கொண்டவனாதலால், மக்கள் அவன் மீது உயிரையே வைத்திருந்தனர். அவனுக்கு சித்ரா, சுபத்திரா என இரு அழகிய பெண்மக்களே இருந்தனர். தனக்குப் பின் அரசு கட்டிலேற ஓர் ஆண் மகவு இல்லையே என்ற ஏக்கம் மன்னனுக்கும், இளவரசன் இல்லையே என்ற கவலை மக்களுக்கும் இருந்து வந்தது.

பெண் மக்கள் வளர்ந்து பெரியவர்களானார்கள்.

ஒரு நாள் அரண்மனைக்கு குள்ளமுனிவர் ஒருவர் வந்தார். மன்னன் ஓடோடிச் சென்று அவரை வரவேற்று உபசரித்தான். அதனால் மகிழ்ந்த முனிவர் மன்னனின் கவலையைப் போக்க எண்ணினார்.

அரசியை அழைத்து ஐந்து குளிகைகளைக் கொடுத்து, பாலுடன் விழுங்கும்படியும், நாகதேவனை தினமும் வழிபட்டு வரும்படியும் அதனால் உங்களுக்குப் புத்திரபாக்கியம் கிட்டும் எனவும் கூறினார். ஆனால், இவற்றில் ஏதும் குறை நேர்ந்தால் பல அநர்த்தங்கள் ஏற்படும் எனக் கூறி விடைபெற்றார்.

அடுத்தநாள். அரசி பயபக்தியுடன் நாகதேவனை பூஜை செய்து வழிபட்டு விட்டு, குளிகைகளை உண்ண எடுத்த போது ஒரு குளிகை கீழே விழுந்து உருண்டோடி மறைந்துவிட்டது. அதனை தேடியும் கிடைக்கப் பெறாமையால் மிகுதி நான்கு குளிகைகளை விழுங்கி, அரசனிடம் நடந்ததைக் கூறாது மறைத்துவிட்டாள்.

சில நாட்களில் அரசி கர்ப்பிணி ஆனாள்.

## 2

ஒரு பௌர்ணமி நாளில் அரசி அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். ஆனால்... என்ன விநோதம்?...

குழந்தையின் கால்களுக்குப் பதிலாக, இடுப்புக்குக் கீழ் நாகபாம்பின் வாலைப்போல உடம்பு அமைந்திருந்தது.

அரசனுக்கும் அரசிக்கும் சோகம் தாங்க முடியவில்லை. மக்களும் கவலையிலாழ்ந்தனர். உலகெங்கணுமிருந்து மந்திரவாதிகள், சோதிடர்கள், வைத்தியர்கள் எல்லாரும் வந்து வந்து போனார்கள். ஒருவராலும் இளவரசனின் குறையைப் போக்கமுடியவில்லை; தோல்வியுடன் திரும்பினர்.

தங்கள் பெற்றோரின் கவலையைப் போக்குவது தங்கள் கடமை என உணர்ந்து அரசன், அரசி முன் சென்று நின்றனர் சித்திராவும், சுபத்திராவும்,

''அரசே!... தம்பியின் குறைபாட்டைப் போக்க, வழிகண்டு பிடிப்பதற்காக தேச யாத்திரை செய்ய அனுமதி தாருங்கள்'' என்று கேட்டனர். மன்னனும் மகிழ்ந்து விடை கொடுத்தான்.

அடுத்த நாள் காலை. இருவெண்புரவிகள் காற்றைவிட வேகமாகப் புறப்பட்டன. பன்னிரு நாள் பயணத்தின் பின் இமயமலைச் சாரலை வந்தடைந்தன.

ஒரு குகை வாசலில் பெருந்திரளான மனிதர்களும் ரிஷிகளும் நிறைந்திருப்பதைக் கண்டனர். இருவரும் கூட்டத்தைப் பிளந்து கொண்டு சென்று பார்த்த போது, அங்கே அவர்கள் தேடி வந்த குள்ளமுனிவர் சமாதி நிலையடையும் தறுவாயில் நிஷ்டையிலிருந்

தார். ''முனிபுங்கவரே! எங்கள் தம்பியை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்!'' என அவர் காலடியில் விழ்ந்து வணங்கினர்,

மெலிதாகத் திறந்த கண்களிலே கருணை தெறித்தது,

''குழந்தைகளே... நீங்கள் இன்று வந்தது நன்ருகிவிட்டது. நாளை வந்திருந்தால் என் பூதவுடலைத்தான் தரிசித்திருப்பீர்கள். உங்கள் தம்பிக்கு நிவாரணம் வழங்கும் ஆற்றல் நாகபுஷ்பத்துக்கே உண்டு. ஆனுல் அதை அடைவது கடினம். பல துன்பங்களை அனுபவித்து, பல தியாகங்களையும் செய்யவேண்டி வரும்... நீங்கள் பாதாள லோகம் சென்று நாகபுஷ்பம் உள்ள நந்தவனத்தை அடைய... நான் தரும் இந்தப் பறக்கும் கம்பளத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்...'' என்று கூறிவிட்டு சமாதி நிலைக்குச்சென்றுவிட்டார்.

## 3

தாங்கள் வந்த குதிரைகளை ஆச்சிரம வாசலிலேயே கட்டி விட்டு மாயக்கம்பளத்தில் ஏறி அமர்ந்தனர்.

''ஹே! மாயக்கம்பளமே? எங்களைப் பாதாள லோகம் கொண்டு செல்!'' என்றனர்.

மாயக்கம்பளம் விர்ரென்று பறக்கலாயிற்று.

ஆறுகள்... கடல்கள்... சப்த சமுத்திரங்கள்... ஏழு மலைகள் தாண்டிக்கம்பளம் பறந்தது. எரிமலை வாயினருகே வந்ததும் கம்பளம் கீழிறங்கியது.

'இதற்கு மேல் என்னைப் பறக்கவிடாமல் ஏதோவொரு சக்தி என்னைப் பின் தள்ளுகின்றது'—என்றது மாயக்கம்பளம். அவர்கள் இருவரும் கம்பளத்தை விட்டிறங்கினர். அதனைச் சுருட்டிக் கைகளில் எடுத்துக்கொண்டனர். இறங்கிய இடம் ஒரே காடு. எங்கு திரும்பினும் காடு... மரங்கள்... புதர்கள்... பாறைகள்... பாம்புகள்...விலங்குகள்...அவற்றின் கர்ஜனை, உறுமல்கள் எங்கும் நிறைந்திருந்தன.

இருவரும் தத்தம் உடைவாள்களை எடுத்துக் கொண்டு நடக்கலாயினர். அப்போது அவர்களை நோக்கிப் பிரமாண்டமான ஆமையொன்று வந்து கொண்டிருந்தது. பார்க்கவே பயங்கரமாக... இருவருமே பயத்தால் உறைந்து போயினர். ஆனுல் அதன் கண்களிலிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. பாரிய பெரிய முள் ஒன்று அதன் கண்களில் ஏறியிருந்தது.

சித்ரா தைரியமாக அதன்முன் சென்ருள். அதன் கண்களில் தைத்திருந்த முள்ளை எடுத்தாள். அயலில் காணப்பட்ட மூலிகைகளால் அதன் காயங்களைத் துடைக்கவும் இரத்தம் பெருகுவது தடைப்பட்டது. அவர்கள் நடக்கத் தொடங்க, ஆமையும் பின் தொடரலாயிற்று.

அங்கு காணப்பட்ட மலர்களெல்லாம் பெரிய பெரிய கடகங்களைப் போலவும்... தேனுண்ணும் வண்டுகள் பெரிய பறவைகள் போலவும் விளங்கின. ஒரு தும்பி அவர்கள் அருகாகப் பறந்து வந்த போது பெரிய புயலடித்து ஓய்ந்தது போலிருந்தது.அங்குஎல்லா உயிரினங்களுமே ராட்சத வளர்ச்சிபெற்றிருந்தன.

எதிரே ஆறு ஒன்று தென்பட்டது. ஆறு கரைபுரண்டோடிக் கொண்டிருந்தது. அதில் காணப்பட்ட மீன்கள் ஒவ்வொன்றும் பெரிய முதலைகளைப் போன்றிருந்தன.

ஆற்றை எப்படிக் கடக்கலாம் என யோசித்தனர். ஒரு வழியும் தென்படவில்லை. அப்போது ஆமை அவர்கள் முன் வந்தது.

''பெண்களே! மென்மையான இதயம் கொண்டவர்களே! நீங்கள் என்மீது காட்டிய பரிவுக்காக உங்களை அக்கரை சேர்க்கிறேன். என் மீது ஏறிக்கொள்ளுங்கள்''—என்றது.

இருவரும் மகிழ்ச்சியுடன் ஏறிக் கொண்டனர். இருவரையும் அக்கரை சேர்த்த ஆமை அவர்களிடமிருந்து விடைபெற்றது.

இரவு வந்தது, இருவரின் விழிகளிலும் நித்திரை நிறைந்தது. ஆனுல், இருவரும் ஒரே நேரத்தில் தூங்கினுல் வரும் ஆபத்தை எப்படித் தவிர்ப்பது? எனவே இருவரும் மாறி மாறி விழித்தும், துயில் கொண்டும் இரவைக் கழித்தனர்.

விடிந்தது. பசிவயிற்றைக் கிள்ளியது, ''உண்பதற்கு ஒன்றுமில்லையே. காட்டுக்கனிகளைத்தான் உண்ண வேண்டும்.''— என்று சித்ரா சொல்லவும் அவர்கள் மீது கனிவர்க்கங்கள் கொட்டின. மரத்தை அண்ணுந்து பார்த்தனர். பெரிய ராக்ஷத விருட்சம்தான்.

ஆனால் கிளைகளில் எந்தவித கனிகளையும் காணோம்.

இதுதான் கற்பக தருவோ?

மரத்தின் கிளைகள் பலமாக ஆடின.

'அப்படியானல் கனிகளுடன் உண்ணப் பல வகையான... சுவையான உணவுப் பண்டங்கள் கிடைத்தால்...''

மரத்தினடியில் ஏராளமான லட்டு, ஜிலேபி, பூரி, தேன்குழல், மிட்டாய்... இட்டலி... தோசை... எல்லாம் தட்டுத்தட்டாய் வந்து நிறைந்தன. அவர்கள் வயிருர உண்டு மகிழ்ந்தனர்.

'கற்பகதருவே! நாங்கள் எம் தம்பிக்கு நல்ல கால்களைப் பெற நாகபுஷ்பம் தேடிப் போகிறோம். செல்வதற்கு ஏற்றதாக இரு குதிரைகள் வழங்கமாட்டாயா?...' எனக் கேட்டனர். பின்னல் குதிரைகள் கனைக்கும் சப்தம் கேட்டது. திரும்பிப்பார்த்தார்கள். அவர்கள் குள்ளமுனிவரின் ஆச்சிரமத்தில் விட்டுவிட்டு வந்த அவர்களின் குதிரைகளே!

அவர்கள் தத்தம் குதிரையில் ஏறி அமர்ந்ததும், என்ன மாயமோ தெரியாது. எந்த விதக் கட்டுப்பாட்டிற்கும் அடங்காமல் மூர்க்கத்தனத்துடன் ஓடலாயின. இது இந்தஇடத்தின் மாயவேலை. தங்கள் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் வழியில் எதிர்ப்பட்ட மரக் கொப்புகளைப் பிடித்துக் கொண்டு தொங்கினர். பின்னர் புற்றரையில் விழுந்து உருண்டனர். நல்ல வேளை அவர்கள் வாள் உறையை விட்டு நீங்கவில்லை

முன்னே நடக்கத் தொடங்கினர்.

## 4

தூரத்தில் வானளாவிய உயர்ந்த கோபுரங்கள் கொண்ட ஒரு மாளிகை தகத்தகாயமாக மின்னியது. எங்கும் நாகமணிகளின் பிரகாசம்.

ஆ! இதுதான் நாக தேவன் மாளிகையோ?

திடீரென்று கால்கள் எடுத்து வைக்க முடியாதபடி எங்கும் நாகப்புற்றுகள்... பாம்புப் புற்றுக்கள்... புற்றுக்கள் ..

உருவிய வாளுடன் மெல்ல மெல்ல மாளிகையை நோக்கி நடந்தனர். வழியெல்லாம் பாம்புகள். ஆனல் இவர்களின் காலடி ஓசையைக் கேட்டு ஓடிஒழியலாயின. இருவரும் மாளிகையை நெருங்கினர். வாசற்கதவை பலம் கொண்ட மட்டும் வேகமாகத் தள்ளினர். அது 'திடீர்' எனத் திறந்து கொண்டது.

நீண்ட அகன்ற உயர்ந்த நடுமண்டபத்தில் ஒரு மேடை. அதில் ஒரு நாகரத்தினம் ஒளிவிட்டுக் கொண்டிருந்தது. அதற்குமப்பால் ஒரு நீராழி மண்டபம் தெரிந்தது. அதன் மையத்தில் ஒரு அற்புதமான மலர் ஒன்று காற்றில் சிரித்துக் கொண்டிருந்தது.

அதுதான் நாக புஷ்பமா?

அதனைச் சூழ்ந்து கருநாகங்கள் வளைய வளைய வளைய வந்து கொண்டிருந்தன.

நாகபுஷ்பத்தைக் கண்ட ஆவலில் சுபத்திரா வேகமாக அத்திசை நோக்கி ஓடினள். ஆனல் அந்தோ! எல்லைக் கோடாக நீண்டு கிடந்த அந்தக் கொடியை நாகத்தின் மீது அவள் கால்கள் பட்டதும் அது தனது இரட்டை நாக்கை நீட்டி, தன் பற்களால்அவளை இருமுறை தீண்டிப் புரட்டிவிட்டது.

சுபத்திரா 'அக்கா!' என்றலறிய வண்ணம் சாய்ந்தாள்.

சித்ரா தன் தங்கையை நோக்கி நகர்ந்த போது, பறநாகம் ஒன்று பறந்துவந்தது. அதன் கண்கள் தீபங்களாக ஜொலித்தன. சித்ரா தன் வாளை எடுத்து வீசினள்,

பாம்புக்கும், அவளுக்குமிடையில் ஜீவ மரணப் போராட்டம். அவள் களைத்துப் போனள். தங்கையின் இறப்பு... தம்பியின் கால்கள் எல்லாம் அவளைப் புத்துணர்ச்சி கொள்ள வைத்தது. ஆவேசத்துடன் வாளை வீசினள். நாகம் துண்டாடி நிலத்தில் வீழ்ந்து துடித்தது. மறுவிநாடி—

அங்கு நாகதேவன் காட்சியளித்தான்.

'பெண்ணே! சகோதரபாசம், அஞ்சாமை விடாமுயற்சி, ஜீவகாருண்யம், தன்னலமற்ற சேவை, வீரம் விவேகம் கொண்ட நீ இங்கு நாகபுஷ்பத்தை தேடிவந்திருக்கிறாய். ஆனல் அதை அடைவது மிகக் கடினமாயிற்றே. யாராவது ஒருவரை பலிபிட்டால் தான் நாகபுஷ்பத்தை அடையலாம்'- என்முன்.

'அப்படியானல் சுபத்திரா...?'

'வெறும் மயக்கம்தான்...'

—''அக்கா...'' என ஓடி வந்து சித்தி ராவைத் தழுவினுள் சுபத்திரா.

—சித்திரா நடந்ததைக் கூறினுள். யாராவது ஒருவர் இன்னெருவரைப் பலியிடவேண்டும். யார் யாரைப் பலியிடுவது? இருவரும் தங்களைத்தான் பலியிட வேண்டுமென வாதிட்டார்கள்.

—'சரி... நீங்கள் இருவரும் நாகபுஷ்பத்தை நெருங்குங்கள்... யாரோ ஒருவரை நிலம் பிளந்து பலி வாங்கும்? —என்றான் நாகதேவன்.

நாகபுஷ்பத்தை இருவரும் நெருங்கினர்; படீர்!

சுபத்திரா நிலத்தால்விழுங்கப்பட்டாள்.

சித்திரா தவித்துப் போனுள். மனதைத் திடப்படுத்திக் கொண்டு, நாகபுஷ்பத்தைப் பறித்தாள்... அப்போது—

எங்கிருந்தோ இனிமையான இசை எழுந்தது. மங்கல மணிகள் ஒலித்தன. ஏராளமான பெண்கள் அவளை நோக்கி ஓடிவந்தனர். அவள் ஆடைகள் ஒரே தங்கமயம். மிக மிக அழகானவளாக மாறியிருந்தாள். அவளுக்கு அதிசயமாக இருந்தது.

'நல்ல மனம்கொண்டோர் எப்போதுமே அழகானவர்கள்தான். பொன்மனம் கொண்டோர் உடலும் தங்கம்தான் என்றான் நாகதேவன். அவளின் பின்னுல் தங்கை சுபத்திரா ஓடிவந்தார்கள்.

' சித்திரா உன் தியாக உள்ளம் உன் தங்கைக்கு உயிர் கொடுத்துவிட்டது. விரைந்து சென்று உங்கள் தம்பியைக் காப்பாற்றுங்கள். இனிப் பறக்கும் கம்பளம் உங்களுக்கு உதவும்'' என்றான் நாகதேவன்.

மாயக்கம்பளம் அவர்களைச் சுமந்தபடி மகேந்திரபுரி நோக்கிப் பறக்கலாயிற்று.

---

'இதயங்கள் பொங்கும் போது
எமக்கென்ன பொங்கல்' என்ற
அதையும் நாம் ஏற்றுக் கொண்டே
அகதிகட்கு உதவல் வேண்டும்.

உதயங்கள் இன்றிச் சொந்த
ஊரின்றி உணவும் இன்றி
வதைபடும் உடன் பிறப்பே!
பொங்கல் வாழ்த்து, ஏற்றுக்கொள்க.

— பா. ச,

# இம்மாதம்

## செய்தியின் பின்னணியில்

சாண்டில்யன் குமுதத்தில் எழுதி வெளிவந்த 'விஜயமகாதேவி' வரலாற்று நாவலைப் புத்தகமாக வெளியிடும் உரிமையைப் பெற பாரதி நிலையம் என்னும் பதிப்பகம் எழுத்தாளருக்கு வழங்கிய தொகை எவ்வளவு தெரியுமா? ஐம்பத்தோராயிரம் ரூபாய்கள்- இந்திய நாணயத்தில். அப்படியானுல் ஈழத்து நாணய மதிப்பில் ஏறக்குறைய ஒரு லக்ஷத்து இருபதாயிரம் ரூபாய்கள். அம்மாடியோ!

'துச்சாதனன் அன்று ஒரு துருபதராஜ குமாரியை (அல்லது பாண்டவர்களின் ராணியை) மட்டும்தான் துகிலுரிந்தான். இன்று ஒரு பத்திரிகைத் தொடர்கதை சரித்திராசிரியர் சேர, சோழ, பாண்டிய, பல்லவ, யவன, சீன, அங்க, வங்க. கலிங்க (அன்று ராஜ்ஜியங்கள் ஐம்பத்திரண்டு) ராஜகுமாரிகளையும், ராணிகளையும் துகிலுரித்து, முன்னழகு, பின்னழகுகளைத் தன் வாசகர்களுக்குக் காட்டுகிருர். துச்சாதனன் போல இவருக்கும் புகழ் நிச்சயம்.

—துக்ளக் 15-12-85 க. நா. சு.

---

மலேசியாவிலிருந்து கோமாளி என்ரெரு நகைச்சுவை இதழ் வெளிவருகிறது. உலகின் முதலாவது தமிழ் நகைச்சுவைப் பத்திரிகை என்ற பிரகடனத்துடன் வெளியாகிறது. சமீபத்தில் அங்கு விஜயம் செய்த பிரபல தமிழ் எழுத்தாளரும், பேராசிரியருமான 'நந்தி' அவர்கள் இதனைக் கண்ணுற்று, அப்பத்திரிகைக்கு ஒரு மறுப்புக் கடிதம் எழுதினர்.

ஈழத்தில் சிரித்திரன் என்றோர் நகைச்சுவை ஏடு இருபத்திஇரண்டு வருடங்களாக வருவதாகவும், உங்கள் அட்டையில் பொறிக்கப்படும் உலகின்....., என்ற பிரகடனம் தவறு என்று

அடுத்த கோமாளி இதழ் நந்தியின் கடிதத்தையும் பிரசுரித்தது. அட்டையிலும் மாற்றம் இப்படியிருந்தது. 'உலகின் முதலாவது தமிழ் காட்டுன் பத்திரிகை'

— தகவல் : மணியம்



## மேடம்


**அசுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்**

உங்களுக்கு சூரியன் 10ம் வீட்டில் சஞ்சரிப்பதால், தீமைகள் கூடிய பலனே தென்படுகின்றன. நினைத்த காரியங்கள் எளிதில் முடியாது. கைக்கெட்டியது வாய்க்கெட்டாத நிலை. தொழில் நிலைகள் மந்தமாகவே இருக்கும். பற்றுக்குறை நிலவும். மனம் அடிக்கடி குழம்பவேண்டிய சூழ்நிலைகள்ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு இதுவரை இடமாற்றம் கிட்டும் ஆயினும் கூடாத நட்பினால் உபத்திரவப்படவேண்டியிருக்கும். பெண்களுக்கு குடும்ப சுகக் குறைவு, புத்திரரால் கவலை, வீடு மாற்றம் என்பன மன உளைச்சலைக் கொடுக்கும். குடும்பத் தகராறுகளுக்கும் இடமுண்டு. கன்னிப் பெண்களுக்கு அவப்பெயர் கேட்கவும், புதிய உறவுகள் ஏற்படவும் வாய்ப்புண்டு.

பொதுவாக மாத ஆரம்பத்தில் கஷ்ட பலனைக் கொடுத்தாலும் வியாழ மாற்றத்தின் பின்னர் நிலைமை சீரடையும், இதுவரை அனுபவித்த கஷ்டங்கள் படிப்படியாக நீங்கி நன்மையுண்டாகும்.

# சோதிடம்

**தை 14 முதல் — மாசி 15 வரை**



[கோட்சாரப் பலன் பொது விதியை அனுசரித்து எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொருவருக்கும் நடைபெறும் திசா புத்திக்கு அனுசரணையாக பலன் தரும். இங்கு இராசி எனக் குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் நின்ற இராசியாகும்.]

கிடைக்காவிட்டால், இடமாற்றத்திற்கு இடமுண்டாகலாம். சக ஊழியரின் ஒத்துழைப்பும், மேலதிகாரியின் ஆதரவும் உண்டு. வியாபாரிகளுக்கு முதலீடுகள் நல்லவருவாய் தராது. வங்கி வசதிகள் கூட தடைப்பட இடமுண்டு. போட்டி பொறாமைகளால் கஷ்டங்கள் ஏற்படும். விவசாயிகளுக்குப் பயிர்ச்செய்கையில் பலதடைகள் ஏற்படும். ஒரு சிலருக்கு காணி தகராறுகள் தலைதூக்கும். கடன் பட்டே காலம் போக்க நேரிடும். மாணவர்களுக்கு சிறிது நன்மையான காலமாகும். புதிய உற்சாகம், முயற்சிக்கேற்ற உயர்வு என்பனவும்



## இடபம்

**கார்த்திகை 2, 3, 4ம் பாதம் ரோகினி, மிருகசீரிடம் 1, 2ம் பாதம்**

உங்களுக்கு இம் மாதம் ஆரம்பத்தில் மிக்க நன்மைகளைச் செய்யும். சூரியன் 9ல் பவனி வருவதால் மனச் சந்தோசம், உல்லாசம், நல்ல பணப் புழக்கம். முந்திய பாக்கிகளே வந்து சேருதல், வழக்குகளில் வெற்றி. என்பன நடக்க வழியுண்டு. வயிறு சம்பந்தமான உபாதைகள் தோன்றவும் கூடும்.

கௌரவம் பாதிப்படையாது. முயற்சிக்கேற்ற வருமானம் கிட்டும். புதிய சொத்து சேரவும் வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்குமேலதிகாரிகளின் பாராட்டு, சக ஊழியரின் நட்பு, பாக்கி கொடுப்பனவுகள் பெறுதல், மன அமைதி என்பன ஏற்படும். கல்வியில் உயர்வு கிட்டும் வியாபாரிகளுக்கு ஓய்வு, உறக்கமின்றி வியாபாரம் நடக்கும். வராது என்ற கடனே வலியவந்து சேரும். விவசாயிகளுக்கு பயிர் செழிப்பு. புதிய பூமி, வாகன பலன் என்பன நிகழும், மாணவர்களுக்கு சிந்தனைச் செறிவு, ஊக்கம், பரீட்சையில் சித்தி, போட்டிகளில் வெற்றி என்பன கிட்டும். பெண்களுக்கு புதிய ஆபரண சேர்க்கை, புத்திரரால் நன்மை, குடும்பத்தில் நன்மையான வைபவம் நிகழ்தல், உயர்ச்சி, என்பன நிகழ்ந்தாலும், கணவன்-மனைவிஉறவு மனக்கசப்பை ஊட்டுவதாகவே இருக்கும். கன்னிப் பெண்களுக்கு காதலில் ஏமாற்றம், மனச் சஞ்சலம் இருந்தாலும், உறவினர், நண்பர்கள் உதவிக்கு வருவர்.

பொதுவாக மாத ஆரம்பத்தில் நன்மை பயக்குவதாக இருந்தாலும், வியாழ மாற்றத்தின் பின் சிறிது சிறிதாக தீயபலன்களும், அலைச்சலும், கூடிக் கொண்டே போகும். தெய்வ சிந்தனையால் சுகம் பெறலாம்.

## மிதுனம்



**மிருகசீரிடம் 3, 4,**
**திருவாதிரை,**
**புனர்பூசம் 1, 2, 3**

உங்களுக்கு இம்மாதம் ஆரம்பத்தில் சோதனைக்குரியதாகக் காணப்படுகிறது. சூரிய பகவான் அட்டமத்தில் நிற்பதால் மனப் பயம், தொடங்கிய கருமங்கள் தடைப்படல், தீக்காயங்கள் ஏற்படுதல், தொழில் ரீதியான மனக்கசப்புக்கள் தோன்றல், என்பன நடக்கும். நட்பு முறிவு, பிரயாணங்களால் நஷ்டம் என்பவற்றிற்கும் பலன் உண்டு. கடன் தொல்லைகள் அதிகரிக்கும். கிட்டிய உறவினரின் இழப்பும், குடும்பத் தகராறும் தலைகாட்டும். உத்தியோகத்தர்களுக்கு பாதகமான மாதம். மாடு மாதிரி உழைத்தாலும் கேட்பது பழிச் சொல்லே. உங்கள் திட்டங்கள் தவிடுபொடியாகும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்காதது மட்டுமல்ல எதிர்ப்புக்களையும் சம்பாதிக்க நேரிடும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் தேங்கும் காலம். எனவே முதலீட்டைக் கட்டுப்படுத்தவும். கடன்படுவதோடு வட்டியே கட்டமுடியாது தத்தளிக்கும் மாதம். பங்கு வியாபாரத்தில் மனவேற்றுமைக்கு இடமுண்டு. நிதானம் தேவை. விவசாயிகளுக்குத் தீமைகள் சிறிது குறைவாகக் காணப்படுகின்றது. லாபம் அதிகமில்லை, அறுவடைக்கு அதிக செலவு. கொடுக்கல் வாங்கலுக்கு உகந்ததல்ல. மாணவர்களுக்கு சோம்பலும் உற்சாகமின்மையும், அசதியும் காணப்படும். போட்டிகளில் வெற்றி கிட்டுவது அரிது. நண்பர்களே பகைவராகலாம். பெண்களுக்கு அதிருப்தி தரும் மாதம். குடும்பத்தில் சச்சரவு, குழந்தைகளால் நிம்மதியின்மை, பொருட்சேதம் என்பன உண்டாம். கன்னிப் பெண்களுக்கு காதல் விவகாரங்களில் கவலை காத்திருக்கிறது.

பொதுவாக மாத ஆரம்பத்தில் கஷ்ட பலன்கள் இருந்தாலும் வியாழ மாற்றம் நிச்சயம் கைகொடுக்கும். சனியின் கோட்சார பலனும் உத்தமமே.

---

*எண்சோதிட நிபுணர்*

**எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்**

---

## கடகம்



புனர்பூசம் 4ம் பாதம்,
பூசம், ஆயிலியம்

உங்களுக்கு இம்மாதம் நன்மையும் தீமையும் கலந்தே காணப்படுகின்றது, சூரியன் 7ல் நிற்பது அவ்வளவு உகந்ததல்ல. அமைதி இன்மை, வீணான பகைமை' மனைவி வழியால் நன்மைகளும், பிரயாணத்தில் பொருள் இழப்பும், கிட்டும். தொழில் ரீதியாக பலமான போட்டிகள் ஏற்படும். பட்டகடன் கொடுக்க முடியாவிட்டாலும், மேலும் கடன்படாதிருக்க வழியுண்டு. தேகாரோக்கியமும் சிறிது பாதிப்படையலாம். உத்தியோகத்தர்களுக்குச் சம்பள உயர்வு கிட்டினாலும் பாக்கிகள் கிட்டாதது போன்றநிலை. பொறாமை காரணமாக பழிவாங்கக் காத்திருக்கிறார்கள். மிக்க அவதானமாக நடக்கவும். பெண் ஊழியர்களினால் தொல்லையுண்டு. வியாபாரிகளுக்கு வியாபார விருத்தி ஏற்பட வாய்ப்பில்லை. உதவிகள் தாராளமாய் கிட்டினும், வருவாய் போதாமலே காணப்படுகிறது. நம்ப நட; நம்பி நடவாதே. ஏமாற நேரிடும், விவசாயிகளுக்கு அறுவடை நல்ல பலனைத் தராது. வாகனச் சேர்க்கைக்கு இடமுண்டு. உறவினர் உதவி கிட்டும். வீண் வம்புகளில் மாட்டாது இருத்தல் நல்லது. மாணவர்களுக்கு அமைதியின்மை, நண்பர்கள் பிரிவு, எதிர்பார்த்த வெற்றி கிட்டாமை, என்பன ஏற்படினும் அதிபர், ஆசிரியர் பாராட்டுக் கிடைக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் நிம்மதி, சிலருக்கு குறைப் பிரசவம், இல்லச் சிறப்பு என்பனவும் கிட்டும். அண்டை அயலில் வாக்குவாதம் தவிர்க்கவும். நா அடக்குதல் மிக்க நல்லது. சிலருக்கு புதுமனை புகவும், அதே நேரத்தில் பொருள் இழப்புக்கும் வாய்ப்புண்டு. கன்னிப் பெண்களுக்கு காதல் துறையில் முன்னேற்றம் காணும்.

பொதுவாக மாத ஆரம்பத்தில் சுமாராக இருந்தாலும் வியாழ மாற்றத்தின் பின் சோதனையும், வேதனையும் தோன்றும், இறை வணக்கமே உகந்த பரிகாரம்.



## சிங்கம்

மகம், பூரம்,

உத்தரம் 1-ம் பாதம்

உங்களுக்கு இம்மாதம் சுமாரான காலமாகும். சூரியன் 6-ல் நிற்பதும், வியாழன் 6-ல் நிற்பதும், சனி 4-ல் நிற்பது உன்னதமான காலமல்ல நீங்கள் எடுத்துக் கொண்ட காரியங்களை சுலபமாக ஈடேற்ற முடியாது. பல சிரமங்களுக்கு மத்தியில் வெற்றி கிட்டும். புதுமனை புகுதல், வீட்டில் மங்களகாரியம் நிகழ்தல், வரவை மிஞ்சிய செலவு, என்பன நிகழும். பகைவர்களின் தொல்லைகள் மனச்சஞ்சலத்தை ஏற்படுத்தும். எதற்கும் அவதானம் தேவை. உத்தியோகத்தவர்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். அலைச்சல் மிகுதியாக இருக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் தோன்றினாலும் எதையும் சமாளித்துக் கொள்வீர்கள். சிலருக்கு வசதியான இடமாற்றமும் கிட்டும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும். வியாபாரிகளுக்கு வியாபாரம் மோசமாகப் பாதிப்படையாது. கடன் தொல்லைகள் அதிகரிக்கும். தொழிலாளர் கீழ்ப்படியாமை, பங்காளியின் ஒத்துழைப்பு என்பன நடக்கும். பணம் புரழும் விவசாயிகளுக்கு நட்டமேற்படாது. ஆனால் அதிக லாபமும் கிட்டாது. காணிச் சிக்கல் கவலை தரும். புதிய வாகனச் சேர்க்கைக்கும் இடமுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் சிறிது முன்னேற்றம் காணப்படினும், மறதி, கவலையீனம் வெற்றிகளைப் பாதிக்கும். நண்பர்கள் சந்தர்ப்பத்தில் உதவி செய்வர். பெண்களுக்கு குடும்ப அமைதி, புத்திரரால் கவலை, ஆபரண சேர்க்கை என்பன உண்டாம். கன்னிப் பெண்களுக்கு காதல் தொடர்புகள் உற்சாகமளித்தாலும் நற்கருமங்கள் கடைசியில் கைநழுவலாம். விவாகப் பேச்சுக்கள் விறுவிறுப்பாக நடைபெறும்.

பொதுவாக ஆரம்பத்தில் சுமாராக இருந்தாலும், வியாழமாற்றத்தின் பின்னர் படிப்படியாக நற்பலன்கள் வந்தடையும்.



## கன்னி

உத்தரம் 2, 3, 4, அத்தம்

சித்திரை 1 2-ம் பாதம்

உங்களுக்கு இம்மாதம் சமபலன்களே காணப்படுகின்றன. சூரியன் 5-ல் நிற்பதும் வியாழன் 6 ற்கு போவதும் ஏற்ற இறக்கங்களைக் கொடுக்கும். மனதில் நிம்மதி இருந்தாலும் ஏதோ ஒருவித கவலை இருந்து கொண்டே இருக்கும். சகோதரர்கள் உதவிக்கு ஓடி வருவர். குடும்பத்தில் ஐக்கியம் நிலவும். கடன் கொடுத்தால் திரும்ப வாங்குவது சிரமம். பணக்கஷ்டங் குறைவாகவே காணப்படுகிறது. பணம் கையில் நிற்காது. மதிப்பு உயரும். உத்தியோகத்தர்களுக்கு விரும்பிய இடமாற்றம், பிரயாணத்தில் இழப்புக்கள் என்பன நிகழும். மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிட்டினாலும் சக ஊழியர் சந்தர்ப்பம் பார்த்து காலைவாரி விடுவார்கள். வேலைப்பழு அதிகரிக்கும் வியாபாரிகளுக்கு முன்னேற்றம் காணவிட்டாலும் பொருள் நட்டமில்லை. பழைய பாக்கிகள் வசூலித்தாலும், சிறு சிறு சச்சரவுகள் தலைகாட்டவே செய்யும். வியாபார விஸ்தரிப்புக்கு உகந்த காலமல்ல. விவசாயிகளுக்கு பயிர் கைகொடுத்தாலும் வீண் செலவுகள் கையைக் கடிக்கும். கால்நடைகள் நல்ல பயன் தரும். அயலாருடன் அவதானம் தேவை. வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கு அதிக பிரயாசம், அதிக செலவு ஏற்பட்டாலும் கல்வியில் முன்னேற்றம் காணப்படும், எல்லா நண்பர்களையும் நம்பி நடத்தல் பிரச்சினையில் முடியலாம். அவதானம் தேவை. பெண்களுக்கு குடும்பச் சண்டைகள் தோன்றினாலும். புத்திரரால் நன்மையுண்டு. சிலருக்கு கர்ப்பச் சிதைவும் ஏற்படலாம். கன்னிப் பெண்களுக்கு காதல் அரும்ப வாய்ப்புண்டு. விவாகப் பேச்சுக்கள் சிறிது முன்னேற்றம் காட்டும்.

பொதுவாக ஆரம்பத்தில் நன்மையாக இருந்தாலும், வியாழ மாற்றத்தின் பின்னர் எதிலும் கஷ்டங்கள், தடைகள், மனவிரக்தி என்பன உண்டாகும்.

## துலாம்



சித்திரை 3, 4-ம் பாதம்

சுவாதி, விசாகம், 1, 2, 3,-ம் பாதம்.

உங்களுக்கு இம்மாதம் கடந்தகாலத்தை விட விசேடமானதாக இருக்கும். சூரியன் 4ல் நிற்பதும், ஏழரைச் சனியாய் இருப்பினும் 2 ல் இருப்பதும் சுப பலனையே காட்டுகின்றது. நினைத்தவை கைகூடல், எதிர்பாராத பணவரவு, புதிய வீடு, காணி, வாகனம் என்பன வாங்குதல் ஆகிய நற்கருமங்கள் நடைபெற வாய்ப்புண்டு. அந்தஸ்து உயரவும், நண்பர்கள் உறவினர்கள் ஒத்தாசை வழங்கவும் உகந்த காலம். திடீர் அதிர்ஷ்டத்திற்கும் வழியுண்டு. உத்தியோகத்தர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிட்டுதல், வேலைப்பழு குறைதல், மேலதிகாரிகளின் பாராட்டு, உத்தியோக உயர்வு அல்லது பழைய சம்பளப் பாக்கிகள் கிடைத்த

லும் சிலருக்கு உண்டாம். வெளியூர்ப் பயணங்களுக்கும் இடமுண்டு. வியாபாரிகளுக்கு வியாபாரத்தில் நல்லதொரு திருப்பம் உண்டு. வராதென்றிருந்த கடன் கூட வந்துசேரும். வியாபார விஷ்தரிப்பிற்கு உகந்த மாதம். முதலீடுகள் இலாபத்தைத் தரும். விவசாயிகளுக்கு விவசாயத்துறையில் வெற்றி கிட்டும். பயிர் செழித்துப் பஞ்சம் போக்கும். வாகனம், கால்நடைகள் சேர்தல், புதிய முயற்சிகள் பலிதமடைதல் உண்டாம். மாணவர்களுக்கு கல்வியில் உற்சாகம்; விளையாட்டுக்கள் போட்டிகள் ஆகியவற்றில் வெற்றி கிட்டும். ஆசிரியர்களின் பாராட்டையும் நண்பரின் மதிப்பையும் பெறுவர். பெண்களுக்கு குடும்ப சுகம், புத்திரநன்மை ஆடை ஆபரண சேர்கை என்பன நிகழும். வீட்டில் சுபகாரியம் நடத்தல், தாராள பணப்புழக்கம், மன நிம்மதி என்பனவும் கிட்டும். கன்னிப் பெண்களுக்கு காதலில் வெற்றி, திருமணப் பேச்சுக்கள் கைகூடல் மனதுக்கிசைந்த திருமணம் என்பனவற்றிற்கு வாய்ப்புண்டு.

பொதுவாக இம்மாதம் அதிஷ்டமான தாகவே காணப்படுகின்றது. வியாழ மாற்றமும் பாதகமில்லை



## விருச்சிகம்

**விசாகம் 4-ம் பாதம்**

அனுஷம், கேட்டை

உங்களுக்கு இம்மாதம் விசேசமானதாகத் தென்படவில்லை. சூரியன் 3-ம் நிற்பதும், அவரோடு கூட வியாழன் நிற்பதும், சனி ஜென்மத்தில் நிற்பதும் மன வேதனை. சண்டை சச்சரவுகள், விபத்துக்கள், தூரதேச சஞ்சாரம் என்பவற்றைக் கொடுக்கும். அலைச்சல் மிகுந்த மாதம் இன பந்துக்களைக்கூடப் பகைக்கவேண்டி வரும். நண்பர்களுடன் மனவேறுபாடு உண்டாகும். கடன்பட நேரிடும். குடும்பத்தில் அமைதி குலையும். தேகாரோக்கியம் பாதிப்படையும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரியின் சீற்றம் அநாவசிய பொறுப்புக்களை ஏற்றல். மறைமுக எதிர்ப்புக்கள், எதிர்ப்பாலாரினால் இடைஞ்சல். தண்டனை இடமாற்றம், என்பன நடக்க இடமுண்டு. நாவடக்கமாய் இருத்தல் உகந்தது. வியாபாரிகளுக்கு நஷ்டமடைய நேரிடும், பங்கு வியாபாரத்தில் பிளவு தோன்றும். கடனுக்கு மேல் கடன்பட நேரிடும். செலவுகள் கட்டுக்கடங்காது. உங்களுக்கு கீழ் வேலை செய்பவரே உங்களை எதிர்ப்பர். மிக மிக அவதானம் தேவை. விவசாயிகளுக்கு பலவித கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டி வரும். நீங்கள் நம்பியிருக்கும் பயிர்கள் காலைவாரிவிட நேரிடும். காணிச் சண்டையில் காலம் கழியும். சில பொருட்களை நட்டத்திற்கு விற்கவும் வேண்டிவரும். மாணவர்களுக்கு ஊக்கமின்மை, சோம்பல், ஞாபகமறதி என்பன உண்டாகும். பெண்களுக்கு குடும்பச் சண்டையால் பிரிவினைகூட ஏற்படலாம். கணவனின் கோபத்துக்கு ஆளாக நேரிடும். கையில் பணம் தங்காது மன நிம்மதி கெட்டுவிடும். கன்னிப்பெண்களுக்கு அவப்பெயர் கேட்கவும்; ஏமாற்றமடையவும் திருமணங்கள் தடைப்படவும் சொல்லப்படுகின்றது.

பொதுவாக மிகவும் துரதிர்ஷ்டமான காலப்பகுதியாகும். வியாழமாற்றத்தின் பின்னர் சிறிது நன்மைகள் ஆங்காங்கே ஏற்படலாம். இடைவிடாத இறைவணக்கமே சாலச்சிறந்தது.



## தனுசு

மூலம், பூராடம்

உத்தராடம், 1-ம் பாதம்

உங்களுக்கு இம்மாதம் நன்மைகளோடு கலந்த தீமைகளும் தென்படுகின்றது, சூரிமன் 2-ல் நிற்பதாலும் குருவும் சேர்ந்திருப்பதாலும், ஏழரைச்சனி முதற்கூறாக இருப்பதாலும் நன்மை தீமைகள் கலந்தே காட்டுகின்றது. வருவாய் பெருக வழி கிடைத்தவுடன் செலவுக்கும் வழி தானாகத் திறக்கின்றது. இனசன விரோதம் ஏற்படும். மனச்சஞ்சலங்களுக்கு இடமுண்டு. புத்திரரால் கவலையுண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு மேலிட உதவிகள் கிட்டும். பொருளாதார முன்னேற்றம் காணப்படினும் கொடுக்கல் வாங்கலில் சங்கடம் உண்டாகும். சக ஊழியர் ஒத்துழைத்தாலும் வெளியாரின் தலையீட்டால் பாதிப்பும் உண்டு. வியாபாரிகளுக்கு விமர்பாரம் நடக்கும். கீரைக்கடைக்கு எதிர்க்கடைபோல போட்டிகள் மிகுந்திடும். வங்கிவசதிகள் ஏற்படும், ஆனால் கொடுத்த பணம் திரும்பிவராது. வியாபார விஸ்தரிப்புக்கு உகந்ததல்ல. விவசாயிகளுக்கு கால்நடை இழப்பு ஏற்படும். காணித்தகராறில் வெற்றி கிட்டும். அதிகபிரயாசை தேவை, மாணவர்களுக்கு ஊக்கத்தோடு கல்வியை ஆரம்பித்தாலும் சில தடைகளைத் தாண்ட வேண்டியும்வரும். விளையாட்டுத் துறையில் வெற்றி கிட்டினாலும் காயங்கள் ஏற்படவும் பலனுண்டு. பெண்களுக்கு குடும்ப சுகம். இருந்தாலும் மனதில் ஒருவித கவலை இருந்தேதீரும். ஒரு சிலருக்கு குறைப்பிரசவம் ஏற்படவும் வாய்ப்புண்டு. கன்னிப் பெண்களுக்கு கெட்டபெயர் தேடிவரும்,

மொத்தமாக ஏற்ற இறக்கமான காலமாகும். வியாழ மாற்றமும் விசேடமானதல்ல. சனீஸ்வரனுக்கு அர்ச்சனை முதலிய செய்யவும்.



## மகரம்

**உத்தராடம் 2, 3, 4-ம்கால்**
**திருவோணம்,**
**அவிட்டம் 1, 2-ம் கால்**

உங்களுக்கு இம்மாதம் நன்மை பயக்குவதாக அமைந்துள்ளது. சூரியன் ஜென்மத்தில் குருவோடு இருப்பதோடு, ஜென்மராசிக் கதிபதி 11-ல் இருப்பதால் பலவித நன்மைகள் தானாகவே கிட்டும். உங்கள் அந்தஸ்து உயர்வடையும், பணம் புரளும். குடும்பத்தில் சுபகாரியம், உறவினர்-நண்பர் ஒத்தாசை, அரச சன்மானம், வெளிநாடு செல்ல வாய்ப்பு கைகூடல் என்பன நிகழும். உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம், பதவி உயர்வு, என்பன உங்களைத் தேடி வரும். பணிமனையில் சந்தோசம், சக ஊழியரின் ஆதரவு; வரவேண்டிய சம்பளப் பாக்கி என்பன வந்து சேரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் உச்சஸ்தானத்தை அடையும். வியாபார விஸ்தரிப்புக்கு ஏற்ற காலம். விவசாயிகளுக்கு அறுவடை மிகுந்த வருமானத்தைத் தரும் விவசாய விஸ்தரிப்பு இடம்பெறும். மாணவர்களுக்கு சிந்தனை விரிவடைதல், நல்ல நண்பர் சேர்க்கை, பெண்களுக்கு குடும்பத்தில் அமைதி, சுகம், நிலவும் புத்திர சுகம் உண்டு. கன்னியருக்கு நினைத்தவை கைகூடல், நல்ல திருமணம் அமைதல் உண்டாம்.

மொத்தமாக பார்த்தால் அதி உன்னதமான காலமாகும். வியாழமாற்றத்தின் பின்னர் மேலும் நன்மைகள் ஏற்படும்.

## கும்பம்



**அவிட்டம் 3, 4ம் கால்,**
**சதயம் பூரட்டாதி**
**1, 2, 3ம் கால்**

உங்களுக்கு இம்மாதம் ஏமாற்றமுடையதாகவே காணப்படுகின்றது. சூரியன் 12ல் வியாழனுடன் இருப்பதும், சனி 10ல் இருப்பதும் மன விரக்தி, எதிலும் ஏமாற்றம், என்பன உண்டாம். பணநெருக்கடியால் பொருட்களை விற்றல் நடக்கும். வீண்பழி கேட்கவும் நேரிடும். குடும்பப் பிரச்சினைகள் தலைதூக்கும். சிலர் பிரிந்து வாழவும் இடமுண்டு. உத்தியோகத்தர்களுக்கு சோதனைக் காலம். அவதானமாய் இருங்கள். வசதி குறைந்த இடத்திற்கு திடீர் இடமாற்றம். ஊழியரின் பகைமை, என்பனவும் உண்டாம், வியாபாரிகளுக்குக் கடையை இழுத்துப் பூட்டினால் என்ன என்று தோன்றும். தொழிலாளர் எதிர்ப்பர். கடனுக்கு மேல் கடன்பட நேரிடும். அநாவசியமாக எதிலும் தலையிட வேண்டாம். விவசாயிகளுக்குப் பயிர் அழிவு. திடீர் திடீரென கால்நடைகள் இழப்பு, என்பன இடம்பெறும். மாணவர்களுக்கு அசதி, சோம்பல் என்பன ஆட்கொள்ளும். சகமாணவருடன் மனஸ்தாபம் ஏற்படும். பெண்களுக்குக் கணவனிடத்தில் சந்தேகம், களவுகொடுத்தல், நகை அடைவுக்குப் போதல் என்பன நிகழும். வாயடக்கமாய் இருத்தல் சிறந்தது. கன்னிப் பெண்களுக்கு அவப்பெயர் கேட்டல், திருமணம் தடைப்படல் உண்டாம்.

மொத்தத்தில் தீங்கான காலமாகும். வியாழமாற்றத்தின் பின்னரும் நிலைமை சீரடையாது. இறை வணக்கமே சிறந்த பரிகாரமாகும்.



## மீனம்

**பூரட்டாதி 4-ம் பாதம்,**
**உத்திரட்டாதி, ரேவதி**

உங்களுக்கு இம்மாதம் நன்மை உடையதாக இருக்கின்றது. சூரியன் 11-ம் வீட்டில் வியாழனுடன் கூடி இருப்பதுவும், சனி 9ல் இருப்பதும் பலவித நற்காரியங்கள் ஏற்பட வழிபிறக்கும். எதுவித கஷ்டமுமின்றி வாழ்க்கை ஓடும். தூரதேச நன்மைகள், புதிய வாகன சேர்க்கை, சமுதாயத்தில் நல்ல மதிப்பு, என்பன உண்டாகும். கணவன்-மனைவி உறவில் இறுக்கம், ஸ்தலயாத்திரை ஆகியனவிற்கும் வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு காரியாலயத்தில் செல்வாக்கு உயரும். சக ஊழியர் சகாயம் செல்வர். அந்தஸ்து உயர்ச்சி உண்டு. வியாபாரிகளுக்கு காரியசித்தி, வங்கி வசதிகள், என்பன கிட்டும். பழைய கடன்கள் வசூலாகும். விவசாயிகளுக்கு பயிர் வளம் குன்றுது. விவசாயத்திற்கு தொழிநுட்ப வசதிகள் கிட்டும். கால்நடை வளர்ப்பு நல்ல பலனைத் தரும், மாணவர்களுக்கு கல்வியில் வளர்ச்சிகாண வாய்ப்புண்டு. அதிபர், ஆசிரியரின் பாராட்டு உண்டாம். பெண்களுக்கு கணவனின் உயர்வு புத்திரரின் நற்செய்தி, இனசன கொண்டாட்டம், என்பன உண்டாம். கன்னியர்களுக்கு காதல் கனிந்து வரும்.

மொத்தமாகப் பார்த்தால் விசேசமான காலமாகும். வியாழ மாற்றத்தின் பின்னர் சிறிது தீமைகளும் இடம்பெற வழியுண்டு.

சுபம்!

"அமிர்தகங்கை" சாயிபாபா அட்வர்டைசிங் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணத்தில் உள்ள அபிராமி அச்சகத்தில் 14-1,86 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி 22437 கௌரவ ஆசிரியர்: செம்பியன் செல்வன்



உங்கள் முதலீட்டுக்கு
மாதாந்தம்
30%
வட்டி
100%
பாதுகாப்பு
LANKA
யாழ். தமிழர் நிதியம்.
140, நாவலர் வீதி - யாழ்ப்பாணம்.
(மனோகரா தியேட்டர் அண்மையில்.)
22437